நன்னூற் சுருக்கம்:

உரை பாடம்.

ABRIDGMENT

OF

THE NANNÛL;

WITH

THE ORIGINAL TEXT,

EXPLANATIONS, EXAMPLES, AND NOTES,

AND

AN APPENDIX

CONTAINING A TABLE FOR PARSING,
EXAMPLES PARSED, AND THE ANALYSIS OF UPWARDS OF ONE HUNDRED
WORDS OF MORE THAN ORDINARY DIFFICULTY, SELECTED
FROM THE RAMAYANAM, NALADI, CURAL, AND
NIDI-NERI-VILAKKAM.

BY

G. P. SAVUNDRANAYAGAM PILLAI, B. A.
VERNACULAR TRAINING MASTER, GOVERNMENT NORMAL SCHOOL, MADRAS;
FORMERLY HEAD MASTER, NORMAL SCHOOL, CHEYORE, COIMBATORE.

SECOND EDITION—REVISED AND IMPROVED.

T
2499

MADRAS:
THE AMERICAN MISSION PRESS.
1864.

K. R. RAGHUNATHA RAO.

நன்னூற் சுருக்கம்:

உரை பாடம்.

முன்பு கோயம்புத்தூர் ஜில்லாவைச்சேர்ந்த

சேயூர் நார்மல் ஸ்கூல் தலைமை உபாத்தியாயர் ஆயும்,

இப்போது

சென்னபட்டணத்துக் கவர்ண்மெண்ற் நார்மல் ஸ்கூலில்

சுதேச பாஷா போதனை முறை பயிற்றும்

உபாத்தியாயரும்,

பி. எ. (B. A.) என்னும் பட்டம்

பெற்றவரும் ஆகிய

க. பே. சவுந்தரநாயகபிள்ளை

அவர்களால்

நன்னூலில்

சிறுவர்களுக்குப் பயன்படும்படி

எடுத்த இன்றி அமையாச் சூத்திரங்களும், அவற்றிற்குச் செய்த வெள்ளுரையும்,
பதங்கட்கிலக்கணஞ்சொல்லும் முறைகாட்டிய அட்டவணை, இலக்கணங்கூறிய உதாரணங்கள்,
இராமாயணம், நாலடி, குறள், நீதிநெறிவிளக்கம், என்னுஞ் செய்யுட்களிலெடுத்த
நூற்றுக்கதிகமான கடினபதங்களின் முடிபும், ஆகிய
இவைகள் அடங்கிய அநுபந்தமும்.

இரண்டாம் பதிப்பு.

இஃது

சென்னபட்டணம்

அமெரிக்கன் மிசியோன் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

௲௮௱௯௪.

OPINIONS

ON

THE ABRIDGMENT OF THE NANNUL.

FROM G. S. ARIANAYAGAM PILLAY, ESQ., B.A.
Deputy Inspector of Schools in the Districts of Tanjore and South Arcot.

(Extract from a letter to the Author, dated Mayaveram, December 24th, 1863,)

"The want of an Abridgment, such as yours, had been long felt when the first edition of your little book appeared; and almost every Tamil Pundit of my acquaintance, who had any experience in the work of teaching, had observed to me, that the most effectual way of teaching the Nannúl was by a judicious selection of nearly half the sútrams Independently of the consideration of time, (important to young men situated as those are who receive their education in the Government and other Public Schools, in which hardly more than a tenth part of the time could be devoted to Tamil Grammar, in justice to the claims of various other subjects demanding their share of close attention,) the difficulty of grasping the whole of the Nannúl as a system, and of distinguishing the really *working part* of it from sútrams of a secondary importance, is a point rendering such a selection highly desirable." * * * * * * *

"The Appendix to the second edition has supplied another great want. The Table for Parsing is valuable as a general guide; the specimens which follow, both exemplify the general directions so as to assist the student to reduce them to practice, and carefully note such intricacies and anomalies arising out of each particular instance, for which, from the nature of the case, no general direction can be given. The usefulness of the Table and of the specimens of parsing, will be properly appreciated by those only who have had occasion to notice the usual mechanical method, pursued in schools where the Vernaculars are under the immediate charge of the "Pundits," as well as the Anglicised plan of others, who, led by a servile imitation of the rules which govern a foreign tongue, attempt to foist in peculiarities unheard of in the

annals of Tamil Grammar, to the neglect of idioms and other essential points characteristic of our language. The fault of the former is, as I apprehend, a too exclusive attention to Etymology; whilst the failing of the latter consists in being satisfied with a meagre Syntax, ridiculously outlandish in some of its features: in the plan of the Appendix a fair share of attention has, in my opinion, been given both to Etymology and genuine Tamil Syntax."

"I would urge on you the desirableness of printing a few hundred copies of the Appendix separate; I have no doubt this would find a readier sale than even the Abridgment."

FROM THE REV. H. BOWER.

MADRAS, 14*th December*, 1863.

To

G P. SAVUNDRANAYAGAM PILLAI, B. A.

Vernacular Training Master, Government Normal School.

MY DEAR SIR.

I have examined your 2d Edition of the Abridgment of the Nannul, and find it greatly improved. Though a few of the *Sutrams* which were in the 1st Edition are omitted, yet I find other more essential ones added, which considerably increase the size and value of the work. The Appendix, containing examples of Parsing, and Analysis of words, is new, and will be very useful to beginners.

The Nannul itself is an able work, and is the general text book, and the great authority for the Institutes of the Tamil language. As a Teacher of considerable experience you must know what parts of the work are best calculated to instruct the Tamil student; and therefore your Abridgment will not only be used in the School of which you are a successful Teacher, but I am sure will be adopted in other Educational Establishments.

I am,
My dear Sir,
Yours truly,
H. BOWER.

FROM T. GOPALA ROW, ESQ., B.A.

Assistant Master in the Provincial School, Cumbaconum; Formerly Acting Professor of Mathematics in the Presidency College.

To

G. P. SAVUNDRANAYAGAM PILLAI, ESQ., B A.

Vernacular Training Master, Government Normal School, Madras.

CUMBACONUM, 20*th October*, 1863.

MY DEAR SIR,

I am glad to hear that you are about to issue a second edition of your Abridgment of the Nannul. It is a judicious selection of the most valuable sutrams, and gives to the student, in a small compass, and without the ridiculous crabbedness of the ordinary commentaries, the best parts of the best work on Tamil Grammar. I consider it as altogether a very useful production.

Yours very truly,

T. GOPALA ROW.

CUMBACONUM, 19*th December*, 1863.

MY DEAR SIR,

The second edition of your Nannul has just reached me while on the point of setting off for Tanjore, not to return till the re-opening of our school in January. I am sorry that I have no time to look through it. I have just glanced over the Appendix, but what I have seen is sufficient to justify the opinion that it is a most important and valuable addition. The appearance of the book, the paper and the type, are all that can be desired, so that I have no doubt that the second edition will prove not only a more useful but also a more agreeable companion to the young student.

Yours very truly,

T. GOPALA ROW.

From Walter Joyes, Esq.

(Extract from a letter to the Author, dated Madras, January 1st, 1864.)

"I have been very much pleased with the edition of the Nannul you have sent me, the second of its kind, I find The Sutrams have been so well selected, and the work has been so well got up, that I have very little doubt it will prove highly useful; and I congratulate learners on the comfort with which they might now study what but a short time ago would have involved considerable difficulty. The Examples you have given are also very wisely selected, and intelligible; and the Appendix with its specimens of parsing and separation of words into parts, is quite a novelty, and forms an additional recommendation of no ordinary kind."

From J. Moses, Esq.

Head Master of the Government Normal School, Vellore.

The study of Tamil Grammar is often neglected under a false apprehension that it is difficult or impossible. And a student who begins to read the subject is, at the very threshhold, bewildered by the voluminous and obscure commentaries and the barbarous examples (which, for the most part are, purposely I believe, selected from authors who should have been gladly consigned for ever to the dark region of oblivion,) rather than discouraged by the difficulty of the subject or the style in which the Grammar is written. To establish literary merit or superiority by rendering a subject as obscure as possible, by means of unintelligible expressions or perplexing combinations of words, seems to have been the leading principle of the Indian authors. And natives who have had the advantage of European education, would do well to adopt the opposite course, and endeavour to throw as much light as possible upon the literature handed down to them by these authors. This is, evidently, the design of the author of the Abridgment of the Nannûl.

This small work, while it presents the Nannûl in its poetic dignity and beauty, has divested it of those parts which are inconsistent with the character of an elementary work, and are, on this

score, ill-adapted to beginners. In point of arrangement, simplicity, and completeness, this book is unrivalled by any other work on the subject.

The second edition contains portions which are of very great importance and give a new feature to the work. In it, some additional sutrams are inserted; the most important of these are treated of in detail; sutrams from standard authors are quoted to explain some difficult points; and specimens of parsing, and analysis of words, are given in the Appendix.

There is every reason to hope that this edition will meet with success commensurate with the labor, care, and time bestowed upon it.

J. MOSES.

Vellore, Dec. 21st, 1863.

FROM C. PHILLIPS, ESQ.

Acting Head Master (Lately Assistant Master) of the Zillah School, Salem.

(Extract from a letter to the Author, dated Salem, 21st December, 1863.)

"I have closely and carefully examined the first edition of the Abridgment of the Nannûl, and have also carefully run through the second, and am able to inform you that the Manual is very well adapted to be introduced into Schools as a class book in the place of the Nannul itself. The Abridgment contains all that is requisite to be learnt in Tamil Grammar. Whatever is contained in the original work over and beyond, is only calculated to puzzle and perplex the minds of youths. It is, indeed, after all useless to burden the minds of the young learners with those interminable nice and perplexing subtleties, which their young minds are not able to grasp or to comprehend. They may, as you have done in your selection, be safely left out, as almost of little use. The selections you have made in your Nannûl, are indeed very good, and admirably adapted to exhibit the whole of the Nannûl within a short compass."

ADVERTISEMENT

TO THE

FIRST EDITION.

THE Nannúl being too large a work to be gone through in even two or three years by a class which has other subjects besides Tamil to read, I have invariably found it necessary, in teaching the book, to select for study the most important sútrams only.

This selection has been gradually enlarged, with the view of enabling students to acquire a knowledge of as many as possible of the most necessary and useful sutrams, without, at the same time, suffering materially from ignorance of those not brought before them. It is now given to the public in the shape of an Abridgment, with Explanations, Examples, and Notes:—I may add, that to bring the subject within the comprehension of all, has been the object steadily kept in view throughout.

G. P. S.

GOVT. NORMAL SCHOOL, MADRAS,
June, 1861.

ADVERTISEMENT

TO THE

SECOND EDITION.

The demand for this Abridgment having increased, both in this Presidency and in Ceylon, and the last edition having been sold, I have prepared this, bestowing considerable care and labour on the improvement of the book, with the view of making it a useful and complete Abridgment of the standard Tamil Grammar, the Nannúl. As the use of this book for the last two years in the Normal School, has suggested many improvements, a good number of important sútrams, explanations, notes, and examples from authors of repute, have been added; and a few sútrams with their explanations, &c., considered to be unimportant, rejected.

Parsing in Tamil being not properly attended to in schools, as an important exercise, I have considered it necessary to make the first attempt to arrange, in a tabular form, the different heads with every thing that is necessary to be stated, and thus assist masters in conducting parsing exercises in their classes. The ordinary Munshís I have met with, both in the Presidency and elsewhere, except some of the best of them, I have found to be scarcely able to parse systematically; and, this need not be wondered at, as neither the books they were taught, nor any of those now in use in schools, treat of this exercise; and,

consequently, whenever parsing is attempted in a class, in schools where Tamil is taught by such Munshís, without the assistance of Masters who are conversant with the best method of teaching the language, the result is a failure, as neither the teachers nor the boys are acquainted with the mode of conducting it. To such teachers as well as boys in schools generally, the table given in the Appendix will, it is hoped, be highly useful; I believe that it will also be of immense service to those who have been trained, and are now in charge of schools, since some of them have stated to me the necessity there is for one of the kind, as, in their course of teaching, they have found the indispensableness of such a guide. The method of making use of this table, is shewn in the examples parsed.

To analyze Tamil divisible words, is no easy matter, as all those acquainted with the language, will acknowledge. There are not a few points to be considered in all cases. One word may have a euphonic increment, another may not possess it; in one, the increment may occur as (சாரியை) *sáriai*, and in another, as (எழுத்துப்பேறு) *eluttuppéru;* in some words, we may have *sandhi* (சந்தி) to be accounted for, while in others, *vikáram* (விகாரம்) alone may occur; and, to enhance this difficulty of finding the increment, *sandhi*, &c., there are words of which to find the roots (பகுதி) *pakuthi*, requires no ordinary amount of care and knowledge. In order, therefore, to assist teachers and boys in breaking up words into their component parts, I have given, in the Appendix, the analysis of upwards of one hundred words of more than ordinary difficulty, selected from the Rámáyanam, Náladi, Cural, and Níti neri vilakkam.

I hope this edition is such a complete and improved Abridgment of the Nannúl, that, should there be a demand for a third edition, I shall have no necessity to add any thing new, but simply order a reprint of this.

Here, I must express my deep obligation to the DIRECTOR OF PUBLIC INSTRUCTION, who kindly encouraged my undertaking, by ordering a large number of copies, before the book was sent to the press, thus relieving me, to a great extent, of the pecuniary burden which, without his aid, would have been entirely thrown on my shoulders. If it had not been for his kindness, I could have only brought out a small edition, which could not have been got up so well, so cheaply, nor in so much improved a form, as the one now presented to the public.

G. P. S.

GOVT. NORMAL SCHOOL, MADRAS,
September, 1863.

CONTENTS.

அடக்கம்.

I-வது: எழுத்ததிகாரம்.

பக்கம்.

1-வது: எழுத்தியல் 1
2-வது: பதவியல் 13
2-வது: உயிரீற்றுப் புணரியல் 22
4-வது: மெய்யீற்றுப் புணரியல் 36
5-வது: உருபுப் புணரியல் 45

II-வது: சொல்லதிகாரம்.

1-வது: பெயரியல் 53
2-வது: வினையியல் 76
3-வது: இடைச்சொல்லியல் 90
4-வது: உரிச்சொல்லியல் 97
5-வது: பொதுவியல் 98

அநுபந்தம்.

பதங்கட்கு இலக்கணஞ் சொல்லும் முறைகாட்டும்
அட்டவணை 5
இலக்கணங் கூறிய உதாரணங்கள் 8
பகுபத முடிபு 11
த்திர அகராதி 25

ERRATA.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
17	2, 3	வல்லொற்று மெல்லொற்றுவதால்	மெல்லொற்று வல்லொற்றுவதால்
32	18,19		தகர்கள்
35	11	வல்லினம் மெல்லினம் ஆதல்	மெல்லினம் வல்லினம்
61	19	காரணச் சிறப்புப்பெயர்	காரணப் பொதுப்பெயர்
105	21	மயங்குந்	மயங்குந

சிறப்புப் பாயிரம்.

புரசை

அஷ்டாவதானம் சபாபதி முதலியார்

இயற்றிய

நேரிசையாசிரியப்பா.

மதிதருபுலவருண் மணங்கமழ்மலரெனு
முதிர்தமிழ்நிலையினுண் முன்னுறுமுதலெனு
உருப்பந்தவிர்பொரு ளுள்ளனபலவுள்
விருப்பங்கிளர்ந்துள விழுமியதொன்றெனு
வாசமலிந்துள வகைகளுளரசெனு
நேசத்தவத்துறை நிலத்துட்சிரமெனு
நல்லோரவையு ணவமாமணியெனுச்
சொல்லாற்பொருளமை தொடையானுவலத்
தருந்தவப்பொதியத் தடங்கிரிக்குரவன்
சகந்தொழுமுனிவன் றந்தருண்முன்னூல்
வழிமுறைபிறழா மாண்பமைநூலுங்
கழிபெருஞ்சீர்த்தொல் காப்பியமுதலிய
முற்காலியற்றிய பற்பலநூல்களும்
பிற்காணிறைவு பெறவுணர்வரியவென்
றந்நாட்சனகை யருந்தவனளித்த
நன்னூற்செறிபொரு ணவின்றிடிலலகில
வாங்கதுகூரிய ரல்லார்க்கெளிதன்
றேங்குமிளைஞருக் குட்டெளிவுறுத்துவான்
சுருக்கியுட்பொருள்வகை துகன்றவிளங்கத்

திருக்கிலுதாரணஞ் சேர்த்தித்தருகென
விச்சைகூறிரு ரினிதுளங்களிப்பப்
பச்சிளஞ்சாலியும் பயில்பைம்பூகமுங்
கன்னலுந்தாழையின் காட்சியும்போன்மென
மன்னுறநின்றெழீஇ வளர்ந்துசேயிழையார்
கற்பினுவமைமங் கலநாண்கழுத்தி
னொப்புமைதோற்றியுல வாவளங்கெழூஉந்
திரைகடல்சுலவிய சிறப்புறுதீபந்
தரைமிசைப்பிறிது தன்னினுமில்லென
விசைக்குமிசைக்கணியையு மியாழ்ப்பாணத்
தசிப்பருங்கடவு ளருண்மலிதேவ
குலம்பலதுதைந்த கோதிலாவென்றி
வலன்செறிமாட்சி வண்ணைமாநகரான்
ஆதிபரன்சுதன் ஆவியாமூன்றும்
ஓதிடிலொன்று மொருதனிமுதல்வன்
திருவடிபழிச்சுஞ் செம்மைசேர்புத்தி
யுருவினன்கபிரியே லுத்தமனீன்ற
மைந்தன்பெருங்கலை வாணர்கணேயன்
பைந்தமிழுங்கிலோ பாஷையின்மிக்க
பகோளம்வீசம் பகர்திரிகோணங்
ககோளமளப்பருங் கனபூகோளம்
இவைபோல்வனவெலா மெளிதினன்குணர்ந்தோன்
பவந்தெறுநன்னெறி படர்சுகுணாகரன்
சவுந்தரநாயத் தகைமைசேர்கற்பினன்
தொகுத்திடுநன்னூற் சுருக்கமெனப்பெயர்
பகுப்புறநிறீஇயொண் பனிமதிகடுப்ப
மறுப்படாத்தேயாமாண் பினர்மதிபோற்
பெறத்தகுநீடொளிப்பெரும் புகழ்திசைநிறீஇ
யெவ்வமினீதி யிளமையிற்கல்லென
ஔவையார்முன்னரே யருண்முறைபுலங்கொளப்
படிதருங்கல்வி பயில்குநர்
நெடிதுதம் முளத்து நிலைபெறுத்தினனே.

சென்னபட்டணத்துக்

கவர்ண்மெண்ற் நார்மல் ஸ்கூலில்

தமிழ்ப் பண்டிதராகிய

கோ. இராசகோபால பிள்ளை

அவர்கள் பாடிய

நிலைமண்டிலவாசிரியப்பா.

பொன்மலி குவட்டுப் பொதியிலி னமர்ந்து
தொன்மலி பதினெண் கூற்று மொழிகளுள்
தன்னைப் பிகந்த தண்டமிழ்க் கடறரு
துன்னிய சீர்த்திசேர் தொன்மைமா தவத்தோன்
இருளற வுணர்த்திய வியன்முழு துணர்ந்த
இருமூன் றிரட்டி யிரும்புல வோர்களில்
தலைமை நனிபெறூஉம் புலமை யவனியம்
பொல்காப் புகழ்புனை தொல்காப் பியவழி
யாப்புறு நன்னூற் காப்பிய மாண்பொருள்
சிறாஅ ருளங்கொளப் பெறுமொன லாயதால்
தொகுத்துச் சூத்திரம் வகுத்தவற் றுட்பொருள்
தெற்றெனக் காட்டொடு தெரித்துச் சுருக்கெனக்
கற்றனர் பன்முறை கழறின ராக
இந்நூ லொக்கும தெந்நூ லுளதென்
றுரைக்க நன்னூற் சுருக்கமொன் றியற்றினன்
கமஞ்சூற் சங்கங் கடிநறுஞ் செங்கேழ்
இமஞ்சால் கமல மிவர்ந்தின் றராளம்
வெண்ணிலா வெறித்தல் வியன்பொலி கற்பநா
டெண்ணிலா வளனிதி னூங்கில தெனவசி

கொள்வது நிகர்க்குங் குண்டுநீர் மடுக்களும்
தெள்விளித் திவவியாழ்த் திறத்துனை வளநவில்
ஆங்கு மடநலா ரமுதுகு குதலைக்
கேங்குபு மாழ்கி யெரிபுகல் கடுப்பச்
சந்தக் கருங்குயி ருவின் றுறைதரு
செந்தளிர் கஞலிய தேமாப் பொதும்பரும்
இருசுடர்க் குடைந்தவல் லிருள்பல வுருக்கொளீஇ
உருகுகா தலியளை யுலக்குதல் சிவணச்
சாராப் பொதுளிய தண்ணிய தேமலர்
காராக் கறிக்குங் கண்ணகன் பழனமும்
இன்னன பிறவு மன்னிவான் செல்வம்
சுற்றுமெண் ணான்கு தொகைவிரி யாலயப்
பற்றுடைத் தாகிப் பரன்சுத னாவியாம்
மும்மையு மொருமையா முழுமுத லருணிறை
செம்மைவே தாகமஞ் செப்புளா ஈடைப்பிடித்
தத்தக வொழுகா வகம்புற மொருப்படூஉம்
வித்தகர் வதிய விளங்கியாழ்ப் பாணத்
தொண்ணகர் வண்ணையி னண்ணிய செல்வன்
கண்ணெனப் படுவன கற்றொருங் கறிந்த
அண்ண லனைநூ லறிஞ னடாநெறி
தபுதயா சிலனுங் கபிரியேன் மன்னன்
தெய்தவப் பயனெலாஞ் சிறந்தமா னுடனா
வெய்திய வென்றுல சேத்துபுத் திரமணி
நவந்தரு மங்கிலோ நலங்கிளர் கல்விதேர்
சவுந்தர நாயகத் தமிழ்ப்பா வலனே.

ம. ா. ா. ஸ்ரீ. கா. பச்சையப்பமுதலியாரது

சென்னைக்கல்விச்சாலையில்

தமிழ்த் தலைமைப் புலமை நடாத்தும் வித்வான்

ஆ. சுப்பராய பிள்ளை

அவர்கள் செய்த

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

காவலர் நறுந்தேன் றெவிட்டிவண் சுரும்பர்
காமர முரலும்யாழ்ப் பாணைப்
பூவலர் வண்ணைச் சவுந்தர நாய
கப்பெரும் புலவனெம் புனிதன்
நாவலர் பூவா நாவல ரேத்த
நயமுணர் சிறுவர்க டௌியத்
தூவலர் நன்னூற் சுருக்கமென் றொருநூ
ரெுருத்துநன் கச்சியற் றினனால்.

கோயம்புத்தூர் ஜில்லாவைச்சேர்ந்த

சேயூர் நார்மல் ஸ்கூல்

தலைமை உபாத்தியாயர் ஆகிய

சி. வேலுப்பிள்ளை*

அவர்கள் பாடிய

நிலைமண்டிலவாசிரியப்பா.

திருவருள் சிறக்குமெய்த் தெய்வநன் னூலின்
பொருள்தக வாட்ந்து பொறையுட னோர்ந்து
பாலகர் பருகிப் பயன்பெற வெண்ணி
ஞாலம் புகழ்மெய்ஞ் ஞானச் செயுள்சமைத்

* இவர் இப்பொழுது வேலூர் நார்மல் ஸ்கூலில் தலைமை உபாத்தியாயராய் இருக்கின்றனர்.

தாயின பின்ன ரருந்தமிழக் கடலுட்
போயின ரெவரும் புகழ்க்கரை நண்ணத
தானே முதலாய்த் தனிநா வாயே
மான நூலை மலைவற வகுக்கவும்
அலகில் விதியுள் அங்கிலோ பாடை
இலகி நகைதரு மிகலில் கணிதமாம்
அங்கம் வீச மருந்திரி கோணம்
பொங்கு குகோளம் பொருவில் ககோளம்
அஃகி மனத்தை அகற்று நூலாம்
வெஃகிக் கற்க விருப்பு மிகத்தருஞ்
சலமொளி காற்று சகமுலாம் பொருளின்
பலவா றுய்விரி பன்னரு நூற்பொரு
ளாய்தரு தருமநை யாயிக மானத
மேயவிஞ் சைகள்மலி யிரசா யனமாம்
பலகலை வித்தை பயிலுமா ணாக்கர்
சிலகா லத்திற் செழுந்தமி ழிலக்கணம்
வழுவற வோதநேர் வழிமுன் னிலையாற்
பழுதற வொன்று பயந்திட வெண்ணியும்
எண்மைய பொருளைத் திண்மைய மொழியா
னுண்ணிய விதிகெழீஇ நுவலிற் புகழ்மிக
வோங்கிப் பெருகுமென் றுன்னிய மூதோர்
தாங்கிய வழிபெருந் தவறென் றெண்ணியே
யிலக்கிய மாந்திட் டிலக்கண மீந்த
நலத்தகு கலைப்பவ ணந்திநன் னூலின்
மரக்கல மூர்வழி மலைசுழி புரையுநற்
றரக்கனி செறியுமுற் றளைமுட் போனு
மரும்விதி யனைத்து மாய்ந்தவை களைந்து
தரும்வழி யதனாற் றகைத்தொட ரருமலுஞ்
சுருங்கிய வாற்றாற் சுதமயக் கிலாமலும்
பெரும்பய னுடாப் பெட்புறப் பொழிப்புரை
நலமலி சீர்சால் நன்னூற் சுருக்கமென்
றலமலி பெயர்புனைந் தச்சியற் றினனால்
பன்னரு முறையாற் பயின்று நிரம்பிய
தன்னகத் துயர்நிச தனமா மறிவினாற்
றுன்னகத் துறுநிசி துரப்பி வீட்டலா
லென்னகு சசியொளி இகல்நிறை அறிஞன்

மன்னிய முனித்துணர் வகைமையிற் குசைமுனி
துன்னிய வச்சிரத் துகளறு கூர்மைய
னெண்ணில் வனங்களு மியல்புட னமைந்து
மண்ணி னுதித்தநன் மதியெனத் தோன்றி
யிலகொளி மல்கிடு மிலங்கைத் தீவிற்
பலவளம் பெற்றுமெய்ப் பயன்பிறர்க் காகக்
கலையுண வளித்தசற் கபிரியே லிறைபர
னிலைவழி மருவி நினைந்தநூ யகத்தினன்
றவந்தவ ருமற் றந்தநன் மதலையாஞ்
சவுந்தர நாயகத் தமிழ்நூல் வலனே.

சென்னபட்டணத்து

மதிறஸ்ஸா-இ-ஆசம் என்னும் பாடசாலையில்

உதவி உபாத்தியார் ஆகிய

கோயம்புத்தூர் ஜில்லாவைச்சேர்ந்த

நல்லூர் சு. சிதம்பர முதலியார்

பாடிய

நிலைமண்டிலவாசிரியப்பா.

சகம்புடை வளைகட லகங்கையின் முகந்தற
நுகர்ந்துவி ணிகந்ததென் னகத்தனை யுகந்துவாழ்
பெருந்தவப் புயறர வருந்தமிழ்ப் பரவையி
னரும்பொருட் டிறைசெலப் பொருந்திய மரக்கல
மெனத்தகு மிலக்கண மனைத்துநீண் முதல்வழி
யினத்துறு சார்பெனத் தனித்தனி வகைதொகை
யொழுக்கிசைந் திருப்பினு மிழுக்கலி லிலக்கிய
முழுத்திறத் தினர்க்கல தெழுத்துமோர் வரிதெனுங்
குணத்தையுற் றெண்ணிலர் தணத்தலி னெவருமோர்ந்
துணர்ச்சிபெற் றிடத்தொகுத் திணக்கியோர் நூற்குறை

சிறப்புப்பாயிரம்.

வெளிப்படை பெறவகுத் தளிப்பது நலனென
வுரித்தம திசைபரி மளித்திடப் புவிமிசை
முன்னூ லெனத்திக ழெந்நூ லினுமிக
நன்னூல் வழங்கவி னந்நூ லினுட்பல
வுடுக்கணத் தவிர்மதி கடுத்திரு வழக்கினு
மடுத்தசூத் திரம்பல வெடுத்தகங் கையினுளா
மலகமா மெனப்பொரு ளிலகவோ துநர்மருள்
விலகவீ தமைந்ததென் றுலகமுள் ளுவப்புறச்
சுருக்கநன் னூற்பெய ரிருத்தியவ் வாறுரை
தெரித்துதா ரணங்களும் பொருத்தியச் சியற்றினர்
தோட்டலர்த் தண்டலை மாட்டளி துதைந்திசை
கூட்டியாழ்ப் பாணநன் னாட்டில்வண் ணையம்பதி
மருவிய கபிரியேல் வலம்புரி யுதவுமெய்
யுருவளர் புகழொளி பெருகுதண் ணளித்திறஞ்
செந்தமிழ்க் கலையெலாஞ் சேர்ந்தபூ ரணமதி
முந்துமாங் கிலப்பெருஞ் சிந்துவுக் கோர்புணை
சென்னையிற் போதனைத் திறங்கிளர் சாலையின்
மன்னுதாண் டுதல்பெரு மாமணித் தீவிகை
யாமெனக் கற்றநுண் ணறிவினர் தமதுசெந்
நாமதித் தெடுத்தசொன் னன்னலத் தோடுயர்
நிவந்தசீர் படைத்தநன் னெறிவழு வாவியற்
சவுந்தர நாயகத் தகைமைநா வலரோ.

ABRIDGMENT

OF

THE NANNÛL.

நன்னூற் சுருக்கம்

எழுத்ததிகாரம்.

ORTHOGRAPHY.

I–வது: எழுத்தியல்.—OF LETTERS.

எண்.

1. எழுத்து இப்படிப்பட்டதென்பதும் அதன் வகையும்.

DEFINITION AND DISTRIBUTION OF LETTERS.

மொழிமுதற் காரணம் ஆம்அணுத் திரள்ஒலி
எழுத்தது முதல்சார் பெனஇரு வகைத்தே. [எழு. சூ. 3.]

[மொழிக்கு முதற்காரணமாகிய, அணுக்கூட்டத்தால் ஆன, ஒலியே எழுத்து; அது முதலெழுத்து, சார்பெழுத்து, என இரண்டு வகைப்படும்.]

2. முதலெழுத்தின் விரி.—KINDS OF PRIMARY LETTERS.

உயிரும் உடம்பும்ஆம் முப்பதும் முதலே. [எழு. சூ. 4.]

[உயிர் எழுத்தும், மெய் எழுத்தும், ஆகிய முப்பது எழுத்துகளும் முதல் எழுத்தெனப்படும்.]

3. சார்பெழுத்தின் வகை.—KINDS OF SECONDARY LETTERS.

உயிர்மெய் ஆய்தம் உயிரள பொற்றள
பஃகிய இஉ ஐஔ மஃகான்
தனிநிலை பத்தும் சார்பெழுத் தாகும். [எழு. சூ. 5.]

[உயிர்மெய் முதலிய பத்தும் சார்பெழுத்தாம்.]

பெயர்.

4. உயிர், மெய், ஆகிய இவற்றின் பெயர்.

VOWELS AND CONSONANTS.

அம்முத லீரா றாவி கம்முதல்
மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர். [எழு. சூ. 8.]

[அகரம் முதலாகிய பன்னிரண்டையும் உயிர் என்றும், ககரம் முதலாகிய பதினெட்டையும் மெய்யென்றும், அறிவுடையோர் சொன்னார்.]

5. குற்றெழுத்து.—SHORT VOWELS.

அவற்றுள், அஇ உஎ ஒக்குறில் ஐந்தே. [எழு. சூ. 9.]

[உயிர், மெய், என்றவற்றுள், அகரம் முதலிய ஐந்தும் குற்றெழுத்தாம்.]

6. நெட்டெழுத்து.—LONG VOWELS.

ஆஈ ஊஏ ஐஓ ஔநெடில். [எழு. சூ. 10.]

[ஆகாரம் முதலிய ஏழும் நெட்டெழுத்தாம்.]

7. சுட்டெழுத்து.—DEMONSTRATIVE LETTERS.

அஇ உம்முதல் தனிவரின் சுட்டே. [எழு. சூ. 11.]

[அகரம், இகரம், உகரம், என்கிற மூன்றும் சொல்லுக்கு முதலில் புறத்தும், அகத்தும், சுட்டுப்பொருளைக் குறிக்க வந்தால், சுட்டெழுத்தாம்.]

(உ-ம்.) (1.) அவ்வணி, இவ்வணி, உவ்வணி ....[புறத்துவந்தன.]
(2.) *அவன், இவன், உவன் ......[அகத்துவந்தன.]

———»»««———

8. வினா எழுத்து.—INTERROGATIVE LETTERS.

எ யா முதலும் ஆ ஓ ஈற்றும்
ஏ இரு வழியும் வினாவா கும்மே. [எழு. சூ. 12.]

[எகரம், யா, ஆகிய இரண்டும் மொழிக்கு முதலிலும், ஆகாரம், ஓகாரம், ஆகிய இரண்டும் மொழிக்கு இறுதியிலும், ஏகாரம் இருவழியிலும், தனித்தனி வினாப்பொருளைக் காட்டவந்தால், வினா எழுத்தாம்.]

☞ இவையும் புறத்தும் அகத்தும் வரும்.

(உ-ம்.) (1.) எம்மனிதன்? யாங்ஙனம்? } முதலில் புறத்துவந்தன.
(2.) எவன்? யாவன்? } முதலில் அகத்துவந்தன.
(3.) கொற்றனா? கொற்றனோ? [இற்றில் புறத்துவந்தன.]
(4.) ஏவன்? கொற்றனே? [அகத்தும்புறத்தும்வந்தது.]

———»»««———

9. வல்லினம்.—HARD CONSONANTS OR PECTORALS.

வல்லினம் க ச ட த ப ற என ஆறே. [எழு. சூ. 13.]

[இவ்வாறும் வல்லினமாம்.]

---

*அவன் என்பதில் இருக்கிற அகரம், மலையன் என்பதிலுள்ள மலை ஆகிய பகுதி போல, வேறுநின்று சுட்டுப்பொருளைத் தருகின்றதாதலால், "தனிவரின்" என்றார்: இது வினாவுக்கும் பொருந்தும்.

10. மெல்லினம்.—SOFT CONSONANTS OR NASALS.

மெல்லினம் ங ஞ ண ந ம ன என ஆறே. [எழு. சூ. 14.]

[இவ்வாறும் மெல்லினமாம்.]

---

11. இடையினம்.—MEDIAL CONSONANTS OR GUTTURALS.

இடைஇனம் ய ர ல வ ழ ள என ஆறே. [எழு. சூ. 15.]

[இவ்வாறும் இடைஇனமாம்.]

---

12. இனஎழுத்து.—KINDRED LETTERS.

ஐ ஔ இஉச் செறிய முதல்எழுத்
திவ்விரண் டோரினம் ஆய்வரல் முறையே.

[எழு. சூ. 16.]

[இனம் இல்லாத ஐகாரம், ஔகாரம், என்பவை ஈகார, ஊகாரங்களுக்கு இனமாகிய இகர, உகரங்களைத் தமக்கும் இனமாகப் பொருந்த, முதலெழுத்துகள் இரண்டிரண்டு ஓரினமாய் வருதல் முறை; ஆதலால், அவை இன எழுத்தெனவும்படும்.]

(உ-ம்.) (1.) அ, ஆ; இ, ஈ; உ, ஊ; எ, ஏ; ஐ, இ; ஒ, ஓ; ஔ, உ;
க, ங; ச, ஞ; ட, ண; த, ந; ப, ம; ற, ன.

(2.) ய, ர, ல, வ, ழ, ள. [இவ்வாறும், உயிர்க்கணம் என்பதுபோல, இடைக்கணம் என ஓரினம்ஆம்.]

---

13. முற்றாய்தம்.—PERFECT AIDAM.

குறியதன் *முன்னர் ஆய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே.

[எழு. சூ. 35.]

---

*இதில் "முன்" என்றது இடமுன்; உரையில் பின் என்றது காலப்பின்; இது உலகவழக்கு; ஆதலால், பின்வரும் சூத்திரங்களிலும் "முன்" என்றதற்குப் பின் என்று அர்த்தம் சொல்லப்படும்.

[புள்ளிவடிவையுடையதாகிய ஆய்தம், குற்றெழுத்தின் பின்னே, உயிரோடுகூடிய வல்லெழுத்தாறின் மேலதாய் வரும்.]

(உ-ம்.) (1.) எஃகு, கஃசு, இருபஃது. [வல்லினத்தின்மேல் வந்தது.]
(2.) அஃகடிய.............. [புணர்ச்சிவிகாரத்தால்வந்தது.]
(3.) அஃகான்.............. [செய்யுள்விகாரத்தால்வந்தது.]

முற்றாய்தத்தின் தொகை எட்டு.

---

14. உயிரளபெடை.—VOWEL PROLONGATION.

இசைகெடின் மொழிமுதல் இடைகடை நிலைநெடில்
அளபெழும் அவற்றவற் றினக்குறில் குறியே.
[எழு. சூ. 36.]

[பாட்டில் ஓசைகுறைந்தால், மொழிமுதலில், நடுவில், இறுதியில், நின்ற நெட்டெழுத்து எழும், அவ்வோசையை நிறைக்கத், தத்தம் மாத்திரையில் மிகுந்து ஒலிக்கும்; அவ்வாறு அளபெடுத்தன அறிதற்கு, அவற்றின்பின் அவற்றிற்கினமாகிய குற்றெழுத்துகள் வரிவடிவில் அறிகுறியாய் வரும்.]

(உ-ம்.) (1.) "ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்குஞ் செய்வினை
ஆஅதும் என்னும் அவர்." [குறள். 66. 3.]
[மொழிமுதலில் அளபெடுத்தன.]

(2.) "கடாஅயினுஞ் சான்றவர் சொல்லார்." [நாலடி. 26. 5.]
[மொழிஇடையில் அளபெடுத்தது.]

(3.) "பொருள்மேற்
படாஅ விடுபாக் கறிந்து." [நாலடி. 26. 5.]
[மொழிக்கடையில் அளபெடுத்தது.]

ஔ மொழிக்கு நடுவிலும் இறுதியிலும் வாராது; வரும் அளபெடை பத்தொன்பது.

☞ மேலும், இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை, என இரண்டுண்டு.

(உ-ம்.) (1.) "கற்றன கல்லார் செவிமாட்டிக் கையுறூஉங்
குற்றம் தமதே." [நீதிநெறி. 25.]
[இன்னிசையாக அளபெடுத்தது.]

(2.) "ஏமுறப் புனல்படீஇ, வித்தொ டின்பொருள்
தாமுற வழங்கி." [இராமாயணம். 1. 6. 111.]

[சொல்லிசையாக அளபெடுத்தது.]

ஆக உயிர் அளபெடை இருபத்தொன்று.

---

15. ஒற்றளபெடை.—CONSONANT PROLONGATION.

ஙஞண நமன வயலள ஆய்தம்
அளபாம் குறில்இணை குறிற்கீழ் இடைகடை
மிகலே அவற்றின் குறியாம் வேறே. [எழு.சூ.37.]

[பாட்டில் ஓசை குறைந்தால், குறில் இணைக்கீழும், குறிற்கீழும், மொழிக்கு நடுவிலும், இறுதியிலும், நிற்கும் ங, ஞ, ண, ந, ம, ன, வ, ய, ல, ள, ஆகிய ஒற்றுகளும், ஆய்தமும், தம் மாத்திரையில் மிகுந்தொலிக்கும்; அவற்றின்பின், அவ்வெழுத்துகளை வரிவடிவில் மிகவெழுதுதல், அவ்வளபெடையை அறியும்படி வேறு அறிகுறியாம்.]

(உ-ம்.) (1.) "கலங்ங்கு நெஞ்சமிலை காண்!"

[குறிலிணைக்கீழ், மொழிக்கிடையில், அளபெடுத்தது.]

(2.) "எங்ங் கிறைவ னுளனென்பாய்!"

[குறிற்கீழ், மொழிக்கிடையில், அளபெடுத்தது.]

(3.) "மடங்ங் கலந்த மனனே!"

[குறில் இணைக்கீழ், மொழிக்கிறுதியில், அளபெடுத்தது.]

(4.) "நங்ங் களங் கறுப்பா நாம்."

[குறிற்கீழ், மொழிக்கிறுதியில், அளபெடுத்தது.]

(5.) "எஃஃ கிலங்கிய கையராய்."

[ஆய்தம் அளபெடுத்தது.]

ஆய்தம் மொழியின் இறுதியில் வாராது; ஆதலால், ஒற்றளபெடை நாற்பத்திரண்டு.

---

16. குற்றியல் உகரம்.—SHORTENED உ.

நெடிலோ டாய்தம் உயிர்வலி மெலிஇடை
தொடர்மொழி இறுதி வன்மைஊர் உகரம்
அஃகும் பிறமேல் தொடரவும் பெறுமே. [எழு. சூ. 39.]

[தனிநெடில் ஏழுடனே, ஆய்தம் ஒன்றும், உயிர் பதினொன்றும்,* வன்கணமும், மென்கணமும், இடையெழுத்து ஐந்தும்,† ஆகிய முப்பத்தாறு எழுத்துகளுள் ஒன்று அயலாய்த் தொடர, அதன்பின் வல்லெழுத்துகளுள் ஒன்றை ஊர்ந்த உகரம் குறுகும்; தனிநெடில் ஒழிந்தவற்றிற்குமேலே வேறெழுத்துகள் தொடரவும் பெறும்.]

(உ-ம்.) நாகு, கஃசு, குருகு, நத்து, கொம்பு, தெள்கு.

[இடைத்தொடரில் குற்றியல் உகரம் ஐந்து; மறறைத் தொடர்களில் தொகை முப்பது; ஆகவே, குற்றியல் உகரம் முப்பத்தைந்து; ஆயினும், பொதுவில் முப்பத்தாறென்னப்பட்டது.‡]

---

17. குற்றியல் இகரம்.—SHORTENED இ.

யகரம் வரக்குறள் உத்திரி இகரமும்
அசைச்சொல் மியாவின் இகரமுங் குறிய. [எழு. சூ 38.]

[யகரத்தை முதலிலே உடைய சொல்வரக் குற்றியல் உகரம் திரிந்த இகரமும், அசைச்சொல்லாகிய "மியா" என்பதில்உள்ள இகரமும் குறியவை.]

(உ-ம்.) (1.) "யாண்டுச்சென் றியாண்டும் உளராகார் வெந்துப்பின்
வேந்து செறப்பட் டவர்." [குறள். 90. 5.]

(2.) கேண்மியா.

[குற்றியல் உகரம் முப்பத்தாறினும் ஆகும் குற்றியலிகரம் முப்பத்தாறு; இவற்றோடு "மியா" விலுள்ள குற்றியலிகரமுஞ் சேர்ந்து, குற்றியலிகரத்தின் தொகை முப்பத்தேழு ஆகின்றது.]

---

18. ஐ, ஔ இவைகளின் குறுக்கம்.—SHORTENED ஐ AND ஔ.

தற்சுட் டளபொழி ஐம்மூ வழியும்
நையும் ஔவும் முதல்அற் றாகும். [எழு. சூ. 40.]

[ஐகாரம் தன்னைச் சுட்டித் தன் பெயர் சொல்லும் அளவில் ஒழிய, மற்றைச் சொல்லின் முதல், இடை, கடை, ஆகிய மூன்

---

* உயிருள், மொழியின் நடுவிலும் இறுதியிலும் வராத ஔகாரம் ஒழியவே, பதினொன்றும்.

† இடை எழுத்துகளுள், வல்லெழுத்துகளோடு தொடராத வகரவொற்று ஒழிய, வருவன ஐந்தாம்.

‡ நெடிலில் ஔகாரந் தொடர்ந்த குற்றியல் உகரம் இல்லை.

றிடத்திலும், தன்மாத்திரையிற் குறுகும்; ஔகாரம் சொல்லுக்கு முதலில் அப்படியே குறுகும்.]

(உ-ம்.) (1.) ஐயம். (2.) கவைவு. (3.) மலை; ஔவியம்.

---

19. மகரக்குறுக்கம்.—SHORTENED ம.

ணனமுன்னும் வஃகான் மிசையுமக் குறுகும்.
[எழு சூ. 41.]

[ணகர, னகர, ஒற்றுகளின் பின்னும், வகர ஒற்றின் முன்னும், வரும் மகர ஒற்றானது தன்மாத்திரையிற் குறுகும்.]

(உ-ம்.) (1.) மருண்ம். (2.) போன்ம். (3.) நிலம்வலிது.

"பொன்னங் குன்றின்மேல் அவன்கொடை போன்மெனப் பொழிந்த." [நைட. 3.]

[போன்ம் = போலும்.]

---

20. ஆய்தக்குறுக்கம்.—SHORTENED ÂIDAM.

லளவீற் றியைபின்னாம் ஆய்தம் அஃகும். [எழு. சூ. 42.]

[லகர, ளகர, ஒற்றெழுத்துகளினுடைய ஈற்றுப்புணர்ச்சியினால் ஆகும் ஆய்தம், தன்மாத்திரையிற் குறுகும்.]

(உ-ம்.) (1.) அஃறிணை. (2.) முஃடீது.

மாத்திரை.

---

21. எழுத்துகளின் மாத்திரை.—QUANTITY.

மூன்றுயிர் அளபிரண் டாம்நெடில் ஒன்றே
குறிலோ டைஔக் குறுக்கம் ஒற்றள
பளையொற் றிஉக் குறுக்கம் ஆய்தம்
கால்குறள் மஃகான் ஆய்தம் மாத்திரை. [எழு. சூ. 44.]

[ஒலிக்கும் மாத்திரை உயிர் அளபெடைக்கு மூன்றாகும்; நெடிலுக்கு இரண்டாகும்; குற்றெழுத்து, ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், ஒற்றளபெடை, ஆகிய இவற்றிற்குத் தனித் தனி ஒன்றாகும்; மெய்யெழுத்திற்கும், குறுகிய இகரத்திற்கும், உகரத்திற்கும், ஆய்தத்திற்கும், தனித்தனி அரைமாத்திரையும், மகரக் குறுக்கத்துக்கும், ஆய்தக்குறுக்கத்திற்கும், தனித்தனி கால்மாத்திரையும் ஆகும்.]

---

22. *மாத்திரை இன்னதென்பது.*—DEFINITION OF QUANTITY.

இயல்பெழு மாந்தர் இமைநொடி மாத்திரை
[எழு. சூ. 45.]

[மனிதரிடத்தில் இயற்கையாய் உண்டாகின்ற கண் இமைப்பொழுதும், கைந்நொடிப்பொழுதுமே, மாத்திரையின் அளவாம்.]

முதல், ஈறு, இடை நிலை.

23. *மொழிக்கு முதலில்வரும் எழுத்துகள்.*—INITIAL LETTERS.

பன்னீ ருயிருங் கசதந பமவய
ஞஙவீ ரைந்துயிர் மெய்யும் மொழிமுதல்.
[எழு. சூ. 47]

[பன்னிரண்டு உயிர் எழுத்துகளும், ககரம் முதலாகிய பத்து உயிர் ஏறிய மெய் எழுத்துகளும், சொல்லுக்கு முதலில் வரும்.]

(உ-ம்.) (1.) அணி, ஆணி, இரை, ஈடு, உளி, ஊன், எறி, ஏறு, ஐப்பசி, ஒலி, ஓடு, ஔவியம்.

[மொழிக்கு முதலில் பன்னீருயிரும் வந்தன.]

(2.) கரி, சலி, தடை, நரி, பசு, மணி, வழி, யவனர், ஞமலி, அங்ஙனம்.

[ககரம் முதலாகிய பத்து உயிர்மெய்களும் மொழிக்கு முதலில் வந்தன.]

☞ ககரம் முதல் மகரம் இறுதியாகிய ஆறு மெய்களும், பன்னிரண்டுயிரோடுங் கூடி, மொழிக்கு முதலில் வரும்.

24. மொழிமுதல் வகரம்.—THE INITIAL வ.

உ ஊ ஒ ஓ அலவொடு வம்முதல். [எழு. சூ. 48.]

[உகரம் முதலிய இந்நான்கும் அல்லாத எட்டுயிரோடும், வகரம் மொழிக்கு முதலில் வரும்.]

(உ-ம்.) வளி (=காற்று), வாளி (=அம்பு), விளி, வீடு, வெம்மை, வேலை, வைத்தல், வௌவல்.

---

25. மொழிமுதல் யகரம்.—THE INITIAL ய.

அ ஆ உ ஊ ஓ ஔ யம்முதல். [எழு. சூ. 49.]

[அகரம் முதலிய இவ்வாறுயிரோடும், யகரம் மொழிக்கு முதலில் வரும்.]

(உ-ம்.) யவனர், யாழ், யுகம், யூகி, யோகர், யௌவனம்.

---

26. மொழிமுதல் ஞகரம்.—THE INITIAL ஞ.

அ ஆ எ ஒவ் வோ டாகும் ஞம்முதல். [எழு. சூ. 50.]

[அகரம் முதலிய இந்நான்குயிரோடும், ஞகரம் மொழிக்கு முதலில் வரும்.]

(உ-ம்.) ஞமலி (=நாய், மயில்), ஞாயிறு (=சூரியன்), ஞெளிர் (=ஒலி), ஞொள்கல் (=அஞ்சுதல்).

---

27. மொழிக்கு இறுதியில்வரும் எழுத்துகள்.

FINAL LETTERS.

ஆவி ஞ ணந மன யரல வழளமெய்
சாயும் உகரம்நா லாறும் ஈறே. [எழு. சூ. 52.]

[தனித்தும், மெய்யோடுகூடியும், வரும் பன்னிரண்டு உயிர்களும், ஞகரம் முதலாகிய பதினொரு மெய்களும், குற்றியல் உகரமும், ஆகிய இருபத்துநான்கு எழுத்தும், மொழி இறுதியில் வரும்.]

(உ-ம்.) (1.) விள, நிலா, களி, மீ, விடு, பூ, சேஎ, தே, பை, கொ, போ, கௌ.

[ஆவி, மெய்யோடுகூடி, மொழி இறுதியில் வந்தன.]

(2.) உரிஞ், மண், பொருந், மரம், பொன், சேய், சீர், கால், தெவ், தாழ், வாள், அஃகு.

[ஞகரம் முதலிய பதினொரு மெய் எழுத்துகளும், மொழி இறுதியில் வந்தன.]

போலி.

---

28. மொழி இறுதிப்போலி.—FINAL SUBSTITUTES.

மகர இறுதி அஃறிணைப் பெயரின்
னகரமோ டுறழா நடப்பன உளவே. [எழு. சூ. 67.]

[அஃறிணைப் பெயர்களில்* இறுதியில் நின்ற மகரமெய் ஆனது, னகரமெய்யோடு ஒத்து நடப்பனவும் சில உண்டு.]

(உ-ம்.) "சேக்கை மரன்ஒழியச் சேண்நீங்கு புட்போல." [மரன்=மரம்.] [நாலடி. 3. 10.]

[இரண்டு குறிலை அடுத்த மகரத்துக்கே, னகரம் போலியாக வரும்.]

☞ (1.) இவ்விறுதிப்போலியை முதலில் சொன்னதினால், பின் வருபவைகளும் அமையும் எனக்கொள்க:—

(உ-ம்.) (1.) சுரும்பு=சுரும்பர்; வண்டு=வண்டர்; மாது=மாதர்.

[குற்றியல் உகரம் அர் ஆதல்.]

(2.) பந்தல்=பந்தர்; சாம்பல்=சாம்பர்.

"முன்றில்கள் அல்லன முத்தின் பந்தரே." [இரா. 1. 4. 39.]

"தழல்எழ விழித்தனன்: சாம்பர் ஆயினன்." [இரா. 1. 8. 35.]

[சில பெயர் இறுதி லகரமெய் ரகரமெய்யோடொத்தல்.]

(2.) அன்றியும், லகரத்துக்கு ளகரமும் போலியாக வரும்.

(உ-ம்.) (1.) மதில் = மதிள்.

"வான்திகழும் சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல்
ஆன்ற தமிழ்மறைகள் ஆயிரமும்." [திருவாய்மொழித்தனியன்.]

---

* "அஃறிணைப்பெயர்" என்றது, பால்பகா அஃறிணைப்பெயரை.

29. மொழிமுதற் போலியும் இடைப்போலியும்.

INITIAL AND MEDIAL SUBSTITUTES.

அஐ முதல்இடை ஒக்கும் ச ஞ ய முன். [எழு. சூ. 68.]

[அகரமும் ஐகாரமும், சொல்லுக்கு முதலிலும் இடையிலும், சகர, ஞகர, யகரங்களின் முன்வந்தால், ஒத்து நடக்கும்.]

(உ-ம்.) (1.) பசல்=பைசல்; மஞ்சு=மைஞ்சு; மயல்=மையல்.

(2.) அமச்சன் = அமைச்சன்; இலஞ்சி = இலைஞ்சி; அரயர்=அரையர்.

☞ (1.) சில சொற்களின் நடுவில், தகரத்துக்குச் சகரமும் போலியாய் வரும்.

(உ-ம்.) (1.) தைத்தான்=தைச்சான். (2.) பித்தி=பிச்சி.

---

30. மொழி இடைப்போலி.—MEDIAL SUBSTITUTES.

ஐகான் யவ்வழி நவ்வொடு சில்வழி
ஞஃகான் உறழும் என்மரும் உளரே. [எழு. சூ. 69.]

[ஐகாரத்தின் பின்னும், யகர ஒற்றின் பின்னும், இயல்பாய் வரும் நகர ஒற்றோடு, சிலவிடங்களில் ஞகர ஒற்று ஒத்து நடக்கும் என்று சொல்வாரும் உண்டு.]

(உ-ம்.) (1.) ஐந்நூறு=ஐஞ்ஞூறு. (2.) செய் + நின்ற=செய்ஞ்ஞின்ற.*

☞ (1.) மொழிமுதலிலும் நகரத்துக்கு ஞகரம் வரும்.

(உ-ம்.) நாயிறு=ஞாயிறு; நயம்=ஞயம்.

(2.) தனிமொழிகளின் இடையிலும் நகரத்துக்கு ஞகரம் போலியாய் வரும்; வருமிடத்தில், நகரத்துக்கு முன் ஐகாரமும், பின் தகரமும், இருந்தால், அவற்றிற்கு முறையே அகரமும் சகரமும் ஆம்.

(உ-ம்.) (1.) நீந்தல்=நீஞ்சல். (2.) ஐந்து=அஞ்சு; மைந்தன்=மஞ்சன்.

[ஐந்து=அஞ்சு, என்ற விடத்தில், ஐகாரத்துக்கு அகரமும், தகரத்துக்குச் சகரமும், வந்தன]

(1.) "அஞ்சிலே ஒன்றுபெற்றான் அஞ்சிலே ஒன்றைத்தாவி." [இரா. பாயிரம்.]

(2.) "செஞ்சுடர் இருள்கீறித் தினகரன் ஒருதேர்மேல்
மஞ்சனை அணிகோலங் காணிய எனவந்தான்." [இரா. 1. 22. 21.]

---

* மண் + யாத்த = மண்ஞாத்த, பொன் + யாத்த = பொன் ஞாத்த, எனவும்வரும்.

எழுத்ததிகாரம்.

II-வது: பதவியல்.—OF WORDS.

பதம்.

31. *பதம் இன்னது என்பதும் அதன் வகையும்.*

WORDS HOW FORMED, AND THEIR KINDS.

எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள் தரின்
பதமாம் அதுபகாப் பதம்பகு பதம்என
இருபால் ஆகி இயலும் என்ப. [பத. சூ. 1.]

[*எழுத்துகள் தனித்தாவது, தொடர்ந்தாவது, அருத்தத்தைத் தந்தால் பதம்ஆம்; அது பகாப்பதம், பகுபதம், என இரண்டு வகைப்பட்டு நடக்கும் என்பார் அறிவுடையோர்.*]

32. *பகாப்பதம்.*—INDIVISIBLE WORDS.

பகுப்பால் பயனற் றிடுகுறி ஆகி
முன்னே ஒன்றுய் முடிந்தியல் கின்ற
பெயர்வினை இடைஉரி நான்கும் பகாப்பதம்.
[பத. சூ. 4.]

[*பிரிக்கப்படுவதினால் பகுதி, விகுதி, முதலிய பயன் இல்லாமல், இடுகுறிஆகி, முதற்காலந்தொடுத்து ஒன்றுய் முடிந்து நடக்கின்ற பெயர், வினை, இடை, உரி, ஆகிய நான்கும் பகாப்பதம்ஆம்.*]

(உ-ம்.)	(1.)	நிலம், நீ, பால்	[பெயர்ப்பகாப்பதம்.]
	(2.)	போ, நில், வா	[வினைப்பகாப்பதம்.]
	(3.)	மற்று, ஏ, ஓ, கொல்..	[இடைப்பகாப்பதம்.]
	(4.)	கழி, நனி, உறு.........	[உரிப்பகாப்பதம்.]

---

33. பகுபதம்.—DIVISIBLE WORDS.

பொருள்இடம் காலம் சினைகுணம் தொழிலின்
வருபெயர் பொழுதுகொள் வினைபகு பதமே. [எழு. சூ. 5.]

[பொருள் முதலிய ஆறும் காரணமாய் வரும் பெயர்ச்சொற்களும், காலத்தைக்கொள்ளும் வினைச்சொற்களும், பகுபதங்களாம்.]

(உ-ம்.)	(1.)	பொன்னன்	[பொருட்பகுபதம்.]	பெயர்.
	(2.)	அகத்தான்	[இடப்பகுபதம்.]	
	(3.)	ஆதிரையான்	[காலப்பகுபதம்.]	
	(4.)	கண்ணன்	[* சினைப்பகுபதம்.]	
	(5.)	நீலன்	[குணப்பகுபதம்.]	
	(6.)	ஓதுவான்	[தொழிற்பகுபதம்.]	
		நடந்தான்	[தெரிநிலைவினைப்பகுபதம்.]	
		பெரிது	[குறிப்புவினைப்பகுபதம்.]	

"வினை" என்றதனால், தெரிநிலைவினை, குறிப்புவினை, என இரண்டும் அமையும்.

"வினை பகுபதம்" என்றதனால், இருவகைவினையால் அணையும் பெயரும் பகுபதம்ஆம் என விளங்குகின்றது.

---

34. பகுபத உறுப்புகள்.—THE MEMBERS OF DIVISIBLE WORDS.

பகுதி விகுதி இடைநிலை சாரியை
†சந்தி விகாரம் ஆறினும் ஏற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியும்எப் பதங்களும்.
[பத. சூ. 6.]

---

* சினை = உறுப்பு.

† இவ்விடத்திற் "சந்தி" என்றது, தோன்றல், திரிதல், கெடுதல்களை; "விகாரம்" என்றது, வலித்தல் முதலிய ஒன்பது செய்யுள் விகாரங்களை.

[பகுதி முதலிய இவ்வாறு உறுப்பினுள்ளும், பொருள் அமைதலுக்குத் தக்கவைகளை நினைத்துச் சேர்த்தால், எவ்வகைப் பகுபதமும் முடியும்.]

(உ-ம்.) கூனி = கூன் (பகுதி) + இ (விகுதி).
உண்டான் = உண் (பகுதி) + ட் (இடைநிலை) + ஆன் (விகுதி).

மற்றவையும் இப்படியே கண்டுகொள்க.

பகுதி.

35. பகுதி இப்படிப்பட்டது.—THE ROOT DEFINED.

தத்தம், பகாப்ப தங்களே பகுதி ஆகும். [பத. சூ. 7.]

[பகுபதங்களுள், அவற்றவற்றின் முதலில் நின்ற பகாப்பதங்களே பகுதிகளாம்.]

---

36. "செம்மை" முதலிய பண்புப்பகுதிகள் விகாரப்படும் வகை.

THE INFLEXION AND COMBINATION OF INDIVISIBLE WORDS DENOTING QUALITY.

ஈறு போதல் இடைஉகரம் இய்யாதல்
ஆதி நீடல் அடிஅகரம் ஐஆதல்
தன்ஒற் றிரட்டல் முன்நின்ற மெய்திரிதல்
இனம்மிகல் இனையவும் பண்பிற் கியல்பே. [பத. சூ. 9.]

[செம்மை, சிறுமை, முதலிய வாய்பாடுகளின் இறுதியில் உள்ள மை விகுதி கெடுதலும், நடுவில் நின்ற உகரம் ஆனது இகரம் ஆதலும், முதலில் நின்ற குறில் நெடில் ஆதலும், முதலில் நின்ற அகரம் ஆனது ஐகாரம் ஆதலும், தன்மெய் நடுவில் மிகுதலும், முன்நின்ற மெய் வேறொரு மெய்யாய்த்திரிதலும், வரும் எழுத்திற்கு இன எழுத்து மிகுதலும், இவைபோன்ற வேறுவகை விகாரமும், அப்பண்பிற்கு இயல்பாம்.]

(உதாரணம்.)

(1.) நல்லன் .... [நன்மையின் மை கெட்டது.]

(2.) கரியன் .... [கருமையின் மை கெட்டு, உகரம் திரிந்தது.]

(3.) பாசி .... [பசுமையின் மை கெட்டு முதல் நீண்டது.]

(4.) பைந்தார் .... [பசுமையின் மை, சு கெட்டு, ந மிகுந்து, அகரம் ஐ ஆனது.]

(5.) வெற்றிலை ...... [வெறுமையின் மை கெட்டு, ற இரட்டியது.]

(6.) சேதாம்பல் .... [செம்மையின் மை கெட்டு, முதல் நீண்டு மகரம் தகரம் ஆனது.]

(7.) பைந்தார் ...... [ந மிகுந்தது; "இனையவும்" என்றதினால் சு கெட்டது.]

---

37. செய்வி, செய்விப்பி, முதலிய ஏவல்.

CAUSAL IMPERATIVES.

செய்என் வினைவழி விப்பி தனிவரின்
செய்விஎன் ஏவல் இணையின் ஈரேவல். [பத. சூ. 11.]

["செய்" என்னும் வாய்பாட்டு வினைப்பகுதிகளின் பின் வி, பி, என்பவைகளில் ஒன்று வந்தால் "செய்வி" என்னும் ஏவலின்மேல் ஓர் ஏவல்ஆம்; இவ்விகுதிகளுள் ஒன்று தன்னோடுதானாவது, பிறிதாவது, இணைந்துவந்தால், "செய்விப்பி" என்னும் வாய்பாட்டு ஈரேவல்ஆம்.]

(உ-ம்.) (1.) அணி + வி = அணிவி.

(2.) அணி + வி + பி = அணிவிப்பி.

☞ (1.) அன்றியும், கு, சு, டு, து, பு, று, என்னும் விகுதிகளில் ஒன்று பொருந்தியும் வரும்:—

(உ-ம்.) (1.) போ + கு = போக்கு. (2.) காய் + சு = காய்ச்சு.
(3.) வெருள் + டு = வெருட்டு. (4.) உறு + து = உறுத்து.
(5.) எழு + பு = எழுப்பு. (6.) பயில் + று = பயிற்று.

(2.) பகுதிகள் விகாரப்பட்டுப் பிறவினை ஆதலும் உண்டு:—

(உ-ம்.) (1.) மயங்கு [தன்வினை], மயக்கு [பிறவினை.] } வல்லொற்று மெல்லொற்றுவ
திருந்து [தன்வினை], திருத்து [பிறவினை] } தால்.

(2.) ஓடு [தன்வினை], ஓட்டு [பிறவினை.] } பகுதியின் ஒற்று இரட்டுத
மாறு [தன்வினை], மாற்று [பிறவினை.] } லால்.)
உருகு [தன்வினை], உருக்கு [பிறவினை.] }

——»»««——

விகுதி.

38. விகுதிகள் இவை என்பது.—TERMINATIONS.

அன்ஆன் அள்ஆள் அர்ஆர் பம்மார்
அ ஆ குடுதுறு என்ஏன் அல்அன்
அம்ஆம் எம்ஏம் ஓமொ டும்மூர்
கடதற ஐஆய் இம்மின் இர் ஈர்.
ஈயர் கயவும் என்பவும் பிறவும்
வினையின் விகுதி பெயரினும் சிலவே. [பத. சூ. 13.]

[அன்முதலிய முப்பத்தேழும், இவைபோல்வன பிறவும், வினைப்பகுபதங்களின் விகுதிகள்ஆம்; பெயருக்கும் சில விகுதிகள்ஆம்.]

☞ "பிறவும்" என்றதினாலும், "வினையின் விகுதி பெயரினும் சில வே" என்றதுபற்றியும், பின்வரும் விகுதிகளும் அமையும்:—

(1.) பெயரின் விகுதிகள். { அன், ஆன், அள், ஆள், அர், ஆர், அ, து, இ, மார், மன், மான், கள், வை, தை, கை, பி, மூன், ன, ள, ர, வ மெய்கள், முதலானவை.

(உ-ம்.) வடமன் .... [மன்] பெருமான் .... [மான்.]
எந்தை (=என்தந்தை) ... [தை.] எங்கை (=என்தங்கை). ... [கை.]
எம்பி (=தம்பி) ...... [பி.] எம்முன் (=அண்ணன்) ... [முன்.]

(2.) பெயர் எச்ச விகுதிகள். { அ, உம்.

(3.) வினை எச்ச விகுதிகள். — உ, பு, ஆ, ஊ, என, அ, இன், இய, இயர், வான், பான், பாக்கு, இ, ய், கு, ஆல், கால், ஏல், ஏனும், உம், மல், மை, மே, து, றி, முதலானவை.

(உ-ம்.) போய் .... [ய்.] செயற்கு .... [கு.]
செய்தக்கால் .... [கால்.] போகுமேல் .... [ஏல்.]
"என்றனர் இடர்உழந் திறைஞ்சி யேத்தலும்." .... [உம்.]
அல்லது .... [து.] அன்றி .... [றி.]

(4.) தொழிற்பெயர் விகுதிகள். — தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, அரவு, ஆனை, மை, து, முதலியன; அடம் என்பது வழக்கத்தில் வரும்.

(உ-ம்.) மறதி .... [தி.] செய்யுள் .... [உள்.]
சாக்காடு .... [காடு.] தேற்றரவு .... [அரவு.]
வாரானை (=வருதல்). ... [ஆனை] பார்த்து .... [து.]

(5.) பண்புப்பெயர் விகுதிகள். — மை, ஐ, சி, பு, உ, கு, றி, று, அம், நர், முதலியன.

(உ-ம்.) நன்மை, தொல்லை, மாட்சி, மாண்பு, மழவு, (=இளமை) நன்கு, நன்றி, நன்று, நலம், நன்னர்.

(6.) எதிர்மறை விகுதிகள். — இல், அல், ஆ, முதலியன.

(உ-ம்.) போகலன் .... [அல்.]

(7.) பிறவினை விகுதிகள். — வி, பி, கு, சு, டு, து, பு, று.

[உதாரணம் 37-ம் சூத்திரத்தினடியிற் காண்க.]

(8.) பிறவிகுதிகள்.

(உதாரணம்)

இ, ஐ, அம்.	(உ-ம்):—(1.) அலரி, பறவை, எச்சம்...	[வினைமுதற்பொருள்]
	(2.) ஊருணி, தொடை, தொல்காப்பியம்.	[செயப்படுபொருள்.]
	(3.) மண்வெட்டி, பார்வை, நோக்கம்...	[கருவிப்பொருள்.]
விடு, ஒழி.	(உ-ம்):—வந்துவிட்டான், படித்தொழிந்தான்.	[துணிவுப்பொருள்.]
கொள்.	(உ-ம்):—நடத்திக்கொண்டான்	[தற்செயல்.]
படு, உண்.	(உ-ம்):—ஓட்டப்பட்டான், அடியுண்டான்.	[செயப்பாட்டுவினை.]
மை.	(உ-ம்):—ஆண்மை, பெண்மை	[தன்மைப்பொருள்.]

இடைநிலை.

39. பெயரின் இடைநிலை.—MEDIAL PARTICLES OF NOUNS.

இலக்கியங் கண்டதற் கிலக்கணம் இயம்பலின்
பகுதி விகுதி பகுத்திடை நின்றதை
வினைப்பெயர் அல்பெயர்க் கிடைநிலை எனலே.
[பத. சூ. 14.]

[இலக்கியத்தைப் பார்த்து அதற்கு இலக்கணம் சொல்லுதலால், பகுதியையும் விகுதியையும் பிரித்து, நடுவில் நின்றதை வினையால் அணையும்பெயர் அல்லாத பெயர்களுக்கு இடைநிலை என்று சொல்லுக.]

(உ-ம்.) அறிஞன் .... [ஞ இடைநிலை.]
ஓதுவான் .... [வ இடைநிலை.]
வலைச்சி .... [ச இடைநிலை.]
வண்ணாத்தி .... [த இடைநிலை.]

40. இறந்தகால இடைநிலை.

MEDIAL PARTICLES DENOTING THE PAST TENSE.

தடற ஒற் றின்னே ஐம்பால் மூவிடத்
திறந்த காலம் தருந்தொழில் இடைநிலை. [பத. சூ. 15.]

[த, ட, ற ஒற்றுகளும், இன் என்னும் இடைச்சொல்லும், ஐந்து பாலிலும், மூன்று இடத்திலும், இறந்தகாலத்தைக் குறிக்கும் வினைப்பகுபதங்களினுடைய இடைநிலைகளாம்.]

(உதாரணம்.)

(1.) நட + த் + அன் + அன் = நடத்தனன்=நடந்தனன்.
(2.) கொள் + ட் + ஆன் = கொட்டான் = கொண்டான்.
(3.) நில் + ற் + ஆன் = நிற்றான் = நின்றான்.
(4.) ஓடு + இன் + ஆன் = ஓடினான்.
ஆ + கு + இன் + ஆன் = ஆகினான்=ஆனான். [இ குறைந்தது.]
விஞ்சு + இன் + அ + து = விஞ்சினது = விஞ்சியது. [ன குறைந்தது.]

41. நிகழ்கால இடைநிலை.

MEDIAL PARTICLES DENOTING THE PRESENT TENSE.

ஆநின்று கின்று கிறுமூ விடத்தின்
ஐம்பால் நிகழ்பொழு தறைவினை இடைநிலை. [பத.சூ.16.]

[ஆநின்று, கின்று, கிறு, ஆகிய இவை, ஐந்து பாலிலும், மூன்று இடத்திலும், நிகழ்காலத்தைக் குறிக்கும் வினைப் பகுபதங்களினுடைய இடைநிலைகளாம்.]

(உ-ம்.) (1.) போகாநின்றான். (2.) போகின்றான். (3.) போகிறான்.

---

42. எதிர்கால இடைநிலை.

MEDIAL PARTICLES DENOTING THE FUTURE TENSE.

பவ்வ மூவிடத் தைம்பால் எதிர்பொழு
திசைவினை இடைநிலை ஆம்இவை சிலஇல.* [பத.சூ.17.]

[ப, வ, ஆகிய ஒற்றுகள், ஐந்து பாலிலும், மூன்று இடத்திலும், எதிர்காலத்தைக் குறிக்கின்ற வினைப்பகுபதங்களினுடைய இடைநிலைகளாம்.]

(உ-ம்.) (1.) உண்பான்; (2.) உண்ணுவான்.

---

43. காலங்காட்டும் விகுதிகள்.—TERMINATIONS DENOTING TENSE.

றவ்வொடு கரஉம் மைநிகழ் பல்லவும்
தவ்வொ டிறப்பும் எதிர்வும் டவ்வொடு
கழிவும் கவ்வோ டெதிர்வும்மின் ஏவல்
வியங்கோள் இம்மார் எதிர்வும் பாந்தம்
செல்வொடு வரவும் செய்புநிகழ் பெதிர்வும்
எதிர்மறை மும்மையும் ஏற்கும் ஈங்கே. [பத. சூ. 18.]

---

* "இவை சில இல" என்றதற்குப் பொருள், பின்குத்திரத்தில் விளக்கப்பட்டிருக்கின்றது.

[று, றும், து, தும், இவை இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும்; டு, டும், இவை இறந்தகாலத்தையும்; கு, கும், இவை எதிர்காலத்தையும்; மின், ஏவல்விகுதிகள், வியங்கோள்விகுதிகள், இ, மார், இவை எதிர்காலத்தையும்; ப இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும், "செய்யும்" என்னும் முற்றுவிகுதி நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும்; எதிர்மறை விகுதியாகிய ஆ மூன்றுகாலத்தையும் ஏற்றுவரும், "இவை சில இல" என்றவைகளுள்.*]

(உதாரணம்.)

(1.) சென்று, சென்றும் [இறப்பு]; சேறு, சேறும், [எதிர்வு.]
(2.) வந்து, வந்தும் [இறப்பு]; வருது, வருதும், [எதிர்வு.]
(3.) உண்டு, உண்டும் [இறப்பு.]
(4.) உண்கு, உண்கும் [எதிர்வு.]
(5.) செய்ம்மின், செய்யாய், செய்க, சேறி, செய்ம்மார் [எதிர்வு.]
(6.) செய்ப .... [இறப்பு, எதிர்வு.]
(7.) செய்யும் ... . [நிகழ்வு, எதிர்வு.]
(8.) செய்யா .... [இறப்பு, நிகழ்வு, எதிர்வு.]

☞ இவற்றால் அன்றி, வேறுவகையாலும் காலம் தோன்றும்:—

(உ-ம்.) (1.) விட்டான், பெற்றான், புக்கான். [பகுதி விகாரத்தால் இறந்தகாலந்தோன்றியது.]
(2.) என்மனார், அறிந்திசினோர், ஆயது...... [மன், இசின், ய, இறந்தகாலம் காட்டியன.]
(3.) என்மர். ... ... [ம எதிர்காலங்காட்டியது.]
(4.) உண்ணாகிடந்தான், உண்ணாவிருந்தான் [ஆகிடந்து, ஆவிருந்து நிகழ்காலம் காட்டியன.]
(5.) வருதி .... [இ நிகழ்காலங்காட்டியது.]

☞ மேலும், எச்சவினைகளில் பல விகுதிகள் காலங்காட்டும் எனக்கொள்க.

---

* சாரியை, சந்தி, விகாரம், ஆகிய இம்மூன்றுறுப்பையும் புணரியலில் விளக்குகிறார்.

எழுத்ததிகாரம்.

III-வது: உயிரீற்றுப் புணரியல்.

OF THE COMBINATION OF VOWEL-FINALS.

புணர்ச்சி.

44. *அல்வழி, வேற்றுமை, இவையென்பது.*

CASUAL AND INCASUAL COMBINATION.

வேற்றுமை ஐம்முதல் ஆறும் அல்வழி
தொழில்பண் புவமை உம்மை அன்மொழி
எழுவாய் விளிஈ ரெச்சமுற் றிடைஉரி
தழுவு தொடர்அடுக் கெனஈ ரேழே. [உயிர். சூ. 2.]

[*வேற்றுமைப்புணர்ச்சி ஆவது, ஐ, ஆல், கு, இன், அது, கண், எனும் ஆறு உருபும் மறைந்தாவது, வெளிப்பட்டாவது, வரப் பதங்கள் பொருந்தும் தொடர்ச்சிஆம்; அல்வழிப்புணர்ச்சி ஆவது, வினைத்தொகை முதலிய ஐந்து தொகை நிலையிலும், எழுவாய் முதலிய ஒன்பது தொகா நிலையிலும், பதங்கள் பொருந்தும் தொடர்ச்சி ஆகிய பதினான்கும்ஆம்.*]

[வேற்றுமை.]

	வேற்றுமைத் தொகைநிலைத்தொடர்.		வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்.
(உ-ம்.)	(1.) வீடுகட்டினான்	[ஐ]	வீட்டைக்கட்டினான்.
	(2.) கல்எறிந்தான்	[ஆல்]	கல்லால் எறிந்தான்.
	(3.) கொற்றன்மகன்	[கு]	கொற்றனுக்கு மகன்.
	(4.) மலைவீழ்அருவி	[இன்]	மலையின் வீழ்அருவி.
	(5.) சாத்தன்கை	[அது]	சாத்தனதுகை.
	(6.) மணிஒளி	[கண்]	மணியின் கண்ஒளி.

[அல்வழி.]

(உதாரணம்.)

(1.) கொல்யானை	வினைத்தொகை.	ஐந்து தொகைநிலைத் தொடர்.
(2.) கருங்குதிரை	பண்புத்தொகை.	
சாரைப்பாம்பு......	இருபெயரொட்டுப் பண்புத்தொகை.	
(3.) பிறைநுதல்	உவமைத்தொகை.	
(4.) இராப்பகல்	உம்மைத்தொகை.	
(5.) பொற்றொடி........	அன்மொழித்தொகை.	
(1.) சாத்தன்வந்தான்....	எழுவாய்த்தொடர்.	ஒன்பது தொகாநிலைத் தொடர்.
(2.) சாத்தாவா	விளித்தொடர்.	
(3.) வந்தமனிதன்.......	பெயரெச்சத்தொடர்.	
(4.) போய்வென்றான்......	வினையெச்சத்தொடர்.	
(5.) நின்றான்அவன்.	தெரிநிலைவினைமுற்றுத் தொடர்.	
(6.) பெரியன்அவன்	குறிப்புவினைமுற்றுத் தொடர்.	
(7.) மற்றுவழி	இடைச்சொல்தொடர்.	
(8.) நனிஉழைத்தான்	உரிச்சொல்தொடர்.	
(9.) பாம்புபாம்பு	அடுக்குத்தொடர்.	

☞ இத்தொடர்கள் தழுவுதொடர், தழாத்தொடர், என இரு வகைப்பட்டு வரும்; எப்படியெனில்,

"பலகற்றோம் யாம் என்று தற்புகழ வேண்டா
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையுங் காக்கும்
சிலகற்றார் கண்ணும் உளவாம் பலகற்றார்க்
கச்சாணி அன்னதோர் சொல்." [அறநெறிச்சாரம்.]

என்பதில்,

"கைக்குடை" (=கையினுள்ளகுடை). [வேற்றுமைத்தழாத்தொடர்.]

"உளவாம்பல" .... [அல்வழித்தழாத்தொடர்.]

["உளவாம்" என்பது "பல" என்பதைத் தழுவாமல் "சொல்" என்பதைத் தழுவி நிற்பதால்.]

"பலகற்றோம்"....... [வேற்றுமைத்தழுவுதொடர்.]

"கற்றோம்யாம்"...... [அல்வழியில் வினைமுற்றுத் தழுவுதொடர்.]

45. இயல்புப்புணர்ச்சி.—NATURAL COMBINATION.

விகாரம் அனைத்தும் மேவல தியல்பே. [உயிர். சூ. 3.]

[பின்வரும் விகாரவகை எல்லாவற்றையும் அடையாதது, இயல்புப்புணர்ச்சி ஆம்.]

(உ-ம்.) பொன்மலர்.

விகாரம்.

46. விகாரப்புணர்ச்சி.—MUTATIONAL COMBINATION.

தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்.
மூன்றும் மொழிமூ விடத்தும் ஆகும். [உயிர். சூ. 4.]

[எழுத்தாவது, சாரியை ஆவது, ஒன்றும் பலவும் தோன்றுதலும், திரிதலும், கெடுதலும், மேற்சொன்ன விகாரம் ஆம். இம்மூவகை விகாரமும், நிலைமொழி வருமொழிகளுடைய முதல், இடை, கடை, என்கின்ற மூன்று இடத்திலும், ஏற்றபடி வரும்.]

(உ-ம்.) (1.) மா + கனி = மாங்கனி. [ங தோன்றியது.]
மண் + கட்டி = மண்ணாங்கட்டி [ஆம் தோன்றியது.]
(2.) அல் + திணை = அஃறிணை. [மெய்கள் திரிந்தன.]
(3.) நிலம் + வலயம் = நிலவலயம். [ம் கெட்டது.]

---

47. செய்யுள் விகாரம்.—POETICAL CHANGES.

வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல்
விரித்தல் தொகுத்தலும் வரும்செய்யுள் வேண்டுழி.
[உயிர். சூ. 5.]

[பாட்டில் வேண்டுமிடத்தில், வலித்தல் முதலாகிய ஆறு விகாரங்களும் வரும்.]

(உதாரணம்.)

(1) வலித்தல்...... "பிறைக்கடை பிறக்கிட மடித்தபில வாயாள்."

[பிறக்கிட = பிறங்கிட.] [இராமா. 1. 8. 49.]

(2) மெலித்தல்...... "தண்டையின் இனக்கிளி கடிவோள்."

[தண்டை = தட்டை.]

(3.) நீட்டல்...... "ஆளி பொங்கும் அரம்பையர் ஓதியே."

[ஆளி = அளி = வண்டு.] [இராமா. 1. 15. 62.]

(4.) குறுக்கல்..... "கோலாற் கடாஅய்க் குறினும்."

[குறினும் = கூறினும்.] [நாலடி. 26. 8.]

(5.) விரித்தல்..... "வள்வார் முரசம் மதிர்மாநகர்."

[ம விரிந்தது.] [இராமா. 1. 4. 73.]

(6.) தொகுத்தல்... "துன்னுத் துறத்தல் தகுவதோ?"

[துன்னு = துன்னுமல்.] [நாலடி. 23. 6.]

---

48. OMISSION OF INITIALS, MEDIALS, AND FINALS, IN WORDS.

ஒருமொழி மூவழிக் குறைதலும் அனைத்தே.

[உயிர். சூ. 6.]

[ஒரு சொல்லின் முதல், இடை, கடை, ஆகிய மூன்று இடத்திலும் குறைந்துவருதலும், அச்செய்யுள் விகாரம் ஆம்.]

(உதாரணம்.)

(1.) "மரைஇதழ்"....... [மரை = தாமரை.]
(2.) "ஓதிமுதுபோத்து"... [ஓதி = ஓந்தி.]
(3.) "நீல்உண்துகிலிகை" [நீல் = நீலம்.]
[மூன்று இடத்திலும் குறைதல்.]

☞ "குறைதலும்" என்ற எச்சஉம்மையால், விதி இல்லாமல் வருகிற வேறு விகாரங்களும் உண்டு எனக்கொள்க:—

(உ-ம்.) (1.) யாது = யாவது .... [வ தோன்றிற்று.]
(2.) மாகி = மாசி.. .... [சி ஆகத்திரிந்தது.]
(3.) யார் = ஆர் .... [ய் கெட்டது.]
(4.) முழுகு = மூழ்கு .... [ஆதி நீண்டு, முவ்வில் உ கெட்டது.]

(5.) மிஞிறு = ஞிமிறு ...
தசை = சதை ......
வைசாகி = வைகாசி ...
[எழுத்து நிலைமாறின.]

(6.) இல்வாய் = வாயில்.....
நகர்ப்புறம் = புறநகர் ....
[சொல் நிலைமாறின.]

49. A SINGLE COMBINATION MAY ADMIT OF MORE THAN ONE KIND OF MUTATION.

ஒருபுணர்க் கிரண்டும் மூன்றும் உறப்பெறும்.
[உயிர் சூ. 7.]

[ஒரு புணர்ச்சியில், தோன்றல், திரிதல், கெடுதல், என்னும் மூன்று விகாரங்களுள், ஒன்றுமாத்திரமல்லாமல், இரண்டும் மூன்றும் வரப்பெறும்.]

(உ-ம்.) (1.) நிலம் + பனை = நிலப்பனை. [இரண்டு விகாரம்.]
(2.) பனை + காய் = பனங்காய். [மூன்று விகாரம்.]

பொதுப்புணர்ச்சி.

50. ஞ, ந, ம, ய, வ, இவைகளின் புணர்ச்சி.
THE COMBINATION OF THE INITIALS ஞ, ந, ம, ய, AND வ, WITH OTHER LETTERS.

எண்மூ வெழுத்தீற் றெவ்வகை மொழிக்கும்
முன்வரும் ஞ ந ம ய வக்கள் இயல்பும்
குறில்வழி யத்தனி ஐ ந்நொது முன்மெலி
மிகலும்ஆம் ண ள ன ல வழிநத் திரியும். [உயிர். சூ. 8.]

[மொழிக்குக் கடையில் வரக்கூடிய இருபத்துநான்கு எழுத்துகளையும் இறுதியில் உடைய சொற்களின் பின்வரும் ஞ, ந, ம, ய, வக்கள் ஆகிய இவை அல்வழியிலும் வேற்றுமையிலும் இயல்பாம்; குற்றெழுத்தின் பின்வரும்

ய, ஐ, நொ, து, என்பவற்றிற்குப் பின்வரும் ஞ, ந, ம (பிற சொற்களுக்கு முன் இயல்பாகிறதன்றி) மிகுந்தும் வரும்: ண, ள, ன, ல, ஆகிய இவற்றிற்குப் பின்வரும் ந, பிற ஈற்றின்முன் இயல்பாதல் அன்றி, திரியும்.]

(உதாரணம்.)

(1.) விள + ஞான்றது	= விளஞான்றது	[இயல்பு.]
விள + ஞாற்சி	= விளஞாற்சி	
(2.) மெய் + நீண்டது	= மெய்ந்நீண்டது....	[ஞ, ந, ம, மிகுந்தன.]
மெய் + நீட்சி	= மெய்ந்நீட்சி......	
கை + மாண்டது	= கைம்மாண்டது....	
கை + மாட்சி	= கைம்மாட்சி......	
நொ + ஞொள்ளா	= நொஞ்ஞொள்ளா...	
து + மாடா	= தும்மாடா........	
(3.) கண் + நன்று	= கண்ணன்று	[ணவ்வின்பின் ந திரிந்தது.]
கண் + நலம்	= கண்ணலம்	

[காட்டாத சொற்களின் பின்னும் இவ்வாறே ஒட்டிக்காண்க.]

---

51. THE COMBINATION OF THE FINALS OF EPICENE AND HIGH CASTE NOUNS WITH HARD CONSONANTS.

பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்கள் ஈற்றுமெய்
வலிவரின் இயல்பாம் ஆவி யரமுன்
வன்மை மிகாசில விகாரம்ஆம் உயர்திணை. [உயிர்.சூ.9.]

[இருதிணைகளுக்கும் பொதுவான பெயர்களுக்கும், உயர் திணைப் பெயர்களுக்கும், ஈறான மெய்கள், வல்லெழுத்தை முதலில் உள்ளமொழிகள் வந்தால், இயல்பாம். உயிர், ய, ர, என்னும் இவ்விறுதிகளை உடைய இருவகைப்பெயர்களின் பின் வரும் க, ச, த, ப க்கள் மிகாஆம். உயிர் ஈறும் மெய் ஈறும் ஆகிய உயர்திணைப்பெயர்களில் சில, நாற்கணங்களோடும் புணர்ந்தால், விகாரப்படுவனவும் உண்டு.]

(உதாரணம்.)

(1.) கொற்றன், ஆண் + சிறிது, சிறியன், கை, செவி, தலை, புறம்........ [இரு வழியினும் நிலைமொழி இறுதி இயல்பு.]

[கொற்றன் சிறிது, கொற்றன் சிறியன்; ஆண் சிறிது, ஆண் சிறியன்; என முறையே ஒட்டிக்காண்க.]

கொற்றி, தாய் + குறிது, குறியள், கை, செவி, தலை, புறம்....... [இரு வழியினும் மொழி முதல் இயல்பு.]

(2.) அவர் + குறியர், கை ....
நம்பி + குறியன், கை .... [இரு வழியினும் வருமொழி முதல் இயல்பு.]

(3.) கபிலன் + பரணன் = கபிலபரணர்.....
வாசுதேவன் + கோட்டம் = வாசுதேவகோட்டம், வாசுதேவக்கோட்டம்.......... [இரு வழியினும் இரு மொழியும் விகாரம்.]

---

52. THE INTERROGATIVES AND VOCATIVES COMBINE NATURALLY WITH HARD CONSONANTS.

ஈற்றியா வினாவிளிப் பெயர்முன்வலி இயல்பே.
[உயிர். சூ. 10.]

[ஆ, ஏ, ஓ, ஆகிய மூன்று ஈற்றுவினாவின் பின்னும், யா என்னும் வினாப்பெயரின் பின்னும், விளிப்பெயர்களின் பின்னும், வரும் வல்லினம் இயல்பாம்.]

(உ-ம்.) (1.) நம்பியாகொண்டான், சென்றான், போனான்; யாகுறியன, சிறியன. [வினாவின்பின், வல்லினம் இயல்பாதல்.]

(2.) நம்பீகொள், செல், தா, போ..... [விளியின்பின், வலி இயல்பாதல்.]

---

53. THE COMBINATION OF HARD CONSONANTS WITH THE SECOND PERSON OF VERBS AND WITH IMPERATIVES ENDING IN VOWELS, OR IN ய, ர, AND ழ.

ஆவி யரழ இறுதிமுன் னிலைவினை
ஏவல்முன் வல்லினம் இயல்பொடு விகற்பே.
[உயிர். சூ. 11.]

[உயிரையும், ய, ர, ழ, ஆகிய இம்மூன்றொற்றையும், இறுதியில் உடைய முன்னிலை வினையின் பின்னும், ஏவல் வினையின் பின்னும், வரும் வல்லினம் இயல்பும் விகற்பமும் ஆம்.]

(உதாரணம்.)

(1.) உண்டனை + கொற்றா = உண்டனைகொற்றா....
செய்தாய் + சாத்தா = செய்தாய் சாத்தா....
போனீர் + தேவரே = போனீர்தேவரே.......
வாழ் + பூதா = வாழ்பூதா.......... .
[இயல்பு.]

(2.) நட + கொற்றா = நடகொற்றா, நடக்கொற்றா..
எய் + கொற்றா = எய்கொற்றா, எய்க்கொற்றா.
[விகற்பம்.]

☞ ழ முன்னிலையில் வாராது.

உயிரீற்றுச் சிறப்புப்புணர்ச்சி.

54. உயிரின்பின் உயிர் புணரும் வகை.—THE COMBINATION OF VOWELS WITH VOWELS.

இஈ ஐவழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும் ஏமுன்இவ் விருமையும்
உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும்.
[உயிர். சூ. 12.]

[இ, ஈ, ஐ, ஆகிய இவைகளின்பின் யகரமும், மற்ற ஏழு உயிர்களின்பின் வகரமும், ஏயின்பின் ய, வ, இரண்டும், உயிரை முதலில் உடைய மொழிவந்தால், உடம்படுமெய் என்று வரும்.]

(உதாரணம்.)

(1.) மணி + அழகு = மணியழகு........
நீ + இருந்தாய் = நீ யிருந்தாய்.. ....
பனை + ஓலை = பனையோலை.......
[ய தோன்றிற்று.]

(2.) பூ + அழகிது = பூவழகிது .... [வ தோன்றிற்று.]

(3.) சே (= எருது) + ஓடிற்று = சேவோடிற்று
நீயே + அறிவாய் = நீயேயறிவாய் .... } [வ, ய, இரண்டும் தோன்றின.]

.... வீரற்"
" கேவெலாம் காட்டுகின்ற." [இரா. 1. 17. 15.]

[ஏ (= அம்பு) + எலாம் = ஏ வெலாம்.]

☞ "ஏனை உயிர்வழிவவ்வும்" என்று சொல்லியிருந்தாலும் உரியின்பின் அருமையாய் யகரஒற்றுத் தோன்றுதலை "இடையுரிவடசொலின்" என்ற சூத்திரத்தினாற் கொள்க:

(உ-ம்.) "மாயிரு ஞாலம் உண்டோன்." [இரா. 1. 6. 24.]

[மா + இரு = மாயிரு.]

---

55. THE COMBINATION OF THE INTERROGATIVE எ AND THE DEMONSTRATIVES WITH OTHER LETTERS.

[EXCEPTION TO 54, AND 50.]

எகர வினாமுச் சுட்டின் முன்னர்
உயிரும் யகரமும் எய்தின் வவ்வும்
பிறவரின் அவையும் தூக்கில் சுட்டு
நீளின் யகரமும் தோன்றுதல் நெறியே. [உயிர். சூ. 13.]

[எ என்னும் வினா இடைச்சொல்லின் பின்னும், அ, இ, உ, என்னும் மூன்று சுட்டிடைச்சொல்லின் பின்னும், உயிரும் யவ்வும்வந்தால், வவ்வும், யகரம் அல்லாத மற்ற மெய்கள் வந்தால், அம்மெய்களும், செய்யுளில் சுட்டு நீண்டுவந்தால், யவ்வும், மிகுதல் முறைஆம்.]

(உ-ம்.) (1.) எ + அணி = எவ்வணி; அ + யாழ் = அவ்யாழ்.
(2.) இ + மலை = இம்மலை; உ + குடம் = உக்குடம்.
(3.) ஆ (= அ = அந்த) + இடை (= இடம்) = ஆயிடை
"ஆயிடைப் பருவம்வந் தடைந்த எல்லையின்" [இரா. 1. 6. 101.]

☞ "நெறி" என்றதனால் பின்வருவனவும் அமையும் எனக்கொள்க:—

(1.) யாங்ஙனம்... .... [யா வினாவின்பின் ங மிகுந்தது.]

(2.) ஆங்ஙனம், ஈங்ஙனம், ஊங்ஙனம்... [நீண்ட சுட்டின்பின் ங மிகுந்தது.]

(3.) ஈது, ஆங்கு, ஈங்கு, ஊங்கு, ஆண்டு, ஈண்டு .... } [சுட்டுப்பெயர் நீண்டது.]

(4.) "செல்வுழிச்செல்க.". .... } [லவ்வின் பின் உடம்படுமெய் அல்லாத வ தோன்றிற்று]

——»»««——

56. FINAL உ DROPPED BEFORE VOWELS, AND CHANGED INTO இ BEFORE ய. [EXCEPTION TO 54.]

உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்
யவ்வரின் இய்யாம் முற்றும்அற் றொரோவழி.

[உயிர். சூ. 14.]

[குற்றியல் உகரம், உயிரை முதலில் உள்ள மொழிவந்தால், தனக்காதாரமாகிய மெய்யைவிட்டுக் கெடும்; யவ்வை முதலில் உள்ள மொழிவந்தால், இகரம்ஆகத் திரியும்; முற்றியல் உவ்வும் அவ்விரண்டு விதியையும் சில இடங்களில் பெறும்.]

(உதாரணம்.)

(1.) நாகு + அருமை=நாகருமை. [குற்றியல் உ கெட்டது.]
கொக்கு + யாது=கொக்கியாது. [குற்றியல் உகரம் இ ஆனது.]

(2.) அறிவு + அரிது = அறிவரிது. [முற்றியல் உ கெட்டது.]
அறிவு + யாப்பு=அறிவியாப்பு. [முற்றியல் உகரம் இ ஆனது.]

☞ "அழைப்பதுவே" = அழைப்பது + ஏ; இதில் குற்றியல் உ கெடாமல் வ தோன்றியது காண்க.

[கெடும் என்னமல் "ஓடும்" என்றதால் இது அமையும்]

——»»««——

உயிர்ஈற்றின்பின் வல்லினம் புணர்வது.

57. க, ச, த, ப, இரட்டிப்பது.—THE LETTERS க, ச, த, AND ப, DOUBLED AFTER VOWELS.

இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்
கசதப மிகும்வித வாதன மன்னே. [உயிர். சூ. 51.]

[இயல்பினாலும் விதியினாலும் இறுதி ஆகநின்ற உயிர்களின் பின்வரும் க, ச, த, ப, பெரும்பாலும் மிகும், சிறப்புவிதியிற் சொல்லாதவைகள்.]

(உ-ம்.) இந்தப்படம், வரச்சொன்னான், மரப்பலகை.

---

58. *சில அகரஇற்றுச் சொற்களின்பின் க, ச, த, ப க்கள் புணரும் வகை.*—THE COMBINATION OF CERTAIN WORDS ENDING IN *அ* WITH *க*, *ச*, *த*, AND *ப*. [EXCEPTION TO 57.]

செய்யிய என்னும் வினையெச்சம் பல்வகைப்
பெயரின் எச்சமுற் றாறன் உருபே
அஃறிணைப் பன்மை அம்மமுன் இயல்பே.

[உயிர். சூ. 17.]

["செய்யிய" முதலிய அகரஈற்றுச் சொற்களின் பின்வரும் வல்லினம் இயல்பாம்.]

(உதாரணம்.)

(1.) உண்ணியகொண்டான். [வினை எச்சத்தின்பின் இயல்பு.]
(2.) வந்தகுதிரை......... சித்திரித்தசேதா..... } [பெயர் எச்சத்தின்பின் இயல்பு.]
(3.) பொன்போன்றன நகர்கள்; சான்றன பறவைகள்............. } [வினைமுற்றின்பின் இயல்பு.]
(4.) தனதான்கள்.......... [ஆறன் உருபின்பின் இயல்பு.]
(5.) பலசொற்கள் .... [அஃறிணைப்பன்மையின்பின்இயல்பு.]
(6.) அம்ம! கொற்றா...... [அம்மவின்பின் இயல்பு.]

[உயிர். சூ. 17.]

☞ சிறப்புவிதிகளில் க, ச, த, ப, இயல்பாயும் விகற்பமாயும் வரும் எனச்சொன்ன வேறு சிலவற்றிற்கு உதாரணம்:—

(1) பலபல, பற்பல; சிலசில, சிற்சில,
பல + சாலை = பலசாலை, பல்சாலை;
சில + யானை = சிலயானை, சில்யானை.
[பலப்பல, சிலச்சில என்றும் வரும்.]

[உயிர். சூ. 20.]

(2.) ஆ + குறிது = ஆகுறிது; மா + குறிது = மாகுறிது;
கேண்மியா + கொற்று = கேண்மியாகொற்று. ... } [சில ஆ ஈற்றின்பின் இயல்பு.]

(3.) உண்ணூ + குதிரைகள் = உண்ணூகுதிரைகள்...... [எதிர்மறை வினைமுற்று.]

[உயிர். சூ. 21.]

(4.) யானை + குறிது = யானைகுறிது..................... [ஐ யின்பின் இயல்பு.]

(5.) கிளி + குறிது = { கிளிகுறிது.....................
கிளிக்குறிது..................... } [இ காரத்தின்பின் விகற்பம்.]

(6.) தினை + குறிது = { தினைகுறிது.....................
தினைக்குறிது..................... } [ஐ யின்பின் விகற்பம்.]

[உயிர். சூ. 26.]

(7.) பீ + குறிது = பீகுறிது.....................
நீ + குறியை = நீகுறியை.....................
மீ + கண் = மீகண்..................... } [பீ, நீ, மீ யின்பின் இயல்பு.]
[மீ = மேல்.]

[உயிர். சூ 28.]

உகரஈற்றுட் சிலவற்றின்பின் வல்லினம் புணர்வது.

59. சில உகரஇற்றுச் சொற்களோடு க, ச, த, ப க்கள் புணரும் வகை.—THE COMBINATION OF CERTAIN WORDS ENDING IN உ WITH க, ச, த, AND ப. [EXCEPTION TO 57.]

மூன்றா றுருபெண் வினைத்தொகை சுட்டீ
றாகும்உகர முன்னர் இயல்பாம். [உயிர். சூ. 29.]

[உகரஈற்று மூன்றும் உருபு முதலியவற்றின்பின், வல்லினம் இயல்பாய் வரும்.]

(உதாரணம்.)

(1.) அவனொடுபோ.... [உ இற்று மூன்றும் உருபின்பின் இயல்பு.]

(2.) சாத்தனதுதலை .... [உ இற்று ஆறும் உருபின்பின் இயல்பு.]

(3.) ஒருகை, இருசெவி. [எண்களின்பின் இயல்பு.]

(4.) வருபுனல், தரு
சோறு........ } [வினைத்தொகையின்பின் இயல்பு.]

(5.) அதுகுறிது... ..... [அல்வழியில், சுட்டின்பின் இயல்பு.]

(6.) இதுபொறுத்தான்... [வேற்றுமையில், சுட்டின்பின் இயல்பு.]

60. THE COMBINATION OF CERTAIN WORDS ENDING IN SHORTENED உ WITH க, ச, த, AND ப. [EXCEPTION TO 57.]

வன்றொடர் அல்லன முன்மிகா அல்வழி.

[உயிர். சூ. 31.]

[வன்றொடர் அல்லாத மற்றைத் தொடர்களின்பின் அல்வழியில் வருகிற வல்லினம் இயல்பாம்.]

(உதாரணம்.)

(1) நாகுகடிது. [நெடிற்றொடர்க்குற்றியல் உவ்வின்பின் இயல்பு.]

[மற்றைத் தொடர்களின் பின்னும் அல்வழியில் மிகாமை ஆராய்ந்துணர்க.]

---

61. [EXCEPTION TO 57.]

இடைத்தொடர் ஆய்தத் தொடர்ஒற் றிடையின்
மிகாநெடில் உயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை.

[உயிர். சூ. 32.]

[இடைத்தொடர், ஆய்தத்தொடர், ஒற்றிடையில் மிகாத நெடிற்றொடர், உயிர்த்தொடர், ஆகிய இவற்றின்பின், வேற்றுமைவழியில் வல்லினம் இயல்பாய் வரும்.]

(உதாரணம்.)

(1.) நாகுகடுமை....... { ஒற்று இடையில்மிகாத நெடிற்றொடரின் பின், வேற்றுமையில் இயல்பு.

வரகுகதிர்.... [சாரியைபெறுமல் உயிர்த்தொடரில் இயல்பு.]

[இடை எழுத்தும் ஆய்தமும் தொடர்ந்த குற்றியல் உவ்வின் பின் மிகாமை ஆராய்ந்து கொள்க.]

---

62. SHORTENED உ IN டு AND று PRECEDED BY LONG OR SHORT VOWELS. [EXCEPTION TO 57.]

நெடிலொ டுயிர்த்தொடர்க் குற்றுக ரங்களுட்
டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே.

[உயி. சூ 33.]

[நெடில்தொடர், உயிர்த்தொடர், ஆகிய குற்றியல் உகரங்களையுடைய மொழிகளுள், அந்த உகரம் ஏறி நிற்கும் ட, ற, வேற்றுமையில் பெரும்பாலும் இரட்டிக்கும்.]

(உ-ம்.) (1.) ஆடு + கால் = ஆட்டுக்கால்... } [நெடில் தொடரில்
நீறு + பை = நீற்றுப்பை..... } ட, ற, இரட்டின.]

(2.) முருடு + கால் = முருட்டுக்கால் } [உயிர்த் தொடரில்
கயிறு + முடி = கயிற்றுமுடி.... } ட, ற, இரட்டின.]

☞ "மிகவே" என்றதனால், பின்வருபவைகளும் அமையும்:—

(உ-ம்.) (1.) "காவிரி புரக்கும் நாடுகிழ வோனே." [வேற்றுமையில் இரட்டாமை]

(2.) காடு + அரண் = காட்டரண்...... } [அல்வழியில் இரட்டின.]
களிறு + யானை = களிற்றியானை ..... }

(3.) வெருகு + கண் = வெருக்குக்கண்.... } [இருவழியிலும் வேறு ஒற்று
எருது + மாடு = எருத்துமாடு....... } இரட்டின.]

——»»««——

63. வல்லினம் மெல்லினம் ஆதல்.—SOME SOFT CONSONANTS ARE CHANGED INTO HARD CONSONANTS. [EXCEPTION TO 57.]

மென்றொடர் மொழியுட் சிலவேற் றுமையில்
தம்மின வன்றொடர் ஆகா மன்னே. [உயிர். சூ. 34.]

[மென்றொடர்க் குற்றியல் உகரமொழிகளிற் சில மொழிகள், வேற்றுமை வழியில், தமக்கினமான வன்றொடராதலை யொழிந்தன பெரும்பாலன.]

[மென்றொடரில் சில வன்றொடராம், பல ஆகாவாம் என்பது கருத்து.]

(உ-ம்.) மருந்து + பை = மருத்துப்பை } [மெல்லினம் வல்லினமானது.]
இரும்பு + தூண் = இருப்புத்தூண் }
கன்று + ஆ = கற்று }

"குடிகொன் றிறைகொள்ளுங் கோமகற்குக் கற்று
மடிகொன்று பால்கொளலு மாண்பே." [நீதிநெறி. 29.]

☞ "மன்" என்றதாற் பின்வருவதையுங்கொள்க:

அன்பு + தளை = அற்புத்தளை........ [அல்வழியில் அருகிவன்றொடராதல்.]

எழுத்ததிகாரம்.

IV-வது: மெய்யீற்றுப் புணரியல்.

OF THE COMBINATION OF CONSONANT-FINALS.

மெய்யீற்றுச் சிறப்புப்புணர்ச்சி.

64. THE COMBINATION OF VOWELS WITH CONSONANTS.
[GENERAL RULE.]

உடல்மேல் உயிர்வந் தொன்றுவ தியல்பே. [மெய்.சூ.1.]

[நிலைமொழி இறுதியில் நின்ற மெய்யின்மேல், வருமொழி முதலில்நின்ற உயிர்வந்துசேர்ந்து நடப்பது, இயல்புப் புணர்ச்சியாம்.]

(உ-ம்.) அவன்+அழகன்=அவனழகன்.

65. CONSONANTS AFTER SINGLE SHORT LETTERS.
[EXCEPTION TO 64.]

தனிக்குறில் முன்ஒற் றுயிர்வரின் இரட்டும்.
[மெய். சூ. 2.]

[தனிக் குற்றெழுத்தின் பின்னின்ற ஒற்றானது, உயிர்வந்தால், இரட்டித்து நிற்கும்.]

(உ-ம்.) பொன்+அழகு=பொன்னழகு.... [ன இரட்டியது.]

66. ணகர, னகர, இற்றுச்சொற்களின் புணர்ச்சி.

THE COMBINATION OF ண, ன FINALS WITH CONSONANTS.

ணனவல் லினம்வரட் டறவும் பிறவரின்
இயல்பும் ஆகும் வேற்றுமைக் கல்வழிக்
கனைத்துமெய் வரினும் இயல்பா கும்மே. [மெய். சூ. 6.]

[ண, ன, என்னும் மெய்கள் வேற்றுமையில் வல்லினம் வந்தால், முறையே ட, ற, ஒற்றுகள் ஆம்; மெல்லினமும், இடையினமும் வந்தால், இயல்பாம். அல்வழியில் எவ்வகை மெய் வந்தாலும், இயல்பே ஆம்.]

(உதாரணம்.)

(1.)	மண்	+	பகைஞன்	=	மட்பகைஞன்...	[வேற்றுமையில் திரிபு.]
	சிறுகண்	+	களிறு	=	சிறுகட்களிறு....	
	பொன்	+	பலகை	=	பொற்பலகை..	
(2.)	கண்	+	மென்மை	=	கண்மென்மை..	[வேற்றுமையில் இயல்பு.]
	பொன்	+	வலிமை	=	பொன்வலிமை.	
(3.)	விண்	+	குறிது	=	விண்குறிது......	[அல்வழியில் இயல்பு.]
	கண்	+	மெலிது	=	கண்மெலிது....	
	பொன்	+	வலிது	=	பொன்வலிது....	

---

67. ண, ன, இற்றுப்புணர்ச்சி.—ண AND ன, NOT OCCURRING AFTER SINGLE SHORT LETTERS, DROPPED BEFORE ந.

குறில்அணை வில்லா ணனக்கள் வந்த
நகரம் திரிந்துழி நண்ணும் கேடே. [மெய். சூ 7.]

[தனிக்குறில் ஒன்றுதவிர, ஒரு மொழி, தொடர்மொழிகளைச் சார்ந்த ண, ன, ஆனவை வருமொழிக்கு முதலில் வந்த ந, மயக்க விதி இல்லாததினால், திரிந்த இடத்தில் கெடும்.]

(உதாரணம்.)

தூண் + நன்று	= தூணன்று........	[நெடிலின் பின்.]
தூண் + நன்மை	= தூணன்மை......	
அரசன் + நல்லன்	= அரசனல்லன்.....	[பல குறிலின் பின்.]
அரசன் + நன்மை	= அரசனன்மை.....	
பசுமண் + நன்று	= பசுமணன்று......	[தொடர்மொழியின்பின்.]
செம்பொன் + நன்மை	= செம்பொனன்மை.	

68. மவ்வீற்றுப் புணர்ச்சி.

ம FINALS UNITE WITH ALL INITIALS. [GENERAL RULE.]

மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்
வன்மைக் கினமாத் திரிபவும் ஆகும். [மெய். சூ. 16.]

[மவ்வீற்றுச் சொற்கள் இறுதியில் உள்ள மகர ஒற்று கெட, உயிர் ஈறுபோல் புணர்வனவும், வல்லினம் வந்தால், கெடாமல் அவற்றிற்கு இனமாகத் திரிவனவும்ஆம்.]

பொதுவாய்ச் சொன்னதனால் அல்வழி, வேற்றுமை, இரண்டிற்கும் இவ்விலக்கணம் அமையும்.

(உ-ம்.)

(1.)	வட்டம் + ஆழி	= வட்டவாழி....	[அல்வழி.]
	வட்டம் + கடல்	= வட்டக்கடல்...	
	வட்டம் + நேமி	= வட்டநேமி....	
	வட்டம் + வாரி	= வட்டவாரி....	
(2.)	மரம் + அடி	= மரவடி........	[வேற்றுமை வழி.]
	மரம் + கால்	= மரக்கால்.......	
	மரம் + நார்	= மரநார்........	
	மரம் + வேர்	= மரவேர்.......	
	நாம் + கடியம்	= நாங்கடியம்......	[அல்வழி.]
	நம் + கை	= நங்கை.........	[வேற்.வழி.]

☞ "இனமாத்திரிபவும் ஆகும்" என்றதனால்,

நாம் + பெரியம் = நாம்பெரியம் எனப் பல்லின்முன் திரியாமை கொள்க.

69. ய, ர, ழ, இற்றுப்புணர்ச்சி.

THE COMBINATION OF ய, ர, ழ FINALS WITH க, ச, த, AND ப.

யரழ முன்னர்க் கசதப அல்வழி
இயல்பும் மிகலும் ஆகும் வேற்றுமை
மிகலும் இனத்தோ டுறழ்தலும் விதிமேல். [மெய்.சூ.21.]

[ய, ர, ழ, ஆகிய மூன்று ஈற்றின் பின்னும், க, ச, த, ப க்கள் வந்தால் அல்வழியில் இயல்பாதலும், மிகுதலும், வேற்றுமையில் மிகுதலும், வல்லினமாவது மெல்லினமாவது மிகுதலும், விதிஆம்.]

(உ-ம்.) (1.) வேய் + கடிது = வேய்கடிது ....
வேர் + சிறிது = வேர்சிறிது .....
வீழ் + பெரிது = வீழ்பெரிது .... [அல்வழியில் இயல்பு.]

(2.) மெய் + கீர்த்தி = மெய்க்கீர்த்தி ...
கார் + பருவம் = கார்ப்பருவம் ...
பூழ் + பறவை = பூழ்ப்பறவை ... [அல்வழியில் மிகுதல்.]

(3.) நாய் + கால் = நாய்க்கால் ....
தேர் + கால் = தேர்க்கால் ....
பூழ் + கால் = பூழ்க்கால் ..... [வேற்றுமையில் மிகுதல்.]

(4.) வேய் + குழல் = வேய்ங்குழல்,
வேய்க்குழல் ....
ஆர் + கோடு = ஆர்ங்கோடு,
ஆர்க்கோடு .... [வேற்றுமையில் ங, க, மிகல்.]

ல, ள, ஈற்றுப்புணர்ச்சி.

---

70. ல, ள, இறு ற, ட உம் ன, ண உம் ஆதல்.

ல AND ள CHANGED INTO ற AND ட, ALSO INTO ன AND ண.

லள வேற் றுமையில் றடவும் அல்வழி
அவற்றோ டுறழ்வும் வலிவரின் ஆம்மெலி
மேவி னணவும் இடைவரின் இயல்பும்
ஆகும் இருவழி யானும் என்ப. [மெய். சூ. 24.]

[ல, ள, ஆகிய இரண்டு ஈறும் வல்லினம் வந்தால் வேற்றுமையில் முறையே ற, ட, ஆம்; அல்வழியில் ற, ட, ஆகாமையும் ஆதலும்ஆம்; இரண்டுவழியிலும் மெல்லினம் வந்தால் ன, ண, ஆம்; இடைஇனம் வந்தால் இயல்பு ஆம் என்று சொல்லுவர் புலவர்.]

(உதாரணம்.)

(1.) கல் + குறை = கற்குறை...... [வேற்றுமையில் றவ்வானது.]
முள் + குறை = முட்குறை... [வேற்றுமையில் டவ்வானது.]

(2.) கல் + குறிது = கல்குறிது, கற்குறிது.. } [அல்வழியில் உறழ்வு.]
முள் + சிறிது = முள்சிறிது, முட்சிறிது } [அல்வழியில் உறழ்வு.]

(3.) கல் + முனை = கன்முனை ..... [வேற்றுமையில் மவ்வர, னவ்வானது.]
முள் + முனை = முண்முனை... [வேற்றுமையில் மவ்வர, ணவ்வானது.]

(4.) கல் + மலிந்தது = கன்மலிந்தது. [அல்வழியில் மவ்வர, னவ்வானது.]
முள் + முறிந்தது = முண்முறிந்தது ... } [அல்வழியில் மவ்வர, ணவ்வானது.]

(5.) கல் + யாது = கல்யாது .... [அல்வழியில் யவ்வர, இயல்பு.]
கல் + யாப்பு = கல்யாப்பு..... [வேற்றுமையில் யவ்வர, இயல்பு.]

---

71. த, ந, முன்னும் வல்லினத்தின் முன்னும் நின்ற ல, ள.

ல AND ள BEFORE த, ந, AND HARD CONSONANTS.

குறில்செறி யாலள அல்வழி வந்த
தகரம் திரிந்தபின் கேடுமீ ரிடத்தும்
வருநத் திரிந்தபின் மாய்வும் வலிவரின்
இயல்பும் திரிபும் ஆவன உளபிற. [மெய் சூ. 26.]

[தனிக்குறில் அல்லாத மற்றை எழுத்துகளைச் சார்ந்துவரும் ல, ள, ஆனவை, அல்வழியில் வந்த தகரந் திரிந்த இடத்தில்

கெடுதலும், இருவழியிலும் வந்த நகரந் திரியுமிடத்தில் கெடுதலும், வல்லினம்வந்தால் அல்வழியில் உறழாமல் இயல்பாதலும், திரிதலும், வேற்றுமையில் திரியாமல் இயல்பாதலும், உண்டு.]

(உதாரணம்.)

(1.) ஆல் + தீது = ஆறீது ...... [அல்வழியில் ல கெட்டது.]
வாள் + தீது = வாடீது...... [அல்வழியில் ள கெட்டது.]

(2.) ஆல் + நன்று = ஆனன்று .... [அல்வழியில் ல கெட்டது.]
வாள் + நன்று = வாணன்று.... [அல்வழியில் ள கெட்டது.]

(3.) ஆல் + நன்மை = ஆனன்மை.... [வேற்றுமையில் ல கெட்டது.]
வாள் + நன்மை = வாணன்மை. [வேற்றுமையில் ள கெட்டது.]

(4.) கால் + கடிது = கால்கடிது ... [லவ்வின்பின் கவ்வர, இயல்பு.]
தேள் + சிறிது = தேள்சிறிது... [ளவ்வின்பின் சவ்வர, இயல்பு.]

(5.) வேல் + படை = வேற்படை.
வாள் + படை = வாட்படை.
[லவ்வின் பின்னும் ளவ்வின்பின்னும் பவ்வரத், திரிபு. இவை அல்வழி.]

(6.) கால்குறித்தோடியது.........
வாள்போழ்ந்திட்டமறவர்......
[வேற்றுமையில் இயல்பு.]

---

72. *த* AND *ந* AFTER *ன, ல, ண,* AND *ள*, CHANGED INTO *ற, ன,* AND *ட, ண,* RESPECTIVELY.

னலமுன் றனவும் ணளமுன் டணவும்
ஆகும் தநக்கள் ஆயும் காலே. [மெய். சூ. 34.]

[ன, ல, ஆகிய மெய்களின் பின்வரும் தவ்வானது றவ்வாம்; அவற்றின் பின்வரும் நவ்வானது னவ்வாம்; ண, ள, ஆகிய மெய்களின் பின்வரும் தவ்வானது டவ்வாம்; அவற்றின் பின்வரும் நவ்வானது ணவ்வாம், ஆராயுங்காலத்தில்.]

(உதாரணம்.)

(1.) பொன் + தீது, நன்று = பொன்றீது, பொன்னன்று. [த், ந்.]
கல் + தீது, நன்று = கற்றீது, கன்னன்று...... [த், ந்.]

(2.) மண் + தீது, நன்று = மண்டீது, மண்ணன்று.... [த், ந்.]
முள் + தீது, நன்று = முட்டீது, முண்ணன்று... [த், ந்.]

[வேற்றுமையிலும் உதாரணம் இவ்வாறே அமைத்துக்கொள்க.]

---

73. ஒரு புறனடை.—A REMARK.

இடைஉரி வடசொலின் இயம்பிய கொளாதவும்
போலியும் மரூஉம் பொருந்திய ஆற்றிற்
கியையப் புணர்த்தல் யாவர்க்கும் நெறியே.
[மெய். சூ. 36.]

[இடை, உரி, வடசொல், ஆகிய இவற்றுள் உயிர்ஈற்றுப் புணரியலிலும், மெய்ஈற்றுப் புணரியலிலும் தோன்றல், திரிதல், கெடுதல், இயல்பு, என்று சொல்லிய புணர்ச்சி இலக்கணங்கள் பொருந்தாமல் வேறுபட்டுவருவனவும், இலக்கணப்போலி மொழிகளும், மரூஉமொழிகளும், இருவகை வழக்கிலும் நடக்கின்ற முறைமைக்கு இணங்கும்படி புணர்த்தல், அறிவுடையோர் எல்லார்க்கும் முறைமை.]

(உதாரணம்.)

(1.) ஆ + ன் + கன்று = ஆன்கன்று....
வண்டு + இன் + கால் = வண்டின்கால்.
} வேற்றுமைப் புணர்ச்சியில் சாரியை இயல்பாயின.

(2.) மழ + களிறு = மழகளிறு.....
} அகரஇற்றுஉரிச்சொல்லின்பின் வல்லினம் இயல்பானது.

(3.) ஆதி + பகவன் = ஆதிபகவன்;
கங்கா + சேனை = கங்காசேனை.

[நிலைவரு மொழிகளிரண்டும் வடசொல்லாதலின், உயிர்ஈற்றின்பின் வல்லெழுத்து இயல்பாயின. போலிமுதலியவற்றிற்கு உதாரணம் மேலதிகாரத்தில் காண்க.]

☞ இச்சூத்திரத்தினால், தீர்க்கசந்தி, குணசந்தி, விருத்திசந்தி, ஆகிய இவைகளும் அமையும்: *

I. தீர்க்கசந்தி.

(1.) அ, ஆ வின்பின் அ, ஆ, வந்தால், இரண்டுங்கெட, ஆ தோன்றும்:—

(உ-ம்.) (1.) குண + அநுபவம் = குணாநுபவம்.
(2.) ஞான + ஆகரன் = ஞானாகரன்.
(3.) தாரா + அதீசன் = தாராதீசன் (= சந்திரன்.)
(4.) தயா + ஆகரன் = தயாகரன்.

(2.) இ, ஈ யின்பின் இ, ஈ, வந்தால், இரண்டுங்கெட, ஈ தோன்றும்:—

(உ-ம்.) (1.) கரி + இந்திரன் = கரீந்திரன்.
(2.) பூமி + ஈசன் = பூமீசன்.
(3.) பிருதிவி + இந்திரன் = பிருதிவீந்திரன்.
(4.) கௌரீ + ஈசன் = கௌரீசன் (= சிவன்.)

(3.) உ, ஊ வின்பின் உ, ஊ, வந்தால், இரண்டுங்கெட, ஊ தோன்றும்:—

(உ-ம்.) (1.) அணு + உற்பத்தி = அணூற்பத்தி.
(2.) குரு + ஊகம் = குரூகம்.
(3.) சயம்பூ + உபாயம் = சயம்பூபாயம்
(4.) சயம்பூ + ஊகம் = சயம்பூகம்.

II. குணசந்தி.

(1.) அ, ஆ வின்பின் இ, ஈ, வந்தால், இரண்டுங்கெட, ஏ தோன்றும்:—

(உ-ம்.) (1.) சர்வ + இந்தனம் (= விறகு) = சர்வேந்தனம்.
(2.) நர + ஈசுவரன் = நரேசுவரன்.
(3.) மகா + ஈசுவரன் = மகேசுவரன்.
(4.) ரமா + ஈசன் = ரமேசன் (= விஷ்ணு.)

[ரமா = இலட்சுமி.]

---

* நிலைமொழி ஈறும், வருமொழி முதலும், பொருந்துவதே சந்தி எனப்படுவது; அப்படியன்றித், தசரதன் புத்திரன் எனவும், விஷ்ணுவைத் தொழுவோன் எனவும், வீரத்தின் தன்மை எனவும், முறையே பொருள்தந்து நிற்குந் தனிமொழிகளாகிய தாசரதி, வைஷ்ணவன், வீரியம், முதலியவற்றை, "ஆதிவிருத்திசந்தி" என்று மயங்கிக் கூறுவாரும் உளர். இவ்வாறு வருதலை வடநூலார் "தத்திதம்" என்பர். இதன் திறம் பிரயோகவிவேகத்திற் விளங்கக்காண்க.

(2.) அ, ஆ வின்பின் உ, ஊ, வந்தால், இரண்டுங்கெட, ஓ தோன்றும்:—

(உ-ம்.) (1.) பாத + உதகம் = பாதோதகம்.
(2.) ஞான + ஊகம் = ஞானோகம்.
(3.) தரா + உதயம் = தரோதயம்.
(4.) தரா + ஊர்ச்சிதன் = தரோர்ச்சிதன்.

III. விருத்திசந்தி.

(1.) அ, ஆ வின்பின் ஏ, ஐ, வந்தால், இரண்டுங்கெட, ஐ தோன்றும்:—

(உ-ம்.) (1.) குண + ஏகத்துவம் = குணைகத்துவம்.
(2.) குண + ஐசுவரியம் = குணைசுவரியம்.
(3.) லோக + ஏகநாதன் = லோகைகநாதன்.
(4.) மகா + ஐக்கியம் = மகைக்கியம்.

(2.) அ, ஆ வின்பின் ஓ, ஔ, வந்தால், இரண்டுங்கெட, ஔ தோன்றும்:—

(உ-ம்.) (1.) வர (= மேலான) + ஓடதி = வௌடதி.
(2.) வர + ஔடதம் = வௌடதம்.
(3.) தரா + ஓடதி = தரௌடதி.
(4.) தேவதா + ஔடதம் = தேவதௌடதம்.

எ ழு த் த தி கா ர ம்.

V-வது: உருபுப்புணரியல்.

COMBINATION OF CASUAL TERMINATIONS.

உ ரு பு க ள்.

74. POSITION AND USE OF CASUAL TERMINATIONS.

பெயர்வழித் தம்பொருள் தரவரும் உருபே.
[உருபு. சூ. 2.]

[வேற்றுமை உருபுகள் தம்பொருளைத் தரப்பெயர்க்குப் பின்வரும்.]

(உ-ம்.) மணி அடித்தான் .... [மணியை.]

75. *இவ்வுருபுகள் பெயர்களோடு புணர்தல்.*

THEIR COMBINATION WITH NOUNS.

*ஒற்றுயிர் முதலீற் றுருபுகள் புணர்ச்சியின்
ஒக்குமன் அப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே.*
[உருபு. சூ. 3.]

[முதலிலும் ஈற்றிலும் மெய்யையும் உயிரையும் உடைய வேற்றுமை உருபுகள் ஆறும் நிலைமொழியோடும் வருமொழியோடும் புணரும்பொழுது, வேற்றுமைப்புணர்ச்சியில் இயல்பொடு விகாரமாய்ப் புணர்ந்த ஒற்றுயிர் முதலீற்றுப்பெயர்களைப் பெரும்பாலும் ஒத்துவரும்.]

(உதாரணம்.)

(1.) நம்பி + கண் (உருபு) + வாழ்வு = நம்பிகண் வாழ்வு.

[51-ம் சூத்திரத்தின்படி முதலும், 66-ம் சூத்திரத்தின்படி ஈறும், "கண்" உருபு இயல்பாயிற்று.]

(2.) உறி + கண் (உருபு) + தயிர் = உறிக்கட்டயிர்.

[57-ம் சூத்திரத்தின்படி முதலும், 66-ம் சூத்திரத்தின்படி ஈறும், "கண்" உருபு விகாரப்பட்டது.

(3.) பழி + கு (உருபு) + அஞ்சி = பழிக்கஞ்சி.

[57-ம், 56-ம் சூத்திரங்களின்படி குவ்வுருபு விகாரப்பட்டது.]

(4.) "வெற்றுரைக்குண்டோர் வலியுடைமை." [நீதிநெறி. 21.]

[உரை + கு + உண்டு = உரைக்குண்டு.]

---

76. சாரியை வருதலும், வாராமையும், விகற்பமும்.—EUPHONIC INCREMENTS MAY OR MAY NOT OCCUR.

பதம்முன் விகுதியும் பதமும் உருபும்
புணர்வழி ஒன்றும் பலவும் சாரியை
வருதலும் தவிர்தலும் விகற்பமும் ஆகும். [உருபு. சூ. 4.]

[பதத்தின்பின், விகுதி ஆவது, பதம் ஆவது, உருபு ஆவது, புணரும்போது, சாரியை ஒன்று ஆயினும் பல ஆயினும், வருதலும், வராமையும், இவ்விரண்டும் ஆகிய விகற்பமும் ஆகும்.]

(உதாரணம்.)

(1.) சென்றனன் ...... [சாரியை வந்தது.]
சென்றான் .... [சாரியை வரவில்லை.]
சென்றன, சென்ற.. [விகற்பம்.]
[விகுதிப் புணர்ச்சியில்.]

(2.) புளியங்காய் ...... [சாரியை வந்தது.]
புளிக்கறி .... [சாரியைவரவில்லை.]
நெல்லின்குப்பை, நெற்குப்பை .... [விகற்பம்.]
[பதப் புணர்ச்சியில்.]

(3.) அவற்றை.......... [சாரியை வந்தது.]
தன்னை............. [சாரியைவரவில்லை.]
ஆனை, ஆவை...... [விகற்பம்.]
[உருபுப் புணர்ச்சியில்.]

(4.) ஆவினுக்கு .... [பலசாரியை வந்தன.]

சாரியை.

77. THE SEVENTEEN GENERAL INCREMENTS.

அன் ஆன் இன் அல் அற்றிற் றத்தம்
தம் நம் நும் ஏ அ உ ஐ குன
இன்ன பிறவும் பொதுச்சா ரியையே. [உருபு. சூ. 5.]

[அன், ஆன், முதலிய பதினேழும், இவைபோல்வன பிறவும், விகுதி, பதம், உருபு, என்னும் மூன்று புணர்ச்சியிலும், தனிமொழிகளிலும், வருகிறதினால், பொதுச்சாரியை ஆகும்.]

பெயர்கள் வேற்றுமை உருபு புணரும்போது வரும்விதம்.

78. "எல்லாம்" என்னும் மொழி வேற்றுமை உருபு புணரும்போது வரும்விதம்.—THE WORD எல்லாம் HOW DECLINED.

எல்லாம் என்ப திழிதிணை ஆயின்
அற்றோ டுருபின் மேலும் உறுமே
அன்றேல் நம்இடை அடைந்தற் றுகும். [உருபு. சூ. 6.]

["எல்லாம்" என்னும் பொதுப்பெயர், அஃறிணையில் வரும்போது, அதனோடு ஆறு உருபும் புணர்ந்தால், இடை

யில் அற்றுச்சாரியையும், உருபின்மேல் முற்றும்மையும், பெறும்; உயர்திணையில் வரும்போது, இடையில் நம்முச்சாரியையும், உருபின்மேல் முற்றும்மையும், பெறும்.]

(உ-ம்.) (1.) எல்லாவற்றையும், எல்லாவற்றினும்.
(2.) எல்லாநம்மையும், எல்லாநம்மாலும்.

---

79. THE DECLENSION OF *எல்லாரும்* AND *எல்லீரும்*.

எல்லாரும் எல்லீரும் என்பவற் றும்மை
தள்ளி நிரலே தம்நும் சாரப்
புல்லும் உருபின் பின்னர் உம்மே. [உருபு. சூ 7.]

["எல்லாரும், எல்லீரும்" என்னும் பெயர்களோடு ஆறுருபும் புணரும்போது, அவ்விரு பெயரின் ஈற்றிலுள்ள "உம்" என்னுமிடைச்சொல்லை நீக்கிப், படர்க்கைப் பெயருக்குத் "தம்" என்னுஞ் சாரியையும், முன்னிலைப்பெயர்க்கு "நும்" என்னுஞ் சாரியையும், சார்ந்துவர, உருபின் பின்னே "உம்" வந்து பொருந்தும்.]

(உ-ம்.) (1.) எல்லார்தம்மையும், எல்லாரையும்.
(2.) எல்லீர் நும்மையும், எல்லீரையும்.

☞ நந்தம்மை நுந்தம்மை என, "தம்" என்னுஞ் சாரியை, தன்மைமுன்னிலைகளினும் வருதல், இடவழுவமைதி.

---

80. THE DECLENSION OF *தான்*, *தாம்*, *நாம்*, *யான்*, *யாம்*, *நீ*, AND *நீர்*.

தான் தாம் நாம் முதல் குறுகும் யான் யாம்
நீ நீர் என் எம் நின் நும் ஆம்பிற
குவ்வின் அவ்வரும் நான்கா றிரட்டல. [உருபு. சூ. 8.]

[தான், தாம், நாம், ஆகிய மூன்று பெயரும், வேற்றுமை உருபைப் பெறும்போது தன், தம், நம், என நெடில் முதல் குறுகும்; யான், யாம், நீ, நீர், ஆகிய நான்கு பெயர்களும், வேற்றுமை உருபைப் பெறும்போது, என், எம், நின், நும், என வரும்; இவ்வேழு பெயரோடும் கு உருபு புணர்ந்தால், நடுவே அகரச்சாரியை வரும்; குவ்வுருபின் அகரச் சாரியை வந்தாலும், ஆறும் வேற்றுமை உருபுகள் வந்தாலும், இவ்வேழு சொற்களிலும் இறுதியாகிய தனிக்குறில் முன் ஒற்றுகள் இரட்டாவாம்.]

☞ (1.) "பிற" என்றதனால் பின்வருவனவுங் கொள்க:—

நீ [1-ம் வேற்றுமை.], உன்னை [2-ம் வேற்றுமை.]
நீர் [1-ம் வேற்றுமை.], உம்மை [2-ம் வேற்றுமை.]

[மற்றவைகளும் உருபேற்று இவ்வாறே வரும்.]

(2.) நீ என்பது நுன் என அருமையாய் வருதலும் உண்டு:

(உ-ம்.) "நோய்போ மருந்தென்று நுன்றிரு வாய்மொழி நோக்குவித்து."

[கம்பர்-சடகோபர் நூற்றந்தாதி.]

---

81. வேற்றுமை உருபு, வகரஇற்றுச்சுட்டோடு புணரும்போது, வரும் விதம்.—THE DECLENSION OF வ ENDING DEMONSTRATIVES.

வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே. [உருபு. சூ. 11.]

[வ ஈற்று மூன்று சுட்டுப்பெயருக்கும், வேற்றுமை உருபுகள் புணரும் இடத்தில், அற்றுச்சாரியை பொருந்துதல் முறைமையாம்.]

(உ-ம்.) அவற்றை, இவற்றை, உவற்றை.

☞ (1.) "வழியே" என்றதனால், அவற்றினை, இவற்றினை, என இன் சாரியை பெறுதலும், தனிக்குறில் முன் ஒற்றுயிர் வந்த இடத்தில் இரட்டாமையும், அமையும் எனக் கொள்க.

(2.) அற்றுச்சாரியை இல்லையாயின் தொகுத்தல் எனக்கொள்க:

(உ-ம்.) "குழைவிழும் அவில்விழுங் கொடித்திண் டேர்களே." [இரா. 1. 4. 55.]

[அவ் + இல் = அவில்.]

---

82. THE DECLENSION OF அஃது, இஃது, AND உஃது.

சுட்டின்முன் ஆய்தம் அன்வரிற் கெடுமே. [உருபு. சூ. 12.]

[அஃது, இஃது, உஃது, என்னும் இம்மூன்று சுட்டுப்பெயர்களோடு உருபுகள் புணரும்போது, "அன்" சாரியை வந்தால், ஆய்தங்கெடும்.]

(உ-ம்.) (1.) அஃது + அன் + ஐ = அதனை.
(2.) இஃது + அன் + ஆல் = இதனால்.

☞ (1.) ஆய்தம் இல்லாத அது முதலிய சுட்டுப்பெயர்கட்கும் இவ்விதியே அமையும்:

(உ-ம்.) அது + அன் + ஐ = அதனை.

(2.) "வரின்" என்றதால், அன் சாரியைக்குப்பின் உகரச் சாரியையும் வரும் எனக்கொள்க:

(உ-ம்.) அதனுக்கு, இதனுக்கு.

---

83. அத்து DROPS ITS INITIAL AFTER அ.

அத்தின் அகரம் அகரமுனை இல்லை. [உருபு. சூ. 13.]

["அத்து" சாரியை அகர உயிர் ஈற்றின் பின்வரின், அதன் முதல் எழுத்தாகிய அகரம் கெடும்.]

(உதாரணம்.)

(1.) மரம் + அத்து + ஐ = மர + (அ)த்து + ஐ = மரத்தை.
(2.) மக + (அ)த்து + கை = மகத்துக்கை.

84. *சாரியை காணும் வகை.*—HOW THE INCREMENT IS TO BE DISCOVERED.

இதற்கிது சாரியை எனின்அள வின்மையின்
விகுதியும் பதமும் உருபும் பகுத்திடை
நின்ற எழுத்தும் பதமும் இயற்கையும்
ஒன்ற உணர்த்தல் உரவோர் நெறியே. [உருபு. சூ. 14.]

[*விகுதி முதலிய புணர்ச்சிகளில், இதற்கு இது சாரியை என்று அளவுசெய்து விதித்தனவற்றுள்ளும், ஒழிந்தனவற்றுள்ளும், தனித்தனிச் சொல்லத்தொடங்கினால் அளவுபடாததலால், விகுதி முதலிய புணர்ச்சிகள் வரும் இடத்தில், அப்புணர்ச்சிகளைப் பகுத்து, எ, அ, முதலிய எழுத்துச்சாரியைகளையும், அன், ஆன், முதலிய பதச்சாரியைகளையும், இவ்விரண்டு சாரியையும் இல்லாமல் நிற்கிற இயல்பையும், தெரிய அறிவித்தல், பெரியோருடைய நெறியாம்.*]

புறனடை.

85. *இரண்டாம் வேற்றுமையைக்குறித்து.*—PECULIARITIES OF THE SECOND CASE.

இயல்பின் விகாரமும் விகாரத் தியல்பும்
உயர்திணை இடத்து விரிந்தும் தொக்கும்
விரவுப் பெயரின் விரிந்து நின்றும்
அன்ன பிறவும் ஆகும் ஐ உருபே. [உருபு. சூ. 16.]

[*பொது விதியோடு முடிதலே அன்றி, அப்படி விதித்த இயல்பிலே விகாரமாயும், விகாரத்திலே இயல்பாயும், உயர்திணையில் விரிந்தும் மறைந்தும், பொதுப்பெயரில் விரிந்தும் மறைந்தும், இவைபோல்வன பிறவேறுபாடாயும் வரும், இரண்டாம் வேற்றுமைப்புணர்ச்சி.*]

(உதாரணம்.)

(1.) "நிற்புறம் காக்க" .... [இயல்பில் விகாரம்.]
(2.) மண்கொணர்ந்தான் .... [விகாரத்தில் இயல்பு.]
(3.) நம்பியைக் கொணர்ந்தான், கொற்றனைக் கொணர்ந்தான். } [உயர்திணை, விரவுப்பெயர்களில், விரிந்தன.]
(4.) பல்லோர் அறியுஞ்சொல், ஆண்பெற்றாள் .... } [உயர்திணை, விரவுப்பெயர்களில், மறைந்தன.]

☞ "பிறவும்" என்றதனால், பின்வருவனவும் அமையும்:—

(1.) வரகுகட்டினான் .... [இயல்பில் இயல்பு.]
(2.) பலாக்குறைத்தான் .... [விகாரத்தில் விகாரம்.]
(3.) தற்கொண்டான் .... [உறழ்ச்சியில்திரிதல்.]
(4.) உதுகாண் உதுக்காண் } .... [இயல்பில் விகற்பம்.]

சொல்லதிகாரம்.

ETYMOLOGY.

I-வது: பெயரியல். — OF NOUNS.

மொழி.

86. *சொல் இன்னதென்பது.—சொல்* DEFINED.

ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி என்று
இருதிணை ஐம்பாற் பொருளையும் தன்னையும்
மூவகை இடத்தும் வழக்கொடு செய்யுளின்
வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே.

[பெயர். சூ. 2.]

[ஒருமொழி, தொடர்மொழி, பொதுமொழி, என மூன்று பிரிவை உடையதாகி, இருதிணை ஆகிய ஐம்பாற் பொருளையும், அப்பொருளை அன்றித் தன்னையும், மூன்றிடத்திலும், வழக்கிலும் செய்யுளிலும், வெளிப்படையாலும் குறிப்பினாலும் விளக்குவது, சொல்லாகும்.]

87. *சொல் மூன்றாகும் வகை.*—THE THREE KINDS OF *சொல்.*

ஒருமொழி ஒருபொரு ளனவாம் தொடர்மொழி
பலபொரு ளனபொது இருமையும் ஏற்பன.

[பெயர். சூ 3.]

[ஒருமொழிகளாவன, ஒரு பொருளைத் தருவனவாம். தொடர்மொழிகளாவன, பல பொருளைத் தருவன. பொதுமொழிகளாவன, ஒரு மொழிக்கும், தொடர்மொழிக்கும், பொதுவாய் நிற்பன.]

*5

(உதாரணம்.)

(1.) நிலம், நட, உறு, மன் .... [ஒருமொழிகள்.]
(2.) நிலம்வலிது, அதுசெய், சாலப்பெயரின். [தொடர்மொழிகள்.]
(3.) எட்டு, தாமரை, வேங்கை .... [பொதுமொழிகள்.]

☞ எட்டு = எள் + து = எள் உண்; எட்டு = 8.

தாமரை = தாவும்மரை; தாமரை = தாமரை என்னும் கொடி.

வேங்கை = வேகும்கை; வேங்கை = ஓர் புலி அல்லது ஓர் மரம்.

திணை.

---

88. உயர்திணை, அஃறிணை.—HIGH CASTE AND NO CASTE NOUNS.

மக்கள் தேவர் நரகர் உயர்திணை
மற்றுயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை. [பெயர்.சூ.4.]

[மக்கள், தேவர், நரகர், ஆகிய இவர்களைக் குறிக்கும் சொல், உயர்திணைச் சொல்லாம்; இவர்கள்தவிர, உயிருள்ளவைகளையும், இல்லாதவைகளையும், குறிக்கும் சொல், அஃறிணைச் சொல்லாம்.]

---

89. உயர்திணையின் வகை.—DIVISIONS OF HIGH CASTE NOUNS.

ஆண் பெண் பலர் என முப்பாற் றுயர்திணை.
[பெயர். சூ. 5.]

[உயர்திணைஆனது, ஆண், பெண், பலர், என மூன்று பாலை உடையது.]

(உ-ம்.) உயர்திணை.
(1.) ஆண்பால் ...... மகன், அரசன்.
(2.) பெண்பால் ..... மகள், அரசி.
(3.) பலர்பால் ...... அரசர், புத்திரர்.

90. *அஃறிணையின் வகை.*—DIVISIONS OF NO CASTE NOUNS.

ஒன்றே பலவென் றிருபாற் றஃறிணை. [பெயர். சூ. 6.]

[*அஃறிணை ஆனது, ஒன்று, பல, என இரண்டுபாலை உடையது.*]

(உ-ம்.) *அஃறிணை.* { (1.) *ஒன்றன்பால்*...... *அது.*
(2.) *பலவின்பால்*...... *அவை, மரங்கள்.*

இடம்.

91. *மூவிடம்.*—THE THREE PERSONS.

தன்மை முன்னிலை படர்க்கைமூ விடனே.
[பெயர். சூ. 9.]

[*மூவிடம் ஆவன:—தன்மை, முன்னிலை, படர்க்கை.*]

(உ-ம்.) (1.) *நான்* [*நடந்தேன்*] .... [*தன்மை.*]
(2.) *நீ* [*நடந்தாய்*] .... [*முன்னிலை.*]
(3.) *அவன்* [*நடந்தான்*]........... [*படர்க்கை.*]

வழக்கு.

92. *வழக்கு இவை என்பது.*—DIVISIONS OF TAMIL USAGES.

இலக்கண முடைய திலக்கணப் போலி
மரூஉஎன் றாகும் மூவகை இயல்பும்
இடக்க ரடக்கல் மங்கலம் குழூஉக்குறி
எனுமுத் தகுதியோ டாறும் வழக்கியல்.
[பெயர். சூ. 10.]

[*இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ, என்று வழங்குகிற மூன்றுவகை இயல்பு வழக்கும், இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி, என்று வழங்குகின்ற மூன்று தகுதி வழக்குடனே, வழக்கிலக்கணம் ஆறும்.*]

[I. இயல்பு வழக்கு.]

(உதாரணம்.)

(1.) நிலம், நீர், தீ .... [இலக்கணமுடையது; அ-து: இலக்கண வழியால் வருவது.]

(2.) முன்றில் [= இல்முன்]...
புறநகர் [= நகர்ப்புறம்]
மீகண் [= கண்மீ].....
[இலக்கணப்போலி; அ-து: இலக்கணம் இல்லை ஆனாலும், இலக்கணமுடையதுபோல் வருவது.]

(3.) அருமந்த பிள்ளை = அருமருந்தன்ன பிள்ளை......
சோணாடு [=சோழநாடு]
[மரூஉ; அ-து: இலக்கணம் சிதைந்து மருவியது.]

[II. தகுதி வழக்கு.]

(உதாரணம்.)

(1.) கால்கழீஇவருதும்...... [இடக்கரடக்கல்; அ-து: சொல்லத்தகாததை மறைத்துச் சொல்வது.]

2.) துஞ்சினார் [=செத்தார்].
திருமுகம் [=ஓலை].....
வெள்ளாடு [=காராடு]....
[மங்கலம்; அ-து: மங்கலம் இல்லாததைத் தவிர்த்து மங்கலமாகச் சொல்வது.]

(3.) பறி [=பொன்]... ....
காரை [=ஆடை]........
சொல்விளம்பி [=கள்]..
[குழூஉக்குறி; அ-து: ஒரு கூட்டத்தார், ஏதாவது ஒரு காரணம் பற்றி, ஒரு பொருளின் சொல்லை ஒழித்து, வேறொரு சொல்லால் சொல்வது.]

வெளிப்படை, குறிப்பு.

93. வெளிப்படை, குறிப்பு.—DIRECT AND INDIRECT EXPRESSIONS.

ஒன்றொழி பொதுச்சொல் விகாரம் தகுதி
ஆகு பெயர்அன் மொழிவினைக் குறிப்பே
முதல்தொகை குறிப்போ டின்ன பிறவும்
குறிப்பின் தருமொழி அல்லன வெளிப்படை.

[பெயர். சூ. 12.]

[இருதிணை ஆண் பெண்ணுள் ஒன்றை ஒழிக்கும் பொதுச் சொல், வலித்தல் முதலிய ஒன்பது விகாரச்சொல், மூன்று தகுதி வழக்குச்சொல், ஆகுபெயர்ச்சொல், அன்மொழித் தொகைச்சொல், வினைக்குறிப்புச்சொல், முதற் குறிப்புச் சொல், தொகைக் குறிப்புச்சொல், இந்த முதல் தொகையல் லாத வேறுவழியால் வரும் குறிப்புச்சொல், ஆகிய இவைக ளும், இவைபோன்ற வேறு சொற்களும், குறிப்பினால் இரு திணை ஐம்பாற் பொருளைத்தரும் சொற்கள்ஆம்; இவை அல் லாத மற்றைச் சொற்கள் எல்லாம், வெளிப்படையால் அப் பொருளைத் தரும் சொற்கள்ஆம்.]

(உதாரணம்.)

(1.) ஆயிரம்மக்கள் பொருதார்.. [உயர்திணை ஆண்பால்.]

[மக்கள், பொதுப்பெயர்; பொருதார், விகுதியால் பொதுவினை.]

(2.) பிறைக்கடை பிறக்கிட.... [பிறங்கிட, விகாரம்.]

(3.) பறி...................... [பொன், தகுதிவழக்கு.]

(4.) புளித்தின்றான்............. [புளியம்பழம், ஆகுபெயர்.]

(5.) முற்றிழாய்!.............. [பெண்ணே! அன்மொழித் தொகை.]

(6.) இவணிப்போதுசெல்வன்.... [வினைக்குறிப்பு.]

(7.) ஆத்திசூடி படித்தான்....... [முதற்குறிப்பு.]

(8.) கண்ணனோடு ஐவர்வந்தார்.. [பாண்டவர், தொகைக்குறிப்பு.]

[மற்றவைகளுக்குதாரணம் ஆராய்ந்துணர்க.]

சொல்.

---

94. சொல் இத்தனை என்பது.—CLASSES OF WORDS.

அதுவே,-இயற்சொல் திரிசொல் இயல்பிற் பெயர்வினை
எனஇரண் டாகும் இடைஉரி அடுத்து
நான்கும்ஆம் திசைவட சொல்லணு காவழி.

[பெயர். சூ. 13.]

[முன் காட்டிய சொல் இயற்சொல், திரிசொல், என் னும் தன்மையை உடைய பெயர்ச்சொல்லும், வினைச்சொல்

லும், என இரண்டாம்; இடைச்சொல்லும், உரிச்சொல்லும், அவற்றுடன் சேர்ந்து, நான்கும்ஆம்; (இப்படி நான்காய் வருவது) திசைச்சொல்லும், வடசொல்லும், அவற்றுடன் சேராதவிடத்து.]

---

95. *இயற்சொல் இவை என்பது.*—ORDINARY TAMIL WORDS.

செந்தமிழ் ஆகித் திரியா தியார்க்கும்
தம்பொருள் விளக்கும் தன்மைய இயற்சொல்.
[பெயர். சூ. 14.]

[செந்தமிழ் நிலத்துமொழி ஆகி, திரிசொல்லைப்போல் ஆகாமல், கற்றோருக்கும் மற்றோருக்கும், தம்பொருளை ஒருசரியாய் விளக்குகின்ற தன்மையை உடைய உலகவழக்கே இயற்சொல்.]

(உ-ம்.) (1.) மண், பொன், மரம் .... [பெயர் இயற்சொல்.]
(2.) நடந்தான், இருப்பான். [வினை இயற்சொல்.]
(3.) அவனை, அவனால்...... [ஐ, ஆல் இடை இயற்சொல்.]
(4.) அழகு, அன்பு .... [உரி இயற்சொல்.]

---

96. *திரிசொல் இவை என்பது.*

SYNONYMS AND WORDS OF SEVERAL SIGNIFICATIONS.

ஒருபொருள் குறித்த பலசொல் ஆகியும்
பலபொருள் குறித்த ஒருசொல் ஆகியும்
அரிதுணர் பொருளன திரிசொல் ஆகும்.
[பெயர். சூ. 15.]

[ஒரு பொருளைக்கருதிய பலசொல் ஆகியும், பலபொருளைக் கருதிய ஒருசொல் ஆகியும், அரிதாகக் கற்றோர் அறிகின்ற பொருளை உடையனவாய் வருவன, திரிசொல்ஆம்.]

(1.) பெயர்.

(உ-ம்.) கிள்ளை, சுகம், தத்தை.

[கிளி என்னும் ஒரு பொருள் குறித்த பலபெயர்த் திரிசொல்.]

வாரணம் [=யானை, சங்கு, கோழி, கவசம்.]
[பலபொருள் குறித்த ஒருபெயர்த் திரிசொல்.]

(2.) வினை.

படர்ந்தான், சென்றான் [=போனான்.]
[ஒருபொருள் குறித்த பலவினைத் திரிசொல்.]

இறுத்தான் [=சொன்னான், வடித்தான்.]
[பலபொருள் குறித்த ஒருவினைத் திரிசொல்.]

(3.) இடை.

சேறும், வருதும் [றும், தும்; தன்மைப் பன்மை விகுதிகள்.]
[ஒருபொருள் குறித்த பலஇடைத் திரிசொல்.]

கொல்.
[இது ஐயப்பொருளில் ஆவது, அசைநிலைப் பொருளில் *ஆவது, வரும் ஆதலால், பல பொருள் குறித்த ஓரிடைத் திரிசொல்.]

(4.) உரி.

சால், உறு, தவ, நனி, கூர், கழி [=மிகல்.]
[ஒருபொருள் குறித்த பலஉரித் திரிசொல்.]

கடி [=மணம், காப்பு, கூர்மை, இன்பம், அச்சம்.]
[பலபொருள் குறித்த ஒருரித் திரிசொல்.]

---

97. திசைச்சொல் இவை என்பது.—WORDS PECULIAR TO CERTAIN DISTRICTS.

செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்
ஒன்பதிற் றிரண்டினில் தமிழ்ஒழி நிலத்தினும்
தங்குறிப் பினவே திசைச்சொல் என்ப. [பெயர். சூ. 16.]

[செந்தமிழ் நிலத்தைச்சேர்ந்த பன்னிரண்டு கொடுந்தமிழ் நிலத்திலும், பதினெட்டு மொழிகளுள், தமிழ் ஒழிந்த மற்றைப் பாஷைகள் வழங்குமிடங்களிலும், உள்ளோரது குறிப்பை உடையனவாய், அவ்விடங்களில் இருந்து செந்தமிழ் நிலத்தில் வந்து வழங்குவன, திசைச்சொல் என்று சொல்வார் புலவர்.]

(உ-ம்.) (1.) தென்பாண்டியில்.... [பசு = பெற்றம்.]
(2.) குட்டநாட்டில்...... [தாய் = தள்ளை.]
(3.) குடநாட்டில்........ [தந்தை = அச்சன்.]

(4.) "திக்கயம் வலியில; தேவர் மெல்லியர்;
முக்கணான் கயிலையு முரணின் றாயது;
மக்களுங் குரங்குமே வலிய வாமெனின்,
அக்கட விராவணற் கமைந்த வாற்றலே." [இரா. உயுத்தகாண்டம்.]

[அக்கட = అక్కడ = அவ்விடம்.]

---

98. வடசொல் இவை என்பது.—SANSCRIT WORDS.

பொதுஎழுத் தானும் சிறப்பெழுத் தானும்
ஈரெழுத் தானும் இயைவன வடசொல்.
[பெயர். சூ. 17.]

[ஆரியத்துக்கும் தமிழுக்கும் பொதுவாகிய எழுத்தாலும், ஆரியத்துக்குமாத்திரமே உரிய சிறப்பெழுத்தாலும், இவ்விரு வகை யெழுத்தாலும், செந்தமிழ்ச் சொல்லைப்போல் வடதிசையில் இருந்து செந்தமிழ் நாட்டில் வந்து வழங்குவன, வடசொல்.]

(உ-ம்.) (1.) அமலம், கமலம்....... [பொதுஎழுத்தால்.]
(2.) சுகி, சுத்தி .... [சிறப்பெழுத்தால்.]
(3.) கடினம், சலம்........ [ஈரெழுத்தால்.]

பெயர்.

99. பெயர்ச்சொல்.—NOUN.

இடுகுறி காரண மரபோ டாக்கம்
தொடர்ந்து தொழில்அல காலம்தோற்றா
வேற்றுமைக் கிடன்ஆய்த் திணைபால் இடத்தொன்
றேற்பவும் பொதுவும் ஆவனபெயரே. [பெயர். சூ. 18.]

[இடுகுறியும் காரணக்குறியும், மரபையும் ஆக்கத்தையும் தொடர்ந்து, வினையால் அணையும் காரணக்குறி அல்லாதவை காலத்தைக் காட்டாமல், எட்டு வேற்றுமையும் சார்ந்து வருதற்கு இடமாய், இருதிணை, ஐம்பால், மூவிடம், ஆகியவற்றுள் ஒன்றை ஆவது, பலவற்றை ஆவது, ஏற்பனவாய் வருவன, பெயர்கள் ஆம்.]

(உதாரணம்.)

(1.) மரம், பனை, பலா.................... [இடுகுறிமரபு.]

(2.) அவன், பறவை, விலங்கு........... [காரணக்குறிமரபு.]

(3.) "பொன்போலும் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே
என்பேதை செல்லற் கியைந்தனளே; மின்போலும்
மானவேல் முட்டைக்கு மாறாய தெவ்வர்போம்
கானவேல் முட்டைக்குங் காடு." [பொய்யாமொழிப் புலவர் பாடல்]

[குமரன் பெயர் = முட்டை; இடுகுறி ஆக்கம்.]

(4.) பொன்னன், பூணன்.......... [காரணக்குறி ஆக்கம்.]

மரபு ஆக்கம் தொடராதவை:—

(5.) மரம்............. .... [இடுகுறிப் பொதுப்பெயர்.]

(6.) பனை.................. [இடுகுறிச் சிறப்புப்பெயர்.]

(7.) அணி = (ஆபரணம்).... [காரணச் சிறப்புப்பெயர்.]

(8.) முடி.................... [காரணச் சிறப்புப்பெயர்.]

(9.) அந்தணன்............. [காரண இடுகுறிப்பெயர்.]

[அந்தணன் = அம் + தண் (மை) + அன் = அழகிய தண்மையை உடையவன்.]

☞ ஆண், பெண், பலர், ஒன்று, பல, என்னும்பாற் பெயர் வரும்விதம்:—

(1.) பொருள்முதலிய ஆறுடன், சுட்டு, வினா, பிற, மற்று, இவைகளின் அடியாகப் பிறந்து, அன், ஆன், விகுதிகளைக்கொண்டு முடியுஞ் சொற்களும், நம்பி, ஆடூஉ, விடலை, கோ, வேள், குரிசில், தோன்றல், முதலிய பெயர்களும், ஆண்பாற் பெயராகும.

(உ-ம்.) நாடன், ஊரான், தையான், செங்கணன், கரியன், ஈவான், அவன், எவன், பிறன், மற்றையான்

(2.) மேற்கூறியவைகள் அடியாகப் பிறந்து, ள், இ, என்னும் விகுதிகளைப் பெற்று வருவனவும், தோழி, செவிலி, மகடூஉ, நங்கை, முதலான பெயர்களும், பெண்பாற் பெயர் ஆம்.

(உ-ம்.) தமள், கருவூரள் ஆதிரையாள், தடங்கண்ணி, பெரியள், ஈவாள், அவள், எவள்.

(3.) அவ்வாறே பிறந்த ரகர இற்றுப்பெயர்களும், கள் என்னும் விகுதி ஏற்றுவருவனவும், பலர்பாற் பெயர்கள் ஆம்.

(உ-ம்.) தமர், கோக்கள், அரசர்கள், எவர், அவர்.

(4.) மேற்காட்டியபடியே பிறந்த துவ்விகுதியை உடைய பெயர்களும், ஒன்று என்னும் பெயரும், ஒன்றன்பாற் பெயராம்.

(உ-ம்.) கரியது, ஒன்று, எது, இது, அஃது.

(5.) முன்சொன்ன வழியே பிறந்து, வை, அ, கள், விகுதிகளைப் பெற்று வருவனவும், ஒன்று அல்லாத எண்ணுகு பெயர்களும், வகர இற்றுச் சுட்டும், உள, இல, பல, சில, முதலிய பெயர்களும், பலவின்பாற் பெயர் ஆம்.

(உ-ம்.) நெடியவை, நெடியன, குதிரைகள், இரண்டு, எவை, இவை, அவ்.

[பெயர். சூ. 19—23.]

100. பால்பகா அஃறிணைப்பெயர்.—NO CASTE NOUNS BOTH SINGULAR AND PLURAL.

பால்பகா அஃறிணைப் பெயர்கள்பாற் பொதுமைய.

[பெயர். சூ. 24.]

[அஃறிணைப் பெயர்களுள் ஒருமை, பன்மை, பகுக்கப்படாத பெயர்கள் எல்லாம், அத்திணையின் இருபாலுக்கும் பொதுவான பெயர்கள் ஆம்.]

(உ-ம்.) (1.) குதிரைவந்தது .... [ஒருமை.]

(2.) குதிரைவந்தன .... [பன்மை.]

101. *தன்மை, முன்னிலை, படர்க்கைப்பெயர்கள்.*

THE PERSONS OF பெயர்.

தன்மை யான் நான் யாம் நாம் முன்னிலை
எல்லீர் நீயிர் நீவிர் நீர் நீ
அல்லன படர்க்கை எல்லாம் எனல்பொது.
[பெயர். சூ. 28.]

[யான், நான், யாம், நாம், இவை தன்மைப்பெயர்கள்; எல்லீர், நீயிர், நீவிர், நீர், நீ, இவை முன்னிலைப்பெயர்கள்; இவ்வொன்பதும் அல்லாத பெயர்கள் படர்க்கைப்பெயர்களாம்; அவற்றுள் எல்லாம் என்பது, மூவிடத்திற்கும் பொதுவாம்.]

---

102. *தான் முதலியவை ஒருமை; தாம் முதலியவை பன்மை.*

தான், யான், &c. SINGULAR; *தாம், யாம்,* &c. PLURAL.

தான் யான் நான் நீ ஒருமை பன்மைதாம்
யாம் நாம் எலாம் எலீர் நீயிர் நீர் நீவிர். [பெயர். சூ. 30.]

[தான், யான், நான், நீ, என்கிற இவை இருதிணை ஒருமையில் வரும் பெயர்களாம்; தாம், யாம், நாம், எல்லாம், எல்லீர், நீயிர், நீர், நீவிர், என்பவை இருதிணைப் பன்மையில் வரும் பெயர்களாம்.]

---

103. *எண்ணால் வரும் உயர்திணைப்பெயர்.* [புறனடை.]

HIGH CASTE NOUNS FROM NUMBERS.

ஒருவன் ஒருத்தி பெயர்மேல் எண்ணில. [பெயர். சூ. 31.]

[ஒன்று என்னும் எண்ணால், ஒருவன், ஒருத்தி, என வருமே அல்லாமல், இவற்றின்மேல் இரண்டு முதலாகிய எண்களால், இந்த ஆண்பாற்பெயரும் பெண்பாற்பெயரும் வரா.]

104. ஒருவர் என்னும் பெயர்.—THE NOUN ஒருவர்.

ஒருவர் என்ப துயர்இரு பாற்றாய்ப்
பன்மை வினைகொளும் பாங்கிற் றென்ப. [பெயர்.சூ.32.]

["ஒருவர்" என்னுஞ்சொல் உயர்திணை ஆண், பெண், ஆகிய இரண்டுபாலுக்கும் பொதுவாய், அத்திணையிலே பன்மை வினைமுற்றைக்கொண்டு முடியும் தன்மையை உடையது, என்று புலவர் சொல்வார்.]

(உ-ம்.) (1.) ஆடவருள் ஒருவர் அறத்தின் வழிநிற்பார்.
(2.) பெண்டிருள் ஒருவர் கொழுநன் வழிநிற்பார்.

---

105. ஆகுபெயர் வரும்விதம்.—METONYMY AND SYNECDOCHE.

பொருள்முதல் ஆறோ டளவைசொல் தானி
கருவி காரியம் கருத்தன் ஆதியுள்
ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத்
தொன்முறை உரைப்பன ஆகு பெயரே. [பெயர். சூ. 33.]

[பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், ஆகிய ஆறுடனே, நால்வகை அளவை, சொல், தானி, காரணம், காரியம், கருத்தா, முதலாய் வரும் பொருள்களுள், ஒரு பொருளின் இயற்பெயரால், அப்பொருளுக்கு இசைந்த வேறு ஒரு பொருளை, முற்காலந்தொடுத்து வழங்கிவருகிற முறைப்படியே, சொல்லப்பட்டு வருவன, ஆகுபெயராம்.]

(உதாரணம்.)

(1.) குவளைபோலுங் கண் .... [குவளை, பொருள் ஆகுபெயர்.]

[முதற்பொருளின் பெயர் சினைப்பொருளுக்கு ஆனது.]

(2.) "ஊர்கேட்ப" .... [ஊர், இட ஆகுபெயர்.]

[இடப்பெயர் மனிதருக்கு ஆனது.]

(3.) கார் அறுத்தது .... [கார், கால ஆகுபெயர்.]

[மாரிகாலத்துப்பெயர் அக்காலத்துப் பயிருக்கு ஆனது.]

(4.) வெற்றிலை நட்டான் ...... [இலை, சினை ஆகுபெயர்.]

[அவயவத்தின் பெயர் முதற்பொருளாகிய கொடிக்கானது]

(5.) "தூண்முட்டும் ஆம்கீழ்" [கீழ், குண ஆகுபெயர்.]

[குணத்தினபெயர் குணியாகிய மனிதனுக்கு ஆனது.]

(6.) வற்றல் உண்டான் ...... [வற்றல், தொழில் ஆகுபெயர்.]

[தொழிலின்பெயர் உணவிற்கு ஆனது.]

(7.) காலாலே நடந்தான். [கால், எண்ணல் அளவை ஆகுபெயர்.]

[எண்ணல் அளவைப்பெயர் உறுப்பிற்கு ஆனது.]

துலாக்கோல் .... [துலா, எடுத்தல் அளவை ஆகுபெயர்.]
நாழி உடைந்தது ...... [நாழி, முகத்தல் அளவை ஆகுபெயர்.]
இப்புலம்பத்துப்பரப்பு [பரப்பு, நீட்டல் அளவை ஆகுபெயர்.]

(8.) இதற்குரைசொல் .... [உரை, சொல் ஆகுபெயர்.]

[சொல்லின்பெயர் பொருளுக்கு ஆனது.]

(9.) விளக்கு முறிந்தது.......... [விளக்கு, தானி ஆகுபெயர்.]

[தீபத்தின்பெயர் தண்டினுக்கு ஆனது.]

(10.) திருமொழி .... [காரண ஆகுபெயர்.]

[முதற்காரணத்தினபெயர் செய்யுளுக்கு ஆனது.]

(11.) இந்நூல் அலங்காரம்... [அலங்காரம், காரிய ஆகுபெயர்.]

[காரியத்தின்பெயர் காரணத்திற்கு ஆனது]

(12.) இந்நூல் திருவள்ளுவர் [திருவள்ளுவர், கருத்தா ஆகுபெயர்.]

[கருத்தாவின் பெயர் நூலுக்கு ஆனது.]

(13.) வெற்றிலை நட்டான் .... [அடைஅடுத்த ஆகுபெயர்.]

[இலை ஆகிய சினைப்பெயர், வெறுமை என்கிற அடை அடுத்து, இலையை உடைய பொருள் ஆகிய கொடிக்கு ஆனது.]

☞ (1.) "ஆகி" என்றதனால், இன்னும் சில அமையும்.—

(உ-ம்.) கானைவந்தான், பாலைவந்தான். [உவமை ஆகுபெயர்.]

(2.) கார் என்னுங் கருநிறத்தின் பெயர், கார்மேகத்துக்கும், மாரிகாலத்துக்கும், ஆகும்; இது இருமடி ஆகுபெயர். மேலும், அது கார்காலத்துப் பயிருக்கும் ஆகும்போது, மும்மடி ஆகுபெயர்ஆம்.

(3.) வகரக்கிளவி................ [இருபெயரொட்டாகுபெயர்.]

[வகரம் ஆகிய அடைமொழி, மொழியைக் குறியாமல், எழுத்தைக் குறிக்கின்றது; கிளவி என்பதே ஆகுபெயர்ப் பொருளைத் தெரிவிக்கின்றது.]

(4.) மனுஷருக்கிட்டு வழங்கிவரும், தேவர் முதலியோரது பல பெயரும், ஒருவகை ஆகுபெயராம் எனக்கொள்க.

வேற்றுமை.

106. வேற்றுமை இன்னதென்பதும் இத்தனை என்பதும்.

CASE DEFINED: THE NUMBER OF CASES.

ஏற்கும் எவ்வகைப் பெயர்க்குமீ றாய்ப்பொருள்
வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை.

[பெயர். சூ. 34.]

[ஏற்ற எவ்வகையான பெயர்க்கும் இறுதியாய், அப்பெயர்ப்பொருளை வேறுபடுத்துவன ஆகிய வேற்றுமைகள் எட்டாம்.]

107. வேற்றுமையின் பெயரும் முறையும்.

THE NAME AND ORDER OF THE CASES.

பெயரே ஐ ஆல் கு இன் அது கண்
விளி என் றாகும் அவற்றின் பெயர்முறை.

[பெயர். சூ. 35.]

[அவ்வேற்றுமைகளுடைய பெயர்களும் முறையும் ஆவன:—பெயர், ஐ, ஆல், கு, இன், அது, கண், விளி, என்பனஆம்.]

108. *எழுவாய் மற்ற உருபுகளை ஏற்கும்.*

THE SIX CASUAL TERMINATIONS ARE ADDED TO THE NOMINATIVE.

ஆறன் உருபும் ஏற்கும்அவ் உருபே. [பெயர். சூ. 36.]

[எழுவாய்உருபு, ஐ முதலிய ஆறு வேற்றுமை உருபுகளையும் ஏற்கும்.]

---

109. *ஐ முதலிய உருபு ஏலாதவை.*

WORDS WHICH DO NOT ADMIT OF THESE TERMINATIONS.

நீயிர் நீவிர் நான் எழுவாய் அலபெறா. [பெயர். சூ. 37.]

[நீயிர், நீவிர், நான், என்னும் மூன்று பெயரும், எழுவாய் வேற்றுமையல்லாத பிறவேற்றுமைகளை ஏலா.]

---

110. *எழுவாய் வேற்றுமை.*—THE NOMINATIVE.

அவற்றுள், எழுவாய் உருபு திரிபில் பெயரே
வினைபெயர் வினாக்கொளல் அதன்பய னிலையே.
[பெயர். சூ. 38.]

[வேற்றுமைகளுள், முதல் வேற்றுமையின் உருபு, ஐ முதலிய உருபு பெற்றுத்திரியாத பெயரேஆம்; வினை, பெயர், வினா, ஆகிய இவைகளைக் கொள்வதே, அதன் பொருணிலை ஆம்.]

(உ-ம்.) (1.) "*தீயினாற் சுட்டபுண் உள்ளாறும்.*" [குறள். 13. 9.]
["ஆறும்," வினை.]

(2.) "*அறத்தான் வருவதே இன்பம்.*" [குறள். 4. 9.]
["இன்பம்," பெயர்.]

(3.) "*ஏதிலரை நோவ தெவன்.*" [நீதிநெறி. 25.]
["எவன்," வினா.]

☞ **இம்முதல் வேற்றுமைக்கு உருபு இல்லை ஆயினும், ஆனவன், என்பவன், ஆனவள், ஆனது, என்பது, என்கின்றது, என்றது, முதலானவை சொல்லுருபாக வரும் எனக்கொள்க.**

111. இரண்டாம் வேற்றுமை.—THE SECOND CASE.

இரண்டா வதன்உரு ஐயே அதன்பொருள்
ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்
ஒத்தல் உடைமை ஆதி ஆகும். [பெயர். சூ. 39.]

[இரண்டாம் வேற்றுமையின் உருபு, ஐ என்பதே; அதன் பொருள் ஆக்கல் முதலிய ஆறும் பிறவும்ஆம்.]

(உதாரணம்.)

(1.) வீட்டைக் கட்டினன்.......... [ஆக்கல்.]

(2.) மரத்தை வெட்டினன்.......... [அழித்தல்.]

(3.) மோட்சத்தை அடைந்தான்.... [அடைதல்.]

(4.) ஊரைவிட்டான்............... [நீத்தல்=விடுதல்.]

(5.) மலையை ஒத்தான்............. [ஒத்தல்.]

(6.) செல்வத்தை உடையான்....... [உடைமை.]

(7.) அரசன் பகைவரைச் சிறைச் சாலையை அடைவித்தான். [செயப்படுபொருள் குன்றாப் பிறவினைக்கு, இரண்டு செயப்படுபொருள் வந்தன.]

---

112. மூன்றாம் வேற்றுமை.—THE THIRD CASE.

மூன்றா வதன்உரு ஆல்ஆன் ஓடொடு
கருவி கருத்தா உடனிகழ் வதன்பொருள்.
[பெயர். சூ 40.]

[மூன்றாம் வேற்றுமையின் உருபு, ஆல், ஆன், ஓடு, ஒடு, என்பவைகள்; அவற்றின் பொருள், கருவி முதலிய மூன்றுமே.]

[அது என்பது தொகுதியொருமை.]

(உ-ம்.) (1.) பொன்னாற்செய்தஅணி.......... [கருவி.]

(2.) குயவனால்வனையப்பட்டகுடம்..... [கருத்தா.]

(3.) கொற்றனோடு சாத்தன்வந்தான்.... [உடனிகழ்ச்சி.]

☞ (1.) கருவி முதற்கருவி, துணைக்கருவி, என இருவகைப்படும்; சில இடங்களில் ஆல், ஆன், உருபுகள் சினைப்பொருளிலும், ஆல், தோறும் என்னும் பொருளிலும் வரும்.

(உ-ம்.) (1.) கண்ணால்குருடன்........ .... [சினைப்பொருள் ஏது.]
(2.) ஊரால்ஓர்மடம்.................... ... [தோறும்.]

(2.) இவ்வேற்றுமையில், கொண்டு என்பது கருவிப்பொருளிலும், உடன் என்பது உடனிகழ்ச்சிப்பொருளிலும், பற்றி, குறித்து, என்பவை நிமித்தகாரணப்பொருளிலும், சொல்லுருபுகளாக வரும்; உடன் தவிர, மற்றை மூன்றும் ஐகாரச்சாரியை பெற்றும் வரும்:—

(உ-ம்) (1.) வாள்கொண்டு வெட்டினான். [= வாளால் வெட்டினான்.]
(2.) என்னுடன் கற்றான்.
(3.) "ஆசைபற்றி அறையலுற்றேன்." [= ஆசையினால் அறையலுற்றேன்.]
[இரா. சிறப். பாயி. 4.]
(4.) அவனைக்குறித்து வந்தான். [= அவனால் வந்தான்.]

(3.) இவ்வுருபுகளுள், பின்னைய இரண்டும், நான்காம் வேற்றுமைக்குரிய நிமித்தகாரணகாரியப்பொருளில் வந்தால், மூன்றாவது நான்காவதில் வந்த உருபு மயக்கமாகக் கொள்க:—

(உ-ம்.) (1.) கல்விபற்றி முயன்றான்.
(2.) புகழ்குறித்துப் பெரும்பொருள் தேடினான்.

---

113. நான்காம் வேற்றுமை.—THE FOURTH CASE.

நான்கா வதற்குரு பாகும் குவ்வே
கொடைபகை நேர்ச்சி தகவது ஆதல்
பொருட்டுமுறை ஆதியின் இதற்கிதெனல் பொருளே.
[பெயர். சூ. 41.]

[நான்காம் வேற்றுமை உருபு, கு என்பதே: அதன் பொருள், கொடை முதலிய பொருள் தோன்றப் புணரும் புணர்ச்சியில், இதற்கு இது என்பது பட வருதல்ஆம்.]

(உதாரணம்.)

(1.) சாத்தனுக்கு வீட்டைக்கொடுத்தான். [கொடை.]
(2.) அவனுக்கு இவன்பகை............. [பகை.]
(3.) கொற்றனுக்குநட்பன் சாத்தன்...... [நேர்ச்சி.]

(4.) அருங்கலம் அரசர்க்குரியது........ [தகுதி.]
(5.) மோதிரத்திற்குப் பொன்............ [அது ஆதல்; முதற் காரண காரியம்.]
(6.) கூழுக்குக் குற்றேவல்.............. [பொருட்டு=நிமித்த காரண காரியம்.]
(7.) கொற்றனுக்கு மகன்.............. [முறை.]

☞ பொருட்டு, நிமித்தம், ஆக, என்னும் இம்மூன்றும், சிறுபான்மை, முதற்காரண காரியப்பொருளினும், பெரும்பாலும், நிமித்தகாரண காரியப்பொருளினும், வரும்:—

(உ-ம்.) (1.) சோற்றின்பொருட்டு, அரிசிகொணர்ந்தான். [முதற்காரணகாரியம்.]
(2.) கூலிப்பொருட்டு, வேலைசெய்தான். [நிமித்தகாரணகாரியம்.]

[மற்ற உருபுகளையும் இவ்வகையே புணர்த்திக்காண்க.]

இவை, மூன்றும்வேற்றுமைக்குரிய, நிமித்தகாரணப்பொருளில் வந்தால், நான்காவது மூன்றாவதில் வந்த உருபு மயக்கமாம்:—

(உ-ம்.) (1.) "பெண்பொருட் டன்றியும் பிறிதுண் டாமெனின்,
மண்பொருட் டன்றியும் வரவும் வல்லதோ." [இரா. உயுத்தகாண்டம்.]
[பெண்பொருட்டு = பெண்ணால்; மண்பொருட்டு = மண்ணால்.]
(2.) தண்டனைக்காகப் பயந்தான். [= தண்டனையினால் பயந்தான்.]

முன்னைய இரண்டும், இன்சாரியைபெற்றும், பெறாமலும், வரும்; பின்னையது, குச்சாரியை பெற்றே வரும்.

---

114. ஐந்தாம் வேற்றுமை.—THE FIFTH CASE.

ஐந்தா வதன்உரு பில்லும் இன்னும்
நீங்கலொப் பெல்லை ஏதுப்பொருளே. [பெயர். சூ. 42.]

[ஐந்தாம் வேற்றுமையினது உருபு, இல், இன், என்பவைகளே; அவற்றின் பொருள், நீங்கல் முதலியனவும்.]

(உ-ம்.) (1.) "துனியிற்கரும்புதின்றற்று." .... [நீங்கல்.]
(2.) "பால்உண்குருகிற்றெரிந்து." ...... [ஒப்பு.]
(3.) வேலூரிற்றெற்குச்சேலம்.......... [எல்லை.]
(4.) கல்வியிற் பெரியர் கம்பர்.......... [ஏது.]

☞ இவ்வேற்றுமைக்குச் சொல்உருபுகளுமுண்டு; அ-ன: நின்று, இருந்து, காட்டிலும், பார்க்கிலும், என்பவைகளே. இவற்றுள்,

நின்று, இருந்து, என்பவற்றின்முன், இல் என்னும் சாரியை விகற்பித்தும், மற்றை இரண்டு உருபுகட்கும் முன், ஐகாரச் சாரியை நித்தியமாயும், வரும். முன்னையவிரண்டும் நீங்கற் பொருளினும், பின்னையவிரண்டும் எல்லைப் பொருளினுமே, வருதல் காண்க.

[உதாரணம் ஆராய்ந்துகொள்க.]

115, ஆறும் வேற்றுமை.—THE SIXTH CASE.

ஆறன் ஒருமைக் கதுவும் ஆதுவும்
பன்மைக் கவ்வும் உருபாம் பண்புறுப்
பொன்றன் கூட்டம் பலவின் ஈட்டம்
திரிபின் ஆக்கம் ஆம்தற் கிழமையும்
பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே.

[பெயர். சூ. 43.]

[ஆறும் வேற்றுமையின் ஒருமைக்கு, அதுவும், ஆதுவும், பன்மைக்கு, அவ்வும் உருபாம்; அவற்றின் பொருள், பண்பு முதலிய ஐந்து தற்கிழமைப் பொருள்களும், அவை அல்லாத பிறிதின் கிழமைப் பொருள்களும்ஆம்.]

[I. தற்கிழமை.]

(உதாரணம்.)

(1.)	சாத்தனது கருமை.. [குணம்] சாத்தனது வரவு..... [தொழில்.]	[பண்பு.]
(2.)	கொற்றனது தலை .... குதிரையினது செவி	[உறுப்பு.]
(3.)	மணிதரது தொகுதி .... நெல்லினது குப்பை	[ஒன்றன்கூட்டம்.]
(4.)	மணிகளது தொகுதி .... பறவைகளது கூட்டம்........	[பலவின்கூட்டம்.]
(5.)	நெல்லினது பொரி .... மஞ்சளது பொடி	[திரிபின் ஆக்கம்; அ-து: ஒன்று திரிந்து ஒன்றாதல்.]

[II. பிறிதின் கிழமை.]

(உதாரணம்.)

(1.) கொற்றனது குதிரை ....
சாத்தனது வாள் .... } [பொருள்.]

(2.) கொற்றனது வீடு ....
சாத்தனது நிலம் .... } [இடம்.]

(3.) கொற்றனது நாள் ....
மாரனது வேனில் .... } [காலம்]

☞ (1.) மற்ற உருபுகள் வருவதற்கு உதாரணம்:—

(1.) எனது கை, நினது தலை, தனது புறம் .... [அது உருபு]
(2.) என கைகள், நின தாள்கள் .... [அ உருபு.]
"கழுந்த ராய்உன கழல்பணி யாதவர்." ...... [அ உருபு; உன் + அ = உன.]
[இரா. சி. பாயிரம்.]

(2) "ஆறன் ஒருமைக் கதுவும்" எனக் கூறியிருந்தாலும், உனது கைகள், எனது குணங்கள், எனப் பன்மையிலும் அது உருபு வரும்; வழக்கத்தில், அது அவனது, இது எனது, என, உருபின்பின், அதனை முடிக்குஞ் சொல் தொகையாயும் வரும்.

[இவ்வேற்றுமைக்கு, உடைய என்னுஞ் சொல்லுருபும் உண்டு.]

---

116. ஏழாம் வேற்றுமை.—THE SEVENTH CASE.

ஏழனுருபு கண்ணாதி ஆகும்
பொருள்முதல் ஆறும் ஓரிரு கிழமையின்
இடனாய் நிற்றல் இதன்பொருள் என்ப. [பெயர். சூ.44.]

[ஏழாம் வேற்றுமையின் உருபு கண்முதலியவாம்; இவற்றின் பொருள் ஆவன, தம்மை ஏற்ற பெயர்ப்பொருள் ஆகிய பொருள்முதலிய ஆறும், இரண்டு கிழமைப் பொருள்களுக்கும் இடமாய் நிற்க, அவற்றை வேறுபடுத்தலாம், என்று புலவர் சொல்வார்.]

(உ-ம்.)(1.) மணியின் கண் ஒளி ....
(2.) மரத்தின் கண் பறவை.. } [இரு கிழமைப் பொருளுக்கும் பொருள் இடமாயிற்று.]

[மற்றவைகளும் இப்படியே வரும்.]

117. ஏழாம் வேற்றுமை உருபுகள்.

THE TERMINATIONS OF THE SEVENTH CASE.

கண்கால் கடை இடை தலைவாய் திசைவயின்
முன்சார் வலம்இடம் மேல்கீழ் புடைமுதல்
பின்பா டளைதேம் உழைவழி உழிஉளி
உள்அகம் புறம்இல் இடப்பொருள் உருபே.
[பெயர். சூ. 45.]

[கண்முதலியவை, ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உருபுகள்ஆம்.]

[இவற்றிற்கு உதாரணம், இராமாயணம் முதலிய நூல்களிற் காண்க.]

---

118. எட்டாம் வேற்றுமை.—THE EIGHTH CASE.

எட்டன் உருபே எய்துபெயர் ஈற்றின்
திரிபு குன்றல் மிகுதல் இயல்பயல்
திரியும் ஆம்பொருள் படர்க்கை யோரைத்
தன்முகம் ஆகத் தான்அழைப் பதுவே. [பெயர்.சூ.46]

[எட்டாம் வேற்றுமையின் உருபுகள், விளி அடைந்த பெயர் ஈற்றினது திரிதல், கெடுதல், மிகுதல், இயல்பாதல், ஈற்றுக்கு அயல்எழுத்துத் திரிதல், ஆகியவை ஆம்; அவற்றின் பொருள், படர்க்கை இடத்தாரைத் தனக்கெதிர்முகமாக அழைத்தலேஆம்.]

(உ-ம்.) குழையாய்! அரச! செல்வனே! நம்பி! மக்காள்!

---

119. விளி உருபு: ஓர் புறனடை.

A REMARK ON THE TERMINATIONS OF THE EIGHTH CASE.

அண்மையின் இயல்பும் ஈறழிவும் சேய்மையின்
அளபும் புலம்பின் ஓவும் ஆகும். [பெயர். சூ. 56.]

[மேற்சொல்லிய விளி உருபுகளுள், சமீபவிளிகளுக்கு, இயல்பாதலும், ஈறுகெடுதலும்; தூரவிளிகளுக்கு, அளபெடுத்தலும்; புலம்பல் விளிகளுக்கு, ஓ மிகுந்துவருதலும் ஆகும்.]

(உதாரணம்.)

(1.) தம்பி! [இயல்பு;] அரச! [இறழிவு.]........ [அண்மை.]
(2.) மகனேஎ! [பிள்ளாஅய்! [அளபு.]......... [சேய்மை.]
(3.) அண்ணாவோ! .... [புலம்பல்.]

---

120. எட்டாம் வேற்றுமையை ஏற்கா…ர்கள்.

WORDS NOT ADMITTING OF THE VOCATI…E.

நுவ்வொடு வினாச்சுட் டுற்ற னளர
வைதுந் தாம்தான் இன்னன விளியா. [பெயர். சூ. 57.]

[நு, மூன்று முதல் வினா, மூன்று சுட்டு, இவைகளைப் பொருந்திய ன, ள, ர, ஈற்று உயர்திணைப் பெயர்களும், வை, து, ஈற்று அஃறிணைப் பெயர்களும், தாம், தான், ஆகிய பொதுப்பெயர்களும், இவைபோல்வனவும், விளிக்கப்படா.]

☞ "இன்னன" என்றதினால், பிறன், மற்றையான், முதலானவைகளையும் கொள்க.

---

121. THE CASUAL TERMINATIONS ஐ, கண், AND அது.

முதலை ஐயுறிற் சினையைக் கண்உறும்
அதுமுதற் காயிற் சினைக்கை ஆகும். [பெயர். சூ. 58.]

[முதற்பெயரை ஐ உருபு பொருந்தினால், சினைப்பெயரைக் கண் உருபு பொருந்தும்; அது உருபு முதற்பெயருக்கு வந்தால், சினைப்பெயர்க்கு ஐ உருபு வரும்.]

(உ-ம்.) (1.) மரத்தினைக் கொம்பின்கண் தறித்தான்.
(2.) மரத்தினது கொம்பினைத் தறித்தான்.

☞ "அது முதற்காயின்" என்பதற்கு, அக்கண்ணுருபு முதற்பெயர்க்கானால், எனவும்பொருள் கூறலாம்:—

(உ-ம்.) மரத்தின்கண் கொம்பைத் தறித்தான்.

[மரத்தினைக் கொம்பை வெட்டினான், என முதல், சினை, இரண்டிடத்திலும், ஐ உருபு வாராதென அறிக.]

122. *வேற்றுமை மயக்கம்.*—INTERCHANGE OF CASES.

யாதன் உருபின் கூறிற் றாயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்.
[பெயர். சூ. 60.]

[எந்த வேற்றுமையிற் சொல்லி இருந்தாலும், பொருள் சார்ந்த பக்கமே வேற்றுமை சாரும்.]

(உ-ம்.) "மனத்தால் மறுவிலர் ஏனுந்தாஞ் சேர்ந்த
இனத்தால் இகழப் படுவர்." [நாலடி. 18. 10.]

[மனத்தால்=மனத்தில்; 3-ம் வேற்றுமை மயக்கம்.]

123. எட்டு வேற்றுமைக்கும் முடிக்குஞ்சொல்.

THE GOVERNING WORD.

எல்லை இன்னும் அதுவும் பெயர்கொளும்
அல்ல வினைகொளும் நான்கேழ் இருமையும்
புல்லும் பெரும்பாலும் என்மனார் புலவர். [பெயர்.சூ.62.]

[எல்லைப்பொருளில் வரும் ஐந்தாம் வேற்றுமையும், ஆறும் வேற்றுமையும், பெயரைக்கொண்டு முடியும்; இவை அல்லாத மற்றை வேற்றுமைகள் எல்லாம், வினையைக்கொண்டு முடியும்; நான்காம், ஏழாம் வேற்றுமைகள், வினையையே அல்லாமல் வினையொடு பொருந்திவரும் பெயரையுங்கொண்டு முடியும், மிகுதியும் என்று புலவர் சொல்வார்.]

[வினையொடு பொருந்திவரும்பெயர்கொண்டு முடிதலுக்கு உதாரணம்.]

(1.) நோய்க்குக் கொடுக்கும் மருந்து.

(2.) மணியின்கண் இருக்கும் ஒளி.

[மற்றவற்றிற்கு உதாரணம், அந்தந்த வேற்றுமை உரையிற் காண்க.]

சொல்லதிகாரம்.

II-வது: வினையியல்.—OF VERBS.

124. வினை இன்னதென்பது.—DEFINITION OF VERB.

செய்பவன் கருவி நிலம்செயல் காலம்
செய்பொருள் ஆறும் தருவது வினையே. [வினை. சூ. 1.]

["செய்பவன்" முதலிய ஆறு பொருளையுங் கொடுப்பது, தெரிநிலை வினை ஆம்.]

☞ "செய்பவன்" என்பதை மற்றைப் பாலிலுங்கொள்க.

(உ-ம்.) குடத்தைவனைந்தான்.

[இதில், குயவன் செய்பவன்; மண், தண்டசக்கரம், முதலியன கருவி; வனைந்தஇடமே நிலம்; வனைதல் செயல்; இறந்தகாலமே காலம்; குடம் செய்பொருள்.]

---

125. குறிப்புவினை.—THE INDIRECT VERB.

பொருள்முதல் ஆறினும் தோற்றிமுன் ஆறனுள்
வினைமுதல் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே.
[வினை. சூ. 2.]

["பொருள்" முதலிய ஆறுங் காரணமாகப் பிறந்து, முன் சொல்லிய "செய்பவன்" முதலிய ஆறனுள், கருத்தா ஆகிய ஒன்றைமாத்திரமே தெரிவித்துநிற்பது, குறிப்புவினை ஆம்.]

(உ-ம்.) பொன்னன் [பொருள்]; வானத்தான் [இடம்.]

[விகுதியால் செய்பவன் தோன்றியது.]

126. முற்றுவினை.—THE FINITE VERB.

பொதுஇயல் பாறையும் தோற்றிப் பொருட்பெயர்
முதல்அறு பெயர்அல தேற்பில முற்றே. [வினை. சூ. 4.]

[வினைக்குப் பொது இலக்கணம் ஆகிய "செய்பவன்" முதலிய ஆறையும் தோற்றுவித்து, பொருட்பெயர் முதல் ஆகிய ஆறுவகைப் பெயர் அல்லாத வேறொன்றையும் கொண்டு முடியாதன, குறிப்பு, தெரிநிலை, வினைமுற்றுகளாம்.]

(உ-ம்.) (1.) நடந்தான் பொன்னன்........ [தெரிநிலை.]
(2.) பெரியது நிலம்.............. [குறிப்பு.]

---

127. ஆண்பால் படர்க்கை.

THE THIRD PERSON SINGULAR, MASCULINE.

அன்ஆன் இறுமொழி ஆண்பாற் படர்க்கை.
[வினை. சூ. 6.]

[அன், ஆன், ஆகிய விகுதிகளை உடைய சொற்கள், ஆண்பாற் படர்க்கைஆம்.]

(உ-ம்.) (1.) நடந்தனன் குழையன்........ [அன்]
(2.) நடந்தான் குழையான்........ [ஆன்.]

---

128. பெண்பாற் படர்க்கை.

THE THIRD PERSON SINGULAR, FEMININE.

அள்ஆள் இறுமொழி பெண்பாற் படர்க்கை.
[வினை. சூ. 7.]

[அள், ஆள், ஆகிய விகுதிகளை உடைய சொற்கள், பெண்பாற் படர்க்கைஆம்.]

(உ-ம்.) (1.) நடந்தனள் [அள்]. (2.) நடந்தாள் [ஆள்.]

129. பலர்பாற் படர்க்கை.

THE THIRD PERSON PLURAL, HIGH CASTE.

அர் ஆர் பவ்வூர் அகரம்மார் ஈற்ற
பல்லோர் படர்க்கைமார் வினையொடு முடிமே.
[வினை. சூ. 8.]

[அர், ஆர், ப, மார், ஆகிய விகுதிகளை உடைய சொற்கள், பலர்பாற் படர்க்கை வினைமுற்றும் குறிப்புமுற்றும் ஆம். இவற்றுள், மார் விகுதியையுடைய சொல், பெயருடனல்லாமல், வினையுடனும் முடியும்.]

(உ-ம்.) (1.) நடந்தனர் [அர்]. (2.) நடந்தார்............... [ஆர்.]
(3.) நடப்ப.... [ப]. (4.) { பாடன்மார் எமர். / கொண்மார் வந்தார். } [மார்.]

---

130. ஒன்றன்பாற் படர்க்கை.

THE THIRD PERSON SINGULAR, NO CASTE.

துறுடுக் குற்றியல் உகர ஈற்ற
ஒன்றன் படர்க்கைடுக் குறிப்பின் ஆகும். [வினை. சூ. 9.]

[து, று, டு, ஆகிய விகுதிகளை உடைய சொற்கள், ஒன்றன்பாற் படர்க்கை வினைமுற்றும் குறிப்புமுற்றும்ஆம்; டு, குறிப்புவினைக்குமாத்திரமே உரியதாம்.]

(உ-ம்.) (1.) நடந்தது [து]. (2.) போயிற்று [று.]
(3.) பொருட்டு = பொருளை உடையது [டு.]

---

131. பலவின்பாற் படர்க்கை.

THE THIRD PERSON PLURAL, NO CASTE.

அ ஆ ஈற்ற பலவின் படர்க்கை
ஆவே எதிர்மறைக் கண்ண தாகும். [வினை. சூ. 10.]

[அ, ஆ, ஆகிய விகுதிகளைஉடைய வினைச்சொற்கள், பலவின்பாற் படர்க்கைஆம்; ஆ, எதிர்மறையிடத்தது ஆகும்.]

(உ-ம்.) (1.) நடந்தன [அ]. (2.) நடவா [ஆ.]

[ஆ குறிப்புக்கு வாராது.]

---

132. இருதிணைக்கும் பொதுவினை.—VERBS COMMON TO THE TWO CLASSES.

தன்மை முன்னிலை வியங்கோள் வேறில்லை
உண்டெ ரெச்சம் இருதிணைப் பொதுவினை. [வினை சூ.11]

[தன்மை, முன்னிலை, வியங்கோள் முற்றுகளும், வேறு, இல்லை, உண்டு, என்கிற குறிப்பு வினைமுற்றுகளும், பெயர் எச்ச வினைஎச்சங்களும், இருதிணைக்கும் பொதுவினைகளாம்.]

"ஈரெச்சம்" என்றதினால், எதிர்காலப் பெயரெச்சமே செய்யும் என்னும் முற்றனைமையின், அம்முற்றும் பொதுவினை என்பது தானே அமையும்.

---

133. தன்மை ஒருமைவினை.—THE FIRST PERSON SINGULAR.

கு டு து று என்னுங் குன்றியல் உகரமோ
டல் அன் என் ஏன் ஆகும் ஈற்ற
இருதிணை முக்கூற் றொருமைத் தன்மை. [வினை சூ.12

[கு, டு, து, று, ஆகிய குற்றியல் உகர விகுதிகளையும், அல் அன், என், ஏன், ஆகிய விகுதிகளையும், உடைய மொழிகள், இருதிணையில் மூன்று பாலுக்கும் பொதுவான ஒருமைத்தன்மை முற்றும்.]

கு, டு, து, று, இவைதாமே காலங்காட்டுகின்றன; அல், எதிர்கால வினைக்குமாத்திரம் வரும்; ஆதலால், இவை குறிப்புவினைக்கு வாரா.

(உ-ம்.) (1.) உண்கு .... [கு, எதிர்வு.]
(2.) உண்டு .... [டு, இறப்பு.]

(3.) வந்து, [து, இறப்பு]; வருது...... [து, எதிர்வு.]
(4.) சென்று, [று, இறப்பு]; சேறு.... [று, எதிர்வு.]
(5.) நடப்பல்...................... [அல், எதிர்வு.]
(6.) வந்தனன்...................... [அன்.]
(7.) வந்தனென்...................... [என்.]
(8.) வந்தேன்...................... [ஏன்.]
(9.) குழையினன்.................... [அன்.]

---

134. *தன்மைப்பன்மை.*—THE FIRST PERSON PLURAL.

அம் ஆம் என்பன முன்னிலை யாரையும்
எம் ஏம் ஓம் இவை படர்க்கை யாரையும்
உம்ஊர் கடதற இருபா லாரையும்
தன்னொடு படுக்கும் தன்மைப் பன்மை. [பெயர். சூ. 13.]

[அம், ஆம், ஆகிய விகுதிகளை உடைய சொற்கள், முன்னிலையாரையும்; எம், ஏம், ஓம், ஆகியவைகளை ஈற்றில் உடைய மொழிகள், படர்க்கையாரையும்; கும், டும், தும், றும், ஆகிய இவைகளை இறுதியாக உடைய சொற்கள், முன்னிலையாரையும், படர்க்கையாரையும்; தன்னோடு கூட்டும் உளப்பாட்டுத் தன்மைப்பன்மை முற்றும்.]

(உதாரணம்.)

(1.) சென்றனம், சென்றாம்............ [யாம்; யானும் நீயும்.]
(2.) சென்றனெம், சென்றேம், சென்றோம்...................... [யாம்; யானும் அவனும்.]
(3.) உண்கும், உண்டும், செல்லுதும், சேறும்.................... [யாம்; யானும், நீயும், அவனும்.]

☞ முன்னின்ற உம்மைகள் இரண்டையும், ஆக்க உம்மைகளாக்கி, அம்ஆம் என்பன, முன்னிலையாரையும் படர்க்கையாரையும், எம் ஏம் ஓம் இவை, படர்க்கையாரையும் முன்னிலையாரையும், தன்னொடுபடுக்கும் எனவும் பொருள் கூறுக:—

(உ-ம்.) (1.) உண்டனம்....... [யாம்; யானும், நீயும், அவனும்.]
(2.) உண்டனெம்.. ... [யாம்; யானும், அவனும், நீயும்.]

[இவ்வழக்குச் சிறுபான்மை வரும்.]

135. முன்னிலை உளப்பாட்டுப்பன்மை.

THE SECOND PERSON PLURAL. [*when the second person comes together with the third.*]

முன்னிலை கூடிய படர்க்கையும் முன்னிலை.
[வினை. சூ. 15.]

[முன்னிலையோடு கூடிய படர்க்கையும், முன்னிலைஆம்.]

(உ-ம்.) வந்தீர், உண்மின், குழையீர். [நீயும் அவனும்.]

---

136. முன்னிலை ஒருமை.—THE SECOND PERSON SINGULAR.

ஐ ஆய் இகர ஈற்ற மூன்றும்
ஏவலின் வரூஉம் எல்லா வீற்றவும்
முப்பால் ஒருமை முன்னிலை மொழியே. [வினை. சூ. 16.]

[ஐ, ஆய், இ, ஆகிய ஈற்றுமொழிகளும், ஏவலில் வருகின்ற சகல ஈற்றுமொழிகளும், மூன்று பால்களுக்கும் பொதுஆகிய முன்னிலை ஒருமை வினைஆம்.]

(உதாரணம்.)

(1.) சென்றனை செல்கின்றாய் செல்கின்றி! [ஐ, ஆய், இ.]
(2.) செல்லாய் செல் நட படி சேறி...... [ஏவல் ஈறு.]
(3.) முடியினை, வேலாய் வில்லி........... [குறிப்புவினை.]

☞ "மூன்றும்" என்று பிரித்தமையால், ஏவல் வினைமுற்றுகள் குறிப்பு வினையில் இல்லை எனக்கொள்க.

[இ எதிர்காலங் காட்டுவதல்லாமல், சிறுபான்மை நிகழ்காலங் காட்டுதலும், இடைநிலை பெற்று வருதலும், உண்டு.]

---

137. முன்னிலைப்பன்மை.—THE SECOND PERSON PLURAL.

இர்ஈர் ஈற்ற இரண்டும் இருதிணைப்
பன்மை முன்னிலை மின்அவற் றேவல். [வினை. சூ. 18.]

[இர், ஈர், ஆகிய இரு விகுதிகளையும் உடைய சொற்கள், இருதிணைப்பன்மை முன்னிலை வினைஆம்; மின் என்னும் விகுதியை உடைய சொல், அவற்றுள் ஏவல்ஆம்.]

(உ-ம்.) (1.) சென்றனிர், சென்றீர் [நீர்]...... [தெரிநிலை.]
(2.) வில்லினிர், வில்லீர் [நீர்]...... [குறிப்பு.]
(3.) சென்மின், உண்மின் [நீர்] ..... [ஏவல்.]

☞ உண்ணும் என, உம் விகுதியும், உண்ணுங்கள் என, அதன்மேல் கள் விகுதியும், ஏவற்பன்மையில் வரும்.

---

138. வியங்கோள்.—THE OPTATIVE.

கயவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள்
இயலும் இடம்பால் எங்கும் என்ப. [வினை. சூ. 19.]

க, ய, ர, ஆகிய இவைகளை இறுதியாக உடையமொழிகள், வியங்கோள் முற்றுகளாம்; இவை மூவிடத்திலும் ஐம்பாலி லும் செல்லும் என்று, புலவர் சொல்லுவார்.]

(உ-ம்.) வாழ்க, வாழிய, வாழியர்.

☞ (1.) சிறுபான்மை அல் விகுதியும் வரும்; இதனையும், பிற இறு களைப்பெற்று வியங்கோட் பொருளில் வருவன உண்டா னால், அவற்றையும்,

"வருத்துரைபாதவும் வருத்தனர் கொளலே,"

என, இவ்வாசிரியர் அல் இறு கூறியதாற் கொள்க;

(உ-ம்.) "நன்றே தரினும், நடுஇகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்." [குறள். 12. 3.]
[விடல் = விடுக.]

(2.) அகர விகுதியும் வரும்;

(உ-ம்.) "விண்ணிடை மதியினை மிசையிதென்னவே." [இரா. 1. 5. 9.]
[என்ன = என்க.]

(3.) வழக்கத்தில், ஒட்டும் என்னும் விகுதி, முதல் குறைந்து, வரும்:—

(உ-ம்.) (1.) அவர் போகட்டும். [போகட்டும் = போக + (ஒ) ட்டும்.]
(2.) யாம் வரட்டும். [வரட்டும் = வர + (ஒ) ட்டும்.]

முன்னிலையில், வாக்கியத்தின் இடையிலேமாத்திரம், இவ்விகுதி பெற்ற வியங்கோள் வரும்;
(உ-ம்) நீ படிக்கட்டுமென்று, நான் பேசாதிருந்தேன்.

139. OF வேறு, இல்லை, AND உண்டு.

வேறில்லை உண்டைம் பால்மூ விடத்தன. [வினை. சூ. 20.]

[வேறு, இல்லை, உண்டு, ஆகிய மூன்று குறிப்புவினை முற்றும், ஐம்பாலுக்கும் மூவிடத்திற்கும் உரியனவாம்.]

(உ-ம்.) வேறு ⎧ யான், யாம், நீ, நீர்,
இல்லை ⎨ அவன், அவள், அவர்,
உண்டு ⎩ அது, அவை.

☞ மேற்கூறியவை அன்றி, வேண்டும், தகும், படும், என்னும் சொற்களும், ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவானவை எனக்கொள்க :*—

(உ-ம்.) (1.) "யானை அனையவர் நண்பொரீஇ, நாய்அனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்." [நாலடி. 22. 3]

(2.) அவ்வேலை செய்யத்தகும்.

(3.) "நாச்செற்று விக்குள்மேல் வாராமுன், நல்வினை
மேற்சென்று செய்யப் படும்." [குறள். 34. 5.]

[இம்மூன்று சொல்லும் தேற்றப்பொருளே தரும் தொழிற்பெயர்.]

---

140. பெயர் எச்சம்.—RELATIVE PARTICIPLES.

செய்த செய்கின்ற செய்யும்என் பாட்டிற்
காலமும் செயலும் தோன்றிப் பாலொடு
செய்வதாதி அறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே. [வினை. சூ. 21.]

[செய்த, செய்கின்ற, செய்யும், என்கிற மூன்று வாய்பாட்டுச் சொற்களில், காலமும் செயலும் தோன்றி, பாலுடன்

---

* திணை, பால், இடம், எல்லாஞ்செல்வனவற்றை, அடியிற்கூறுஞ் சூத்திரத்தினால் அறிக:—

"வேறில்லை, உண்டு, யார், வேண்டும், தகும், படும்,
வினைபெயர்எச்சம், வியங்கோள், பத்தும்
திணை, பால், இடம், எலாம் செல்லும் என்க." [இலக்கணக்கொத்து.]

[வேறில்லை = வேறு, இல்லை; வினைபெயர்எச்சம் = வினைஎச்சம், பெயர் எச்சம்.]

"செய்பவன்" முதலிய ஆறுவகைப் பொருட்பெயர்களும் குறைந்து நிற்பன, பெயரெச்ச வினை ஆம்.]

(உதாரணம்.)

(1.) உண்ட .... { சாத்தன், கலம், வீடு, ஊண், இரா, சோறு.

(2.) கரியபசு, உள்ளகுணம்...... [குறிப்பு.]

---

141. செய்யும் என்னும் வாய்பாட்டுவினை, எச்சமாயும் முற்றாயும் வரும்விதம்.—OF THE FORM செய்யும், BOTH AS A RELATIVE PARTICIPLE AND A FINITE VERB.

செய்யும்என் எச்சஈற் றுயிர்மெய் சேறலும்
செய்யுளுள் உம்முந் தாகலும் முற்றேல்
உயிரும் உயிர்மெய்யும் ஏகலும் உளவே. [வினை. சூ. 22.]

[செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயர் எச்சத்தினுடைய ஈற்று உயிர்மெய் கெடுதலும், செய்யுளில் உம் விகுதி உந்து எனத் திரிதலும், அது வினைமுற்று ஆனால், அதன் ஈற்று உயிர் ஆனாலும் உயிர்மெய் ஆனாலும் கெடுதலும், உளஆம்.]

(உதாரணம்.)

(1.) ஆம்காரியம்.............................. [ஆம் = ஆகும்.]
வாம்பரி.............................. [வாம் = வாவும்.]
சாந்துணையும் கல்லாத வாறு?" [குறள். 40. 7.]
[சாம் = சாகும்; கு கெட்டது.]

(2.) "கூப்பெயர்க்குந்து நீர்க்கோழி."
[பெயர்க்குந்து = பெயர்க்கும்.]

(3.) "மருளினும் எல்லாம் மருண்ம."
[மருண்ம = மருளும்; உயிர்கெட்டது.]

(4.) "மார்வினையொடுமுடிமே." [வினை. சூ. 8.]
[முடிமே = முடியுமே; யு கெட்டது.]
"யாதானும் நாடாம்ஆல், ஊராம்ஆல்." [குறள். 40. 7.]
[ஆம் = ஆகும்; கு கெட்டது.]

142. வினைஎச்சம்.—ADVERBIAL PARTICIPLES.

தொழிலும் காலமுந் தோன்றிப் பால்வினை
ஒழிய நிற்பது வினைஎச் சம்மே. [வினை. சூ. 23.]

[செயலும் காலமும் விளங்கி, பாலும் வினையும் குறைய நிற்பது, வினைஎச்சம் ஆம்.]

☞ "வினை" எனப் பொதுப்படச் சொல்லியிருப்பதால், தெரிநிலைவினை குறிப்புவினைகளின் முற்றெச்சங்களும், வினையால் அணையும் பெயரும், தொழிற்பெயரும், குறைந்து நிற்கும் எனக்கொள்க.

---

143. வினைஎச்ச வாய்பாடுகள்.

DIFFERENT FORMS OF ADVERBIAL PARTICIPLES.

செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தெனச் செயச்செயின் செய்யிய செய்யியர்
வான்பான் பாக்கின வினைஎச் சம்பிற
ஐந்தொன் றாறுமுக் காலமும் முறைதரும்.
[வினை. சூ. 24.]

[செய்துமுதலியவற்றுள், முதலில் நின்ற ஐந்தும் இறந்தகாலத்தையும், நடுவில் நின்ற ஒன்றும் நிகழ்காலத்தையும், பின் நின்ற ஆறும் எதிர்காலத்தையும், காட்டுவனஆம்.]

இவற்றுள் "செய்து" என்பது ஒழிய, மற்றவை விகுதியால் காலம் காட்டும்.

[வேறுவகை வினை எச்சங்களை, "இன" என்றதனாற்கொள்க.]

[18-ம் பக்கத்தில் காண்க.]

☞ இச்சூத்திரத்திற் கூறிய வாய்பாடுகளுள், வான், பான், பாக்கு, என்பவை சிறுபான்மை தொழிற்பெயர்ப் பொருளினும் வரும்:—

(உ-ம்.) (1.) "கடாஅயினுஞ், சான்றவர் சொல்லார், பொருண்மேற்
படாஅ விடுபாக் கறிந்து." [நாலடி. 26. 5.]
[விடுபாக்கு = விடுதல்.]

(2.) நாம் வருவான் என்?.................. [வருவான் = வருதல்.]

(3.) நீங்கள் உண்பான் என்?.............. [உண்பான் = உண்ணல்,]

144. வினையெச்சம் அவாவும் விதம்.

THE WORDS WHICH FOLLOW THESE PARTICIPLES.

அவற்றுள், முதலில் நான்கும் ஈற்றில் மூன்றும்
வினைமுதல் கொள்ளும் பிறவும்ஏற் கும்பிற.

[வினை. சூ. 25]

[அவ்வினை எச்சங்களுள், முதலில் உள்ள நான்கும், இறுதியில் உள்ள வான், பான், பாக்கு, என்னும் மூன்று விகுதிகளை உடைய மூன்றும், செய்பவனைக்கொண்டு முடியும்; நடுவில் உள்ள ஐந்தும், இவைபோல்வன பிறவும், செய்பவனை அன்றி, மற்றவைகளையும் கொண்டு முடியும்.]

(உதாரணம்.)

(1.) தான் நடந்துவந்தான் .... [வினைமுதல்.]

(2.) தான் உண்டென மகிழ்ந்தான்.... } [வினைமுதலும் பிறவும் கொண்டது.]
பிறன் உண்டென மகிழ்ந்தான்... }

[மற்றவைகளுக்கும் உதாரணம் இப்படியே காண்க]

145. மேற்கூறியதற்கு ஓர் புறனடை.

A REMARK ON THE ABOVE.

சினைவினை சினையொடும் முதலொடுஞ் செறியும்.

[வினை. சூ. 26]

["முதலில் நான்கும் ஈற்றில் மூன்றும்" என்று சொன்ன வினைஎச்சங்கள் சினைவினைஆயின், அவை சினைவினை உடனே அன்றி, முதல்வினை உடனும் முடியும்.]

(உ-ம்.) கால் ஒடிந்து, மாடு விழுந்தது.

[ஒடிதல், சினைவினை; விழுதல், முதல்வினை.]

146. இதுவும் அதற்கு ஓர் புறனடை.

INTERCHANGE OF THE FORMS OF ADVERBIAL PARTICIPLES.

[ANOTHER REMARK ON THE SAME.]

சொற்றிரி யினும்பொருள் திரியா வினைக்குறை.

[வினை. சூ. 27.]

[வினை எச்சங்களுள், சொல் திரிந்தாலும், அவற்றின் பொருள் திரியா.]

(உதாரணம்.)

(1.) கோழி கூவிப் பொழுது விடிந்தது........... [கூவ.]

(2.) யான் கொள்ளுவான், பொன் கொடுத்தான்.... [கொள்ள.]

---

147. ஆக்கம் INDISPENSABLE.

ஆக்க வினைக்குறிப் பாக்கமின் றியலா. [வினை. சூ. 28.]

[ஆக்கத்தால் வருகின்ற வினைக்குறிப்புச் சொற்கள், ஆக்கச்சொற்கள் இல்லாமல் வரா.]

(உ-ம்.) (1.) சாத்தன் நல்லன் ஆயினன்.

[நல்லன், ஆக்க வினைக் குறிப்பு; ஆயினன், ஆக்கம்.]*

(2.) சாத்தன் நல்லன்...... [ஆக்கம் தொக்கது.]

---

148. செய்யும் என்னும் முற்று.

THE FINITE VERB OF THE FORM செய்யும்.

பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற்
செல்லா தாகும் செய்யுமென் முற்றே. [வினை. சூ. 29.]

[செய்யும் என்னும் முற்றுவினை, பலர்பாற் படர்க்கை, முன்னிலை, தன்மைகளில் செல்லாது.]

என்று சொல்லவே, மற்றை நான்கு பாலினும் செல்லும் எனக் கொள்க.

(உ-ம்.) (1.) அவன், அவள், அது, அவை, { உண்ணும்.

(2.) "மலை நலம் உள்ளும் குறவன்." [நாலடி. 36. 6.]

(3.) "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும், தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்." [குறள். 7. 9.]

[உள்ளும் = உள்ளுவான்; உவக்கும் = உவப்பாள்.]

---

149. யார் என்பதைக்

யார்என் வினாவினைக் குறிப்புயர் முப்பால்.

[வினை. சூ. 30.]

[வினாப்பொருளைத் தருகிற யார் என்கிற வினைக்குறிப்பு முற்று, உயர்திணை முப்பால்களுக்கும் பொதுவினைஆம்.]

(உ-ம்.) அவன், அவள், அவர், } யார்.

☞ யார் என்பது ஆர் என மருவி வரும். [48-ம் சூ. காண்க.]

---

150. "எவன்" என்பதைக் குறித்து.—OF எவன்.

எவன் என் வினாவினைக் குறிப்பிழி இருபால்.

[வினை. சூ. 31.]

[வினாப்பொருளைத் தருகிற, எவன் என்னும் குறிப்புவினை முற்று, அஃறிணை இரண்டு பாலுக்கும் பொதுவினைஆம்.]

(உதாரணம்.)

(1.) அஃது, அவை, எவன்.

(2.) "சிறை காக்கும் காப்பெவன் செய்யும்?" [குறள். 6. 7.]

☞ எவன், என்பது மருவி என், என்னை, என்ன, ஏன், எனவும் வரும்.

(உ-ம்.) (1.) "நீயோ அன்றேனென்றாய்." [இராமாயணம்.]

(2.) "காக்கில் என்? காவாக்கால் என்?" [குறள். 31. 1.]

சொல்லதிகாரம்.

III-வது: இடைச்சொல்லியல்.—OF PARTICLES.

152. பலவகை இடைச்சொற்கள்.—DIFFERENT KINDS OF PARTICLES.

வேற்றுமை வினைசா ரியையொப் புருபுகள்
தத்தம் பொருள இசைநிறை அசைநிலை
குறிப்பென்எண் பகுதியில் தனித்தியல் இன்றிப்
பெயரினும் வினையினும் பின்முன் ஓர்இடத்
தொன்றும் பலவும்வந் தொன்றுவ திடைச்சொல்.
[இடை. சூ. 1.]

[வேற்றுமை உருபுகள், வினை உருபுகள், சாரியை உருபுகள், ஒப்புருபுகள், தத்தம் பொருளைக் காட்டிய சொற்கள், இசைநிறைக்கிற சொற்கள், அசைநிலைச் சொற்கள், குறிப்பினால் வருஞ் சொற்கள், என்கிற எட்டுவகையை உடையனவாய் தனித்து வழங்கப்படாமல், பெயரிலும் வினையிலும், பின்னும் முன்னுமாகிய ஆறனுள், ஓர் இடத்தில், ஒன்றுயினும் பலவாயினும் வந்து ஒன்றுபட்டு நடப்பது, இடைச்சொல்ஆம்.]

153. இடைச்சொல் ஆகிய ஏ.—THE PARTICLE ஏ.

பிரிநிலை வினாஎண் ஈற்றசை தேற்றம்
இசைநிறை எனஆ றேகா ரம்மே. [இடை. சூ. 3.]

[ஏகாரம் பிரிநிலை முதலான ஆறு பொருளையும் தரும்.]

(உ-ம்.) (1.) அவனே செய்தான்............ [பிரிநிலை.]
(2.) நீயே வந்தாய்?................ [நீயா? வினா.]
(3.) "நிலனே நீரே தீயே வளியே.".... [எண்.]
(4.) "செய்யும் என் முற்றே."....... [ஈற்றசை.]
(5.) நானே செய்தேன்............... [தேற்றம்=துணிவு.]
(6.) "ஏ ஏ இவள் ஒருத்தி பேடியோ." [இசைநிறை.]

☞ இவையே அன்றி, ஏ எதிர்மறைப் பொருளையும் தரும்.

(உ-ம்.) யானே செய்தேன்........... [யான் செய்திலேன்; எதிர்மறை.]

---

154. இடைச்சொல் ஆகிய ஓ.—THE PARTICLE ஓ.

ஒழிஇசை வினாச்சிறப் பெதிர்மறை தெரிநிலை
கழிவசை நிலைபிரிப் பெனஎட் டோவே. [இடை சூ. 4]

[ஓகாரம் ஒழிஇசை முதலான எட்டுப்பொருளையும் தரும்.]

(உதாரணம்.)

(1.) இங்கிருக்கவோ வந்தாய்............. [ஒழியிசை.]

[இருக்கவல்ல, போக வந்தாய்; என ஒழிந்த சொல் கருதி நிற்கின்றது.]

(2.) அவனோ செய்தான்?................ [வினா.]

(3.) ஓ ஓ பெரியன்!..................... [உயர்வு சிறப்பு.]
ஓ ஓ சிறியன்!....................... [இழிவு சிறப்பு.]

(4.) நானோ செய்தேன்................ [நான் செய்திலேன், எதிர்மறை.]

(5.) ஒருவனைத் தூரத்தில் கண்டு, சாத்தனோ, அல்லன்; கொற்றனோ, அல்லன்; என்பது.................. [தெரிநிலை.]

[அல்லாமை தெரிந்தவிடத்தில் நிற்கின்றது.]

(6.) ஓ ஓ என்ன உணர்வில்லையோ......... [கழிவு.]

[கழிவு இரக்கப்பொருள்.]

(7.) "கட்டுரைப்பதென்கொலோ?"....... [அசைநிலை.]

(8.) அவனோ சொன்னான்................ [பிரிப்பு.]

[பலருள் இருந்து ஒருவனைப் பிரித்துச் சொல்லல்.]

155. என, என்று, என்னும், இடைச்சொற்கள்.

THE PARTICLES என AND என்று.

வினைபெயர் குறிப்பிசை எண்பண் பாறினும்
எனவெனும் மொழிவரும் என்றும் அற்றே.
[இடை. சூ. 5.]

[என, என்று, என்னும் இடைச்சொற்கள் வினை முதலிய ஆறு பொருளிலும் வரும்.]

(உதாரணம்.)

(1.) "நீத்தாரெனக் கைவிடலுண்டோ" .... [வினை.]
(2.) "நல்லார் எனத்தாம் நனிவிரும்பிக்கொண்டாரை" [பெயர்.]
(3.) ஒல்லென ஒலித்தது.......................... [குறிப்பு.]
(4.) "பொம்மென்ன வண்டலம்பும் புரிகுழலே" .... [இசை.]
(5.) கை எனக் கால் என............................ [எண்.]
(6.) வெள்ளென விடிந்தது .... [பண்பு.]

---

156. உம் என்கிற இடைச்சொல்.—THE PARTICLE உம்.

எதிர்மறை சிறப்பையம் எச்சம்முற் றளவை
தெரிநிலை ஆக்கமோ டும்மை எட்டே. [இடை. சூ. 6.]

[உம் என்னும் இடைச்சொல், எதிர்மறை முதலிய எட்டுப் பொருள்களிலும் வரும்.]

(உதாரணம்.)

(1.) செய்தலும் கூடும்........................ [எதிர்மறை.]
(2.) "குறவரும் மருளும் குன்றம்"............ [உயர்வு சிறப்பு.]
"மீனும் நாறின; வேறினி வேண்டுமோ" [இழிவு சிறப்பு.]
(3.) பத்தாயினும் எட்டாயினும் கொடு.... [ஐயம்.]
(4.) கொற்றனும்வந்தான்... [சாத்தன் வந்ததன்றி, எனப்பொருள்கொண்டால், இறந்தது தழுவிய எச்ச உம்மை; இனிச் சாத்தனும் வருவான், என்றர்த்தம்கொண்டால், எதிரது தழுவிய எச்ச உம்மை.]

(5.) ஐம்புலனும் அறிவுக்கிடம்........ [முற்றும்மை.]

(6.) நானும் அவனும் போனோம்........ [எண்.]

(7.) நானும் அல்லன் நீயும் அல்லன்.... [தெரிநிலை.]

(8.) பாலும் ஆயிற்று.................... [ஆக்கம்.]

[அதுவே மருந்தும் ஆயிற்று.]

---

157. சில எண்ணிடைச் சொற்கள்.—CERTAIN CONNECTIVE PARTICLES.

பெயர்ச்செவ் வெண்ணே என்றா எனாஎண்
ணான்குந் தொகைபெறும் உம்மைஎன் றெனஒ
டிந்நான் கெண்ணும்அஃ தின்றியும் இயலும்.

[இடை. சூ. 9]

[பெயர்களின் இடையிலே, எண் இடைச்சொல் தொக்கு நிற்க வரும் செவ்வெண், ஏகாரம், என்றா, எனா, என்னும் நான்கெண்ணும், தொகை பெற்று நடக்கும்; உம்மை, என்று, என, ஒடு, ஆகிய இந்நான்கெண்ணும், தொகை பெற்றும் பெறாமலும் நடக்கும்.]

(உ-ம்.) (1.) சாத்தன், கொற்றன், பூதன், மூவரும் வந்தார்.

(2.) சாத்தனே, கொற்றனே, பூதனே, மூவரும் வந்தார்.

[மற்றவைகட்குதாரணம் ஆராய்ந்துகொள்க.]

---

158. THE PARTICLES என்று, என, AND ஒடு.

என்றும் எனவும் ஒடுவும் ஒரோவழி
நின்றும் பிரிந்தெண் பொருடொறு நேரும். [இடை. சூ. 10.]

[என்று முதலிய மூன்று சொல்லும், எண்ணப்படும் பொருள்தோறும் நிற்பதே அல்லாமல், ஒரிடத்தில் நின்றும், வெவ்வேறாய் எண்ணப்படுகின்ற பொருள்கள்தோறும், பொருந்தும்.]

(உ-ம்.) (1.) "பகை, பாவம், அச்சம், பழி, என நான்கும்."

(2.) நன்மை, தீமை, என இரண்டும்.

(3.) "சுவை, ஒளி, ஊறோசை, நாற்றம், என்றைந்தும்."

[ஊறோசை = ஊறு, ஓசை.]

159. THE PARTICLE மன்.

மன்னே அசைநிலை ஒழியிசை ஆக்கம்
கழிவு மிகுதி நிலைபே றாகும். [இடை. சூ. 13.]

["மன்" என்னும் இடைச்சொல், ஒழியிசை முதலிய ஆறு பொருளையுந் தரும்.]

(உதாரணம்.)

(1.) "அது மற்கொண்கன்றேரே." .... [அசைநிலை.]

[மன் என்பதற்கு வேறுபொருள் இல்லை.]

(2.) "கூரியதோர் வாண்மன்." .... [ஒழியிசை.]

[இரும்பை வெட்டியது என்பது ஒழிந்து நின்றது.]

(3.) நெடியன் மன்.......................... [ஆக்கம்.]

[அவனே வலியனுமானான்.]

(4.) "சிறிய கட்பெறினே எமக்கீயுமன்னே."... [கழிவு.]

[அவனிறந்ததனால், எமக்குக் கொடுத்தல் ஒழிந்தது.]

(5.) "எந்தை எமக்கருளுமன்."............. [மிகுதி.]

[மிகுதியும் அருளும்.]

(6.) "மன்று உலகத்து மன்னியது புரிமே."... [நிலைபேறு.]

[மன்னல், இடைச்சொலடியாய்ப் பிறந்த தொழிற் பெயர்.]

[மன்னல் = நிலைபெறுதல்.]

160. மற்று என்னும் இடைச்சொல்.—THE PARTICLE மற்று.

வினைமாற் றசைநிலை பிறிதெனு மற்றே. [இடை. சூ. 14.]

[வினைமாற்று முதலிய பொருளில், மற்று என்பது வரும்.]

(உ-ம்.) "மற்றறிவாம் நல்வினை."........ .... [வினைமாற்று.]
"மற்றுத்தம் வல்லுரு அஞ்சன்மின்." [அசைநிலை.]
"மற்றென் செய்யார்."...... ...... [பிறிது.]

161. கொல் என்னும் இடைச்சொல்.—THE PARTICLE கொல்.

கொல்லே ஐயம் அசைநிலைக் கூற்றே. [இடை. சூ. 16.]

[கொல் என்பது ஐயம், அசைநிலை, என்னும் இரண்டு பொருளிலும் வரும்.]

(உதாரணம்.)

(1.) சாத்தன் கொல் கொற்றன் கொல் .... [ஐயம்.]
(2.) "யாதுகொல் இதுவென எண்ணல் தேற்றலர்." [அசைநிலை.]

---

162. அந்தில், ஆங்கு, என்னும் இடைச் சொல்.—THE PARTICLES அந்தில் AND ஆங்கு.

அந்தில்ஆங் கசைநிலை இடப்பொரு ளவ்வே. [இடை. சூ. 18.]

[இவ்விரண்டு இடைச்சொற்களும், அசைநிலைப் பொருளையும், இடப்பொருளையும், தரும்.]

(உதாரணம்.)

(1.) "அந்திற் கழலினன்." .... [அசைநிலை]
(2.) "அந்திற் கொழுநற்காணிய." ... . [இடம்.]
(3.) "சொரிந்திட்டரிப்பரித்தாங்கு." .... [அசைநிலை.]
(4.) "ஆங்குத்தாம் போற்றிப்புனைந்த உடம்பும்." [இடம்.]

---

163. THE PARTICLE அம்ம.

அம்ம உரைஅசை கேண்மினென் றாகும். [இடை. சூ.19.]

[அம்ம என்னுஞ் சொல், உரை அசைப் பொருளிலும், கேண்மின் என்னும் ஏவற் பொருளிலும், வரும்.]

(உதாரணம்.)

(1.) "அது மற்றம்ம." .... [உரையசை.]
(2.) "அம்ம! வாழி தோழி." ...... [கேண்மின்=கேளுங்கள்.]

(3.) "அம்ம! இதுவென வகலு நீணெறி." [இரா. 1. 6. 44.]

[அம்ம = கேண்மின்.]

(4.) "அம்மா! பெரிதென்றகமகிழ்க." [நீதிநெறி. 15.]

[அம்மா என்பது வியப்பைக் குறிக்கின்ற ஓரிடைச்சொல் எனக்கொள்க.]

---

164. யா முதலிய இடைச்சொற்கள்.—THE PARTICLES யா, &c.

யாகா பிறபிறக்[1]கரோபோ மா[2]திகும்
சின்குறை ஒரும்போலும் இருந்[3]திட்
டன்[4]றும் தாம்தான் கின்றுநின் றசைமொழி.

[இடை. சூ. 22.]

[யா முதலியவை, எவ்விடங்களிலும் வருகிற அசைச் சொற்களாம்.]

[உதாரணம் வரும் இடத்திற காண்க.]

1 பிறக்கு, அரோ;—2 மாது, இகும்;—3 இருந்து, இட்டு;—4 அன்று, ஆம்.

சொல்லதிகாரம்.

IV-வது: உரிச்சொல்லியல்.

OF ADJECTIVES AND ADVERBS.

165. உரிச்சொல் இவை என்பது.—ADJECTIVES AND ADVERBS.

பல்வகைப் பண்பும் பகர்பெயர் ஆகி
ஒருகுணம் பல்குணம் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட் குரியன உரிச்சொல். [உரி. சூ. 1.]

[இசை, குறிப்பு, பண்பு, ஆகிய பல வேறு வகைப்பட்ட பண்புகளையும் தெரிவிக்கிற பெயர்ஆகி, ஒரு குணத்தையும், பல குணத்தையும் சார்ந்து, பெயர் வினைகளை விட்டு நீங்காமல், செய்யுளுக்கு உரியனவாய் நிற்பன, உரிச்சொல்ஆம்.]

☞ இசை = ஓசை; குறிப்பு மனத்தால் அறியப்படுவது; பண்பு ஐம்புலன்களால் அறியப்படுவது.

166. THE WORDS சால, &c.

சால உறு தவ நனி கூர் கழி மிகல். [உரி. சூ. 15.]

[இவை, மிகுதி என்கிற ஒரு குணத்தைக் குறிக்கும், உரிச்சொற்கள்ஆம்.]

(உதாரணம்.)

(1.) "சாற்றுங்கொல், சாலச் சிரித்து."...... [சால வினையெச்சம்.]
(2.) "உறு புலி ஊன் இரை இன்றி."....... [உறு.]
(3.) "தவ உயர்ந்தன." .... [தவ.]
(4.) "கல்லாதவரும் நனி நல்லர்."........ [நனி.]
(5.) "புந்தி கூர் அருள் விதுரன்."........... [கூர்.]
(6.) "கல்வியான் ஆய கழிநுட்பம் கல்லார்." [கழி.]

சொல்லதிகாரம்.

V-வது: பொதுவியல்.

OF PARTS OF SPEECH IN GENERAL.

167. *செய்யுளில் ஆ, ஓ, ஆதல்.*—IN POETRY ஆ BECOMES ஓ.

பெயர்வினை இடத்து னளரய ஈற்றயல்
ஆஓ ஆகலும் செய்யுளுள் உரித்தே. [பொது. சூ. 2.]

[செய்யுளில், பெயர், வினை, ஆகிய இரண்டிலும், ன், ள், ர், ய், ஆகிய இறுதியின்முன் உள்ள ஆகாரம் ஓகாரம் ஆதலும் உரித்தாம்.]

(உ-ம்.) "நீண்டோனே! கரியோனே!" [பாரதம்.]

[மற்றவைகளுக்குதாரணம் வரும் இடத்திற் காண்க.]

168. *வேற்றுமை உருபும் வினையும்.*—CASUAL TERMINATIONS AND VERBS.

உருபுபல அடுக்கினும் வினைவே றடுக்கினும்
ஒருதம் எச்சம் ஈறுற முடியும். [பொது. சூ. 4.]

[வேற்றுமை உருபுகள் பல அடுக்கிவந்தாலும், வினைச் சொற்கள் வெவ்வேறு பல அடுக்கிவந்தாலும், தத்தம் எச்சம் ஒன்று ஈற்றில்வர, அதனோடு அவை எல்லாம் முடியும்.]

(உதாரணம்.)

(1.) கொற்றன் தன் சகோதரனைப் புத்தியால் வென்றான்.

[பல உருபுகள் விரவி அடுக்கி, ஒருவினை கொண்டன.]

(2.) சாத்தனையும் கொற்றனையும் கண்டேன். [தம்முள் வேறுபல.]

(3.) உண்டான், ஓடினன், பாடினன், கொற்றன். [வினைமுற்று.]

---

169. இடைப்பிறவரல்.—ADJUNCTS.

உருபு முற்றீ ரெச்சம் கொள்ளும்
பெயர்வினை இடைப்பிற வரலும்ஆம் ஏற்பன.
[பொது. சூ. 5.]

[வேற்றுமை உருபுகளும், முற்றுகளும், இருவகை எச்சங்களும், கொள்ளும் பெயர், வினை, ஆகிய இவற்றிற்கு இடையில், பொருந்துவன ஆகிய பிறசொற்கள் வருதலும்ஆம்.]

(உதாரணம்.)

(1.) கல்வியால் (மிகச்) சிறந்தான்.......... [வேற்றுமை.]

(2.) இறங்கினன் (மலைமீதேறினை) மனிதன்.... [முற்று.]

(3.) தேர்ந்த (சென்னைபுரிப்) புலவன்....... [பெயர் எச்சம்.]

(4.) எடுத்து (இப்போது) கொடுத்தான்..... [வினை எச்சம்.]

---

170. ஒருமொழி வேறொன்றை அமைத்தல்.

ONE WORD INCLUDING ANOTHER.

ஒருமொழி ஒழிதன் இனங்கொளற் குரித்தே.
[பொது. சூ. 7.]

[நால்வகைச் சொற்களில், ஏதாவது ஒரு சொல், ஒழிந்த தனது இனத்தைக் கொள்ளுதற்கு உரித்தாகும்.]

(உதாரணம்.)

(1.) சோற்றை நனி உண்டான்....... [கறியை நனி தின்றான்.]

(2.) நஞ்சுண்டவன் சாவான்.

[நஞ்சுண்டவள் சாவாள், நஞ்சுண்டவர் சாவார், நஞ்சுண்டது சாகும், நஞ்சுண்டன சாகும் என அமையும்.]

171. எச்சம் முடிதல்.—SUPPLYING OF ELLIPSIS.

பெயர்வினை உம்மைசொல் பிரிப்பென ஒழியிசை
எதிர்மறை இசைஎனும் சொல்ஒழி பொன்பதும்
குறிப்பும் தத்தம் எச்சம் கொள்ளும். [பொது. சூ. 9.]

[பெயர், வினை, உம்மை, சொல், பிரிப்பு, என, ஒழியிசை, எதிர்மறை, இசை, ஆகிய இவ்வொன்பது சொல் எச்சங்களும், குறிப்பெச்சமும், தங்கள் தங்கள் எச்சங்களைக் கொண்டு முடியும்.]

(உதாரணம்.)

(1.) செய்த கொற்றன்; நல்ல சாத்தன்....... [பெயரெச்சம்.]

(2.) செய்து போனான்; செய்து நல்லனாயினான். [வினை எச்சம்.]

(3.) பொன்னனும் வந்தான்.............. [உம்மை; முன் சாத்தனும் வந்தான், எனத் தன் எச்சங் கொண்டது.]

(4.) வருவேன் என்றான்... .... [சொல் எச்சம்; "வருவேன்" எனச் சொன்னான்,' எனத் தன் எச்சங் கொண்டது.]

(5.) அவனே செய்தான்; அவனோ செய்தான்.

[பிரிநிலை எச்சம்; பிறர் செய்திலர், எனத் தம் எச்சங் கொண்டன.]

(6.) "எழுந்தனர் பொருக்கென இரதம் ஏறினார்." [இரா. 1. 6. 69.]

[என எச்சம்; தன் எச்சம் ஆகிய வினைகொண்டது. இ-ள்: விரைவில் தேர் ஏறினார்.]

(7.) செய்யவோ போனான்................. [ஒழியிசை எச்சம்.]

[இ-ள்: செய்ய அல்ல.]

(8.) செய்யினும் நன்று; அவனோ செய்தான்.

[எதிர்மறை எச்சம்; (இ-ள்:) செய்யாவிடினும் நன்று; அவன் செய்திலன்.]

(9.) "கற்றார் அனைத்திலர்பாடு." [குறள். 41. 9.]

"வேலொடு வெறிய செயின்." [குறள். 18. 5.]

[இசை (=சொல்) எச்சம்; கற்றார் = நூலைக்கற்றார்; வெஃகி = பொருளை வெஃகி.]

குறிப்பெச்சத்திற்கு உதாரணம் 93-ம் சூத்திரத்தின் அடியிற் காண்க.

172. தொகைநிலைத்தொடர்.—ELLIPTICAL CONSTRUCTIONS.

பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை
முதலிய பொருளின் அவற்றின் உருபிடை
ஒழிய இரண்டு முதலாத் தொடர்ந்தொரு
மொழிபோல் நடப்பன தொகைநிலைத் தொடர்சொல்.
[பொது. சூ. 10.]

[பெயர்ச்சொல்லோடு பெயர்ச்சொல்லும், பெயர்ச்சொல்லோடு வினைச்சொல்லும், வேற்றுமைமுதல் ஆகிய பொருள்களில், அவற்றின் உருபுகள் நடுவிலே தொக்குநிற்க, இரண்டு சொல் முதலாகத் தொடர்ந்து, ஒரு சொல்போல் வருவன, தொகைநிலைத்தொடர் சொல்ஆம்.]

173. ஆறு தொகைநிலை.

THE SIX KINDS OF ELLIPTICAL CONSTRUCTIONS.

வேற்றுமை வினைபண் புவமை உம்மை
அன்மொழி எனஅத் தொகைஆ றாகும். [பொது. சூ. 11.]

[வேற்றுமை முதல் ஆகிய ஆறும், அந்தத் தொகைநிலை.]

174. வேற்றுமைத்தொகை.—ELLIPSIS OF CASUAL TERMINATIONS.

இரண்டு முதலா இடைஆ றுருபும்
வெளிப்படல் இல்லது வேற்றுமைத் தொகையே.
[பொது. சூ. 12.]

[இரண்டு முதலான ஆறு வேற்றுமை உருபுகளும் தொக்கது, வேற்றுமைத் தொகைஆம்.]

இவற்றிற்கு உதாரணம் 22-ம் பக்கத்திற் காண்க.

☞ "ஆறுருபும்" என்றதனால், உருபும் பயனும் உடன்றொக்க தொகையையுங் கொள்க:—

(உ-ம்.) "அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையுங் காக்கும்."

[கதிர் ஞாயிறு = கதிரை உடைய ஞாயிறு.]

[2-ம் வேற்றுமை உருபும் பயனும் உடன்றொக்க தொகை.]

"பொன் மலர் நாற்றம் உடைத்து." [நீதிநெறி. 5.]

[பொன்மலர் = பொன்னால் செய்த மலர்; 3-ம் வேற்றுமை உருபும் பயனும் உடன்றொக்க தொகை.]

---

175. வினைத்தொகை.—ELLIPSIS OF TENSE IN VERBS.

காலம் கரந்த பெயர்எச்சம் வினைத்தொகை.

[பொது. சூ. 13.]

[காலத்தைக் காட்டும் இடைநிலை தொக்கு நிற்கும் பெயர் எச்சம், வினைத்தொகையாம்.]

(உ-ம்.) "வினைநிலம்," "எறிபுனல்."

இவை வினைகிற, வினைந்த, வினையும்; எறிகிற, எறிந்த, எறியும்; என விரியும்.

☞ வருபுனல், தருசுடர், உணர்ந்திடு ஞானம், என வினைப்பகுதி விகாரப்படும் வினைத் தொகை வரும்.

---

176. பண்புத்தொகை.—ELLIPSIS OF THE ADJECTIVE SIGN.

பண்பை விளக்கும் மொழிதொக் கனவும்
ஒருபொருட் கிருபெயர் வந்தவுங் குணத்தொகை.

[பொது. சூ. 14.]

[குணத்தை விளக்கும் "ஆகிய" என்னும் பண்புருபு தொக்குநின்றவைகளும், ஒரு பொருளுக்கு இரண்டு பெயர்கள் பொதுவாயும் சிறப்பாயும் வந்தவைகளும், பண்புத்தொகைகளாம்.]

(உதாரணம்.)

(1.) கருங் குதிரை.................... [வண்ணப் பண்பு.]
(2.) உருளைப் பூமி.................... [வடிவுப் பண்பு.]
(3.) இரு செவி...................... [அளவுப் பண்பு.]
(4.) இன் சொல்..................... [சுவைப் பண்பு.]
(5.) சாரைப் பாம்பு, ஆயன் சாத்தன்... [இரு பெயர் ஒட்டு.]
☞ வெண்ணிறத்தூவி....... ...... [பன் மொழித் தொடர்.]

[வெண்மை ஆகிய நிறம் ஆகிய தூவி; தூவி = சிறகு.]

---

177. உவமைத்தொகை.

ELLIPSIS OF PARTICLES EXPRESSING COMPARISON.

உவம உருபில துவமைத் தொகையே. [பொது. சூ. 15.]

[உவமையைக் குறிக்கும் உருபு இல்லாத தொகை, உவமைத் தொகைஆம்.]

☞ உவமம் நான்கு வகைப்படும்; அவை வினை, பயன், மெய், உரு, என்பன பற்றிவருவன.

(உதாரணம்.)

(1.) புலிக் கொற்றன்.... [வினை உவமத் தொகை.]
(2.) மழைக் கை........ [பயன் உவமத் தொகை.]
(3.) கயற் கண்......... [மெய் (= உடம்பு) உவமத் தொகை.]
(4.) பொற் சுணங்கு.... [உரு உவமத் தொகை.]
(5.) மரகதக் கிளி மொழி. [பன் மொழித் தொடர்.]

---

178. உவம உருபுகள்.—PARTICLES EXPRESSING COMPARISON.

போலப் புரைய ஒப்ப உறழ
மானக் கடுப்ப இயைய ஏய்ப்ப
நேர நிகர அன்ன இன்ன
என்பவும் பிறவும் உவமத் துருபே. [பொது. சூ. 16.]

["போல" முதலியவை உவம உருபுகள்ஆம்.]

179. உம்மைத்தொகை.—ELLIPSIS OF உம்.

எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல்
எனுநான் களவையுள் உம்இல தத்தொகை.
[பொது. சூ. 17.]

["எண்ணல்" முதலிய நான்கு அளவைப் பெயர்களுள், உம் உருபு இல்லாதது, உம்மைத்தொகைஆம்.]

(உதாரணம்.)

(1.) இராப் பகல்.................. [இராவும் பகலும்.]
(2.) இரண்டரைப் பலம்............ [எடுத்தல்.]
(3.) மூன்றே முக்கால் ஆழாக்கு......... [முகத்தல்.]
(4.) முந்நூற்று முப்பதடி............. [நீட்டல்.]
(5.) சேர சோழ பாண்டியர்......... [பன் மொழித் தொடர்.]

---

180. அன் மொழித் தொகை.—METONYMY.

ஐந்தொகை மொழிமேற் பிறதொகல் அன்மொழி.
[பொது. சூ. 18.]

[வேற்றுமை முதலிய ஐந்து வகைத்தொகை நிலைத்தொடர் மொழிகளின் புறத்து, வேறு மொழிகள் தொக்குவருதல், அன்மொழித்தொகைஆம்.]

(உதாரணம்.)

(1.) பூங்குழல் = பூவைஉடைய குழலைஉடைய பெண்.
(2.) பொற்றொடி = பொன்னாற் செய்த தொடியினை உடையாள்........................
(3.) கவியிலக்கணம் = கவிக் கிலக்கணஞ் சொல்லப்பட்ட நூல்..........................
(4.) பொற்றாலி[1] = பொன்னிற்செய்த தாலியை உடையாள்..........................
(5.) கிள்ளிகுடி = கிள்ளியினது குடியிருக்கும் ஊர்....
(6.) கீழ் வயிற்றுக் கழலை = கீழ்வயிற்றின்கட் கழலை போல்வான்.

(1.)–(6.): ஆறு வேற்றுமைபற்றி வந்தன.

(7.) தாழ்குழல்....	[வினைத்தொகைப் புறத்துப் பிறந்தது.]	பற்றித் தொகைகளிற் பிறந்தன.
(8.) கருங்குழல்..........	[பண்புத்தொகைப் புறத்துப் பிறந்தது.]	
(9.) தேன்மொழி..........	[உவமைத்தொகைப் புறத்துப் பிறந்தது.]	
(10.) உயிர்மெய்.........	[உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்தது.]	
(11.) பொற்சுணங்குமேனி.	[மேனியை உடையாள்; பன்மொழித் தொடர்.]	

---

181. பலர் இறு.—THE PLURAL TERMINATION.

உயர்திணை உம்மைத் தொகைபலர் ஈறே.

[பொது. சூ. 21.]

[உயர்திணை ஒருமையில் வருகிற உம்மைத்தொகைகள், பலர்பால் விகுதிகளை உடையனவாம்.]

(உ-ம்.) சேர சோழ பாண்டியர்; தேவன் தேவிகள்.

☞ "ஈறே" என்ற தேற்றத்தால், நன்மை தீமை, நன்மை தீமைகள்; தந்தை தாய், தந்தை தாயர்; என அஃறிணைப்பெயரும் பொதுப்பெயரும், பன்மை ஈறுபெற்றும் பெறுஉம், வரும் எனக்கொள்க.

---

182. AMBIGUOUS ELLIPTICAL EXPRESSIONS.

தொக்குழி மயங்குந் இரண்டு முதலேழ்
எல்லைப் பொருளின் மயங்கும் என்ப. [பொது. சூ. 22.]

[வேற்றுமை உருபு முதலிய உருபுகள் தொக்கு நின்ற இடத்தில், மயங்கும் தொடர்சொற்கள், இரண்டு பொருள் முதல், ஏழு பொருள்வரைக்கும், மயங்கும் என்று புலவர் சொல்வர்.]

(உ-ம்.) (1.) தெய்வவணக்கம்.......... [இரண்டு பொருள்.]

[(1.) தெய்வத்துக்கு வணக்கம், (2.) தெய்வத்தை வணங்கும் வணக்கம்.]

(2.) தற்சேர்ந்தார்............... [மூன்று பொருள்.]

[(1.) தன்னைச் சேர்ந்தார், (2.) தன்னொடு சேர்ந்தார், (3.) தன்கட் சேர்ந்தார்.]

(3.) சொல்லிலக்கணம்......... [நான்கு பொருள்.]

[(1.) சொல்லினதிலக்கணம், (2.) சொற்கிலக்கணம், (3.) சொல்லின்கண் இலக்கணம், (4.) சொல்லினதிலக்கணஞ் சொன்ன நூல்.]

(4.) பொன்மணி................. [ஐந்து பொருள்.]

[(1.) பொன்னால் ஆகிய மணி, (2.) பொன்னாகிய மணி, (3.) பொன்னின்கண் மணி, (4.) பொன்னொடு சேர்ந்த மணி, (5.) பொன்னும் மணியும்.]

(5.) மரவேலி.................... [ஆறு பொருள்.]

[(1.) மரத்தைக் காக்கிற வேலி, (2.) மரத்துக்கு வேலி, (3.) மரத்தினது வேலி, (4.) மரத்தின் புறத்து வேலி, (5.) மரத்தால் ஆகிய வேலி, (6.) மரமாகிய வேலி.]

(6.) சொற்பொருள்............. [ஏழு பொருள்.]

[(1.) சொல்லால் அறியப்படு பொருள், (2.) சொல்லினது பொருள், (3.) சொல்லுக்குப் பொருள், (4.) சொல்லின்கட் பொருள், (5.) சொல்லும் பொருளும், (6.) சொல்லாகிய பொருள், (7.) சொல்லானது பொருள்.]

☞ வலிநது பொருள்கொண்டால், மேற்குறித்த எழெல்லை அடந்தும் வரும்.

---

183. தொகாநிலை.—UNELLIPTICAL CONSTRUCTIONS.

முற்றீ ரெச்சம் எழுவாய் விளிப்பொருள்
ஆறுரு பிடைஉரி அடுக்கிவை தொகாநிலை.

[பொது. சூ. 23.]

["முற்று" முதல் "விளி" ஈறாக உள்ள ஐந்துவகைப் பொருள்களில் மொழிகள் புணரும் புணர்ச்சியும், வேற்றுமை உருபுகளோடு மொழிகள் புணரும் புணர்ச்சியும், இடை, உரி, அடுக்கு, இவற்றின் புணர்ச்சியும், ஆன இவை தொகாநிலையாம்.]

உதாரணம் 23-ம் பக்கத்திற் காண்க.

184. ஏழு வழு.—THE SEVEN GRAMMATICAL ERRORS.

திணையே பால்இடம் பொழுது வினா[1]இறை
மரபாம் ஏழும் மயங்கினும் வழுவே. [பொது. சூ. 24.]

["திணை" முதலிய ஏழும் மயங்கினால் வழுஆம்.]

(உதாரணம்.)

(1.) நம்பி வந்தது .... [திணை வழு.]
(2.) தாய் வந்தான் .... [பால் வழு.]
(3.) அவன் வந்தேன் .... [இட வழு.]
(4.) நேற்று வருவான் .... [கால வழு.]
(5.) அப்பசு பாலோ சினையோ? .... [வினா வழு.]
(6.) கடம்பூர்க்கு வழி யாது? என்பதற்கு, இடம் பூணி என் ஆவின் கன்றன்று. [விடை வழு.]
(7.) பசுவின் குட்டி......என்பது.......... [மரபு வழு.]

---

185. சில வினா விடைகளைக் குறித்து.

CERTAIN QUESTIONS AND THEIR ANSWERS.

ஐயந் திணைபால் அவ்வப் பொதுவினும்
மெய்தெரி பொருள்மேல் அன்மையும் விளம்புப. [பொது. சூ. 25.]

[வினாக்களில், திணைஐயத்தினை அத்திணைகளுக்குப் பொதுவாயிருக்குஞ் சொல்லினாலும், பாலையத்தினை அப்பால்கட்குப் பொதுவாயிருக்குஞ் சொல்லினாலும், மெய்தெரிந்த பொருள்மேல் அல்லாத தன்மையை வைத்தும், புலவர் சொல்வர்.]

(உதாரணம்.)

வினா. (1.) குற்றியோ? மனுடனோ? அங்கு தோன்றுகிற உரு.......... [திணை ஐயம்.]

[உரு என்பது குற்றிக்கும் மனுடனுக்கும் பொது.]

---

1 இறை = விடை.

(2.) ஆண் மகனோ? பெண் மகளோ? அவ்விடத்தில் தோன்றுகிறவர். } [பால் ஐயம்.]

[தோன்றுகிறவர் என்பது இருபாற்கும் பொது.]

(3.) ஒன்றோ? பலவோ? அங்கு வந்த குதிரை.................... } [அஃறிணைப் பால் ஐயம்.]

[குதிரை என்பது பால்பகா அஃறிணை ஆதலால், இருபாற்கும் பொது.]

விடை. (1.) (குற்றி என்றால்) மனுடன் அன்று.*

[(அக்குற்றி) மனுடன் அன்று]

(மனுடன் எனில்) குற்றி அல்லன்.

[(அம்மனுடன்) குற்றி அல்லன்.]

(2.) (ஆண்மகன் எனில்) பெண்மகள் அல்லன்.

[(அம்மகன்) பெண்மகள் அல்லன்.]

(பெண்மகள் எனில்) ஆண்மகன் அல்லள்.

[(அப்பெண்) ஆண்மகன் அல்லள்.]

(3.) (ஒன்றெனில்) பலவன்று.

[(அது) பலவன்று.]

(பலவெனின்) ஒன்றல்ல.

[(அவை) ஒன்றல்ல.]

---

186. உயர்திணையைத் தொடர்ந்த அஃறிணை.

A NO CASTE NOUN PRECEDED BY A HIGH CASTE NOUN.

உயர்திணை தொடர்ந்த பொருள்முதல் ஆறும்
அதனொடு சார்த்தின் அத்திணை முடிபின.

[பொது. சூ. 26.]

[உயர்திணையைப்பற்றிய பொருள் முதலிய ஆறையும் அவ்வுயர்திணையோடு சேர்த்து முடித்தால், அவ்வுயர்திணை முடிபை உடையனவாம்.]

---

* ஏனெனில், குற்றி என்னும் அஃறிணைப்பெயருக்குப் பயனிலை அன்று என்பது; அக்குற்றி என்பது மனுடன் என்பதன்முன் குறைந்து நிற்பதால், அன்று என்னும் குறிப்புவினை முற்றிற்கெழுவாய், குற்றி என்பதேயன்றி, மனுடன் அன்று.

(உ-ம்.) கொற்றன் பொன் பெரியன், நாடு பெரியன், வாளுள் பெரியன், கை சிறியன், குணநல்லன், நடை கடியன்.

☞ யானை கோடு பெரியது, என அஃறிணையோடு சேர்த்தால், அஃறிணை முடிபை உடையதாயும் வரும்.

——»»««——

187. திணை, பால்களுக்கும், வேறு வினைப்பொருள்களுக்கும், ஒரு முடிபு.—HIGH AND NO CASTE NOUNS HAVING A COMMON PREDICATE.

திணைபால் பொருள்பல விரவின சிறப்பினும்
மிகவினும் இழிபினும் ஒருமுடி பினவே. [பொது.சூ.27.]

[திணை, பால், வேறு வினைப்பலபொருள்கள், ஆகிய இவை கலந்துவந்த இடத்தில், சிறப்பினாலும், மிகுதியினாலும், இழிவினாலும், ஒரு முடிபை உடையனவாம்.]

(உதாரணம்.)

(1.) "திங்களும் சான்றோரும் ஒப்பர்." [திணை விரவல்; சிறப்பு.]

(2.) மூர்க்கரும் முதலையுங் கொண்டதுவிடா................. [திணை விரவல்; இழிவு.]

(3.) மனைவியுந் தானும் வந்தான்........ [பால் விரவல்; சிறப்பு.]

(4.) மாலையும் முடியும் கவித்தான்... [வேறு வினைப் பல பொருள் விரவல்; சிறப்பு.]

[மற்றவைகளும் இப்படியே வரும்.]

——»»««——

188. திணை, பால், வழு அமைதி.—GENDERS AND NUMBERS INTERCHANGED.

உவப்பினும் உயர்வினும் சிறப்பினும் [1]செறலினும்
[2]இழிப்பினும் பால்திணை இழுக்கினும் இயல்பே.
[பொது. சூ. 28.]

1 செறல் = கோபித்தல்:—2 இழிப்பு = இழித்தல்.

["உவப்பு" முதலியவைகளினாலே, பால், திணை, வழுவி வந்தாலும், இலக்கணமேயாம்.]

(உதாரணம்.)

(1.) மகனை, என் அம்மைவந்தாள், எ-து .... [உவப்பு.]
(2.) ஒருவனை, அவர் வந்தார், எ-து. .... [உயர்வு.]
(3.) "தாதா மூவேழுலகுக்குந்தாயே." .... [சிறப்பு.]
(4.) "எனைத்துணையர் ஆயினும் என்னாம்,தினைத்துணையும் தேரான் பிறனில் புகல்." .... [செறல்.]
(5.) வீரத்தன்மை இல்லானை நோக்கி, இவன்பெண், எ-து. .... [இழிப்பு.]

---

189. ஒருமை, பன்மை, இடம்.—INTERCHANGE OF NUMBERS AND PERSONS.

ஒருமையிற் பன்மையும் பன்மையின் ஒருமையும்
ஓரிடம் பிறவிடம் தழுவலும் உளவே. [பொது. சூ. 29.]

[ஒருமையிற் பன்மைச்சொல்லையும், பன்மையில் ஒருமைச்சொல்லையும், ஓரிடத்தில் வேறிடத்துச் சொல்லையும், தழுவுதலும் உளவாம்.]

(உதாரணம்.)

(1.) அவன் இக்கிணற்று நீர் எல்லாம் இறைத்தான். [ஒருமையிற் பன்மை.]
(2.) இரண்டு கையும் துடித்தது .... [பன்மையில் ஒருமை.]
(3.) சாத்தன் தாய் இவை செயவலோ? [தன்மையில் படர்க்கை.]
(4.) நீயோ? அவனோ? யார் இது செய்தார்? [விரவி ஓரிடத்திற் பிற இடம் வருதல்.]

---

190. நிகழ்காலம்.—THE PRESENT TENSE.

முக்கா லத்தினும் ஒத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழும் காலத் தானே. [பொது. சூ. 32.]

[மூன்று காலத்திலும், செயல் இடைவிடாமல் ஒரேவித மாய் நடக்கின்ற பொருள்களை, நிகழ்காலத்தாற் சொல்வார் புலவர்.]

(உ-ம்.) (1.) வனம் அடர்த்தியாய் இருக்கிறது.
(2.) கடவுள் சகலமும் பார்க்கிறார்.

---

191. TENSES INTERCHANGED.

விரைவினும் மிகவினும் தெளிவினும் இயல்பினும்
பிறழவும் பெறூஉம் முக் காலமும் ஏற்புழி.
[பொது. சூ. 33.]

[விரைவு, மிகுதி, தெளிவு, இயல்பு, ஆகிய இவைகளினு லே, மூன்று காலங்களும், ஏற்கும் இடத்தில், ஒரு காலம் மற் றொருகாலம் ஆகச் சொல்லப்படவும் பெறும்.]

(உதாரணம்.)

(1.) என்னுடன் வருகிறாயா? என்ற வினவிற்கு,
விடை. வந்துவிட்டேன், வந்துவிட்டேன், எனல்.
[விரைவினால் நிகழ்காலத்துக்கு இறந்தகாலம் வந்தது.]

(2.) இவ்வீட்டில் இருந்தால் மோசம் போனாய்.... [மிகுதி.]
[எதிர்காலத்துக்கு இறந்தகாலம் வந்தது.]

(3.) மின்னினால் மழை பெய்தது.................. [தெளிவு.]
[எதிர்காலத்துக்கு இறந்தகாலம் வந்தது.]

(4.) முன் எல்லாம் அவன் இங்கே வருவான்...... [இயல்பு.]
[இறந்தகாலத்துக்கு எதிர்காலம் வந்தது.]

---

192. ஆறு வகை வினா.—THE SIX KINDS OF QUESTIONS.

அறிவறி யாமை ஐயுறல் கொளல்கொடை
ஏவல் தரும்வினா ஆறும் இழுக்கார். [பொது. சூ. 34.]

["அறிவு" முதலியன பற்றிவரும் ஆறு வினாவையும் நீக்காது கொள்வர் புலவர்.]

(உதாரணம்.)

(1.) இப்பாட்டுக்கு அருத்தம் என்ன?........ [அறிவினா.]
[ஆசிரியன் கேட்பது.]

(2.) அவ்வூருக்குப் போகும் வழியாது?..... [அறியா வினா.]

(3.) குற்றியோ? மனுடனோ?.............. [ஐய வினா.]

(4.) எள்ளுண்டோ? நெல்லுண்டோ?....... [கொளல் வினா.]

(5.) உன்னிடம் பணமில்லையா?.......... [கொடை வினா.]

(6.) சாத்தா, உண்டாயா?................. [ஏவல் வினா.]

---

193. எட்டுவகை விடை.—THE EIGHT KINDS OF ANSWERS.

சுட்டு மறைநேர் ஏவல் வினாதல்
உற்ற துரைத்தல் உறுவது கூறல்
இனமொழி எனும்எண் இறையுள் இறுதி
நிலவிய ஐந்துமப் பொருண்மையி னேர்ப.

[பொது. சூ. 35.]

["சுட்டு" முதலிய எட்டு விடைகளுள், முதல் மூன்றும் செவ்வன் இறைஆம்; மற்றைய ஐந்தும் விடைப்பொருளைத் தருதலால், புலவர் விடைஎனக் கொள்வர்.]

(உதாரணம்.)

(1.) வினா. எங்கேபோகிறாய்? விடை. அங்கே.... [சுட்டு.]
(2.) வினா. உண்பாயா?...... விடை. உண்ணேன். [மறை.]
(3.) விடை. உண்பேன். [நேர் விடை.]
} செவ்வன் இறை.

(4.) நீ உண்................ [ஏவல்.]

(5.) உண்பேனோ?.......... [வினாவுதலால் விடை கூறுதல்.]

(6.) வயிறு குத்திற்று........ [உற்றதுரைத்தல்.]

(7.) வயிறு குத்தும்.......... [உறுவது கூறல்.]

(8.) வினா. இதை எழுதுவையா? விடை. அதை எழுதுவேன்.
[இனம் மொழிதல்.]

194. மரபு.—USAGE.

எப்பொருள் எச்சொலின் [illegible]பா றுயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப[illegible] மரபே. [பொது. சூ. 37.]

[எந்தப் பொருளை, எந்தச் [illegible]லினால், எந்த வழியால், அறிவுடையோர் சொன்னார்[illegible], அப்படிச் சொல்லுதல் மரபாம்.]

(உ-ம்.) (1.) குதிரைக்குட்டி; (2.) பசுக்கன்று; (3.) மாங்கன்று; (4.) தென்னம்பிள்ளை; (5.) கோழிக்குஞ்சு.

---

195. WORDS PUT IN APPOSITION.

ஒருபொருள் மேற்பல பெயர்வரின் இறுதி
ஒருவினை கொடுப்ப தனியும் ஒரோவழி. [பொது. சூ. 41.]

[ஒரு பொருளைக்குறித்துப் பல பெயர் வந்தால், வாக்கியத்து முடிவில் ஒரு பயனிலை கொடுத்துக் கூறுவர்; ஒரு பொருள் என்று வாக்கியத்தில் தெளிவாய்த் தோன்றினால், பெயர்தோறும் பயனிலை கொடுத்தும் சொல்லுவர் புலவர்.]

(உதாரணம்.)

(1.) கல்வியிற் பெரியோர், புலவர் பெருமானார், கவிச் சக்கரவர்த்தியார், கம்பர் இயற்றினார்.
[ஒருவினை கொடுத்து முடித்திருக்கின்றது.]

(2.) கல்வியிற் பெரியர் எழுதினார்; புலவர் பெருமானார் எழுதினார்; கவிச் சக்கரவர்த்தியார் எழுதினார்; கம்பர் எழுதினார்.
[தனிவினை கொடுத்து முடித்தல்.]

---

196. சொல் அடுக்கி வரல்.—REPETITION OF WORDS.

அசைநிலை பொருள்நிலை இசைநிறைக் கொருசொல்
இரண்டு மூன்றுநான் கெல்லைமுறை அடுக்கும்.
[பொது. சூ. 44.]

[அசைநிலை, பொருள்நிலை,[1] இசைநிறை, இவற்றிற்கு ஒரு சொல் இரண்டு, மூன்று, நான்கு, வரை முறையாக அடுக்கும்.]

(உதாரணம்.)

(1.) அன்றே, அன்றே........................ [அசைநிலை.]
(2.) "வந்தது, வந்தது, கூற்று."................ [விரைவு.]
(3.) விடு, விடு................................ [கோபம்.]
(4.) உண்ணுக, உண்ணுக........................ [சந்தோஷம்.]
(5.) பாம்பு, பாம்பு, பாம்பு.................... [பயம்.]
(6.) "பாடுகோ, பாடுகோ, பாடுகோ, பாடுகோ." [இசைநிறை.]

---

197. INDISPENSABLE ADJUNCTS.

ஒருபொருட் பல்பெயர் பிரிவில வரையார்.

[பொது. சூ. 46.]

[ஒரு பொருள் குறித்துப் பலபெயர் சேர்ந்து வந்தால், அப்பொருளை விட்டுப் பிரிக்கப் பெறாதவைகளை நீக்காது கூறுவர் புலவர்.]

(உ-ம்.) (1.) ஆசிரியன், பேரூர் கிழான், சாத்தன், வந்தான்.

[இதிற் கூறிய ஒவ்வொரு பெயரும் சாத்தனுக்கின்றியமையாதது; ஆதலால், அப்பெயர்கள் பிரிக்கப்படா.]

---

198. ஒருபொருட் பன்மொழி.—SYNONYMS.

ஒருபொருட் பன்மொழி சிறப்பினின் வழா.

[பொது. சூ. 47.]

[ஒரு பொருளைக் குறித்த பல மொழிகள் சிறந்து நிற்கின்றன; ஆதலால், அவை தப்பன்று.]

(உ-ம்.) "நாகிளவண்டு" "இர்த்திரைத்தார்த்தல்" மீமிசை."

[இராமாயணம்.]

1 பொருள்நிலை பலவகைப்படும். அ-ன:—விரைவு, கோபம், சந்தோஷம், பயம், அவலம், முதலியன.

199. உம்வேண்டியது.—உம் NECESSARY.

இனைத்தென் றறிபொருள் உலகின் இலாப்பொருள்
வினைப்படுத் துரைப்பின் உம்மை வேண்டும்.

[பொது. சூ. 48.]

(உதாரணம்.)

(1.) மூவேந்தரும் வந்தார்.......... [இனைத்தென்றறி பொருள்.]
(2.) ஒளிமுன் இருள் எங்குமில்லை. [உலகின் இல்லாப் பொருள்.

200. செயப்படு பொருளைக் கருத்தாவாகச் சொல்லல்.

THE OBJECT USED AS THE SUBJECT.

செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கினுள் உரித்தே.

[பொது. சூ. 49.]

[செயப்படுபொருளை வினைமுதலைப்போல வைத்து, அதன் மேல் வினைமுதல் வினையை ஏற்றிச் சொல்வதும், வழக்கில் உரித்தாம்.]

(உ-ம்.) இவ்வீடு யான் கட்டியது.

☞ "கிளத்தலும்" என்னும் உம்மையால், கருவி, நிலம், செயல், காலம், ஆகிய இவைகளையுங் கருத்தாவாகச் சொல்லுதலும் உண்டு எனக்கொள்க:—

(உதாரணம்.)

(1.) இவ்வெழுத்தாணி யான் எழுதியது.............. [கருவி.]
(2.) இவ்வீடு யான் இருந்தது........................ [நிலம்.]
(3.) இச்செயல் யான் செய்தது........................ [செயல்.]
(4.) இவ்வருஷம் அவன் செனித்தது.................... [காலம்.]

நன்னூற் சுருக்கம் முற்றிற்று.

APPENDIX.

அநுபந்தம்.

TABLE FOR PARSING.

பதங்கட்கு இலக்கணஞ்சொல்லும் முறைகாட்டும் அட்டவணை.

பெயர்ச்சொல்.—NOUN.

பெயர் {
- இடுகுறி { மரபு / ஆக்கம் } பொது
- காரணம் { மரபு / ஆக்கம் } பொது
- காரண இடுகுறிமரபு } *சிறப்பு
- பண்பு... ... ...
- தொழில்... . . . .
- வினையாலணையும் .. ..
- [இது காரணப்பெயரில் அடங்கியது.]

}

உயர்திணை { ஆண் / பெண் / பலர் }
அஃறிணை { ஒன்றன் / பலவின் / † பாலபகாதது }
} பால

{ தன்மை / முன்னிலை / படர்க்கை }

{ எழுவாயத் தொகாநிலைத் தொடராய,....
2-ம
3-ம
4-ம
5-ம
6 ம
7-ம } வேற்றுமை,—பொருளில வந்த { தொகைநிலைத —தொடராய், / தொகாநிலைத —தொடராய, }
விளி வேற்றுமைத் தொகாநிலைத் தொடராய, }

—கொண்டு முடிந்தது (சந்தி உண்டாற் கூறுக)

---

* இயற்பெயர், பெரும்பாலும், இடுகுறிப்பெயரிலும், சிறப்புப்பெயர் காரணப்பெயரிலும், அடங்குதலால, இவற்றை இவ்வட்டவணையிற் காட்டினேமிலலே

† திணை, பால், இடங்களுக்குப் பொதுவாய்வரும் பெயர்களின் பொதுமை, மேலவருஞ் சிறப்புப்பெயர் விளக்கினால் நீங்குதலால, அதனையுமுடன் கூறுவது செயமுறை, பின்னே கூறப்படும் விளக்கும் இது பொருந்தும

வினைச்சொல்.—VERB.

(தெரிநிலை வினை எனின்)

- செயப்படுபொருள் உள்ள / செயப்படுபொருள் இல்லாத
  - இறந்தகாலம் / நிகழ்காலம் / எதிர்காலம் / முக்காலத்துப் பொது
    - உயர்திணை: ஆண், பெண், பலர்
    - அஃறிணை: ஒன்றன், பலவின்
    - பால்பகாதது
      - பால்: தன்மை / முன்னிலை / படர்க்கை
        - உடன்பாடு / எதிர்மறை
          - தெரிநிலை: செயவினையாய்கிற்கின்ற / செயப்பாட்டுவினையாய் நிற்கின்ற
            - தன்வினை / பிறவினை
              - வினைமுற்று, தொகாநிலைத் தொடராய்,—எழுவாய்க்குப் பயனிலையாய் முடிகின்றது
              - வினையெச்சம், தொகாநிலைத் தொடராய்,—கொண்டு முடிகின்றது
              - பெயரெச்சம், தொகாநிலைத் தொடராய்,—கொண்டு முடிகின்றது
              - *வினையாலணையும் பெயர்
              - *தொழிற்பெயர்.

(குறிப்புவினை எனின்)

- செயப்படுபொருள் உள்ள / செயப்படுபொருள் இல்லாத
  - உயர்திணை: ஆண், பெண், பலர்
  - அஃறிணை: ஒன்றன், பலவின்
    - பால்: தன்மை / முன்னிலை / படர்க்கை
      - உடன்பாடு / எதிர்மறை
        - குறிப்பு
          - வினைமுற்று, தொகாநிலைத் தொடராய்,—எழுவாய்க்குப் பயனிலையாய் முடிகின்றது
          - வினையெச்சம், தொகாநிலைத் தொடராய்,—கொண்டு முடிகின்றது
          - பெயரெச்சம், தொகாநிலைத் தொடராய்,—கொண்டு முடிகின்றது
          - *வினையாலணையும் பெயர்
          - *தொழிற்பெயர்
- மூவிடம் ஐம்பால்கட்கும் பொது........................

* வினையால் அணையும் பெயர்க்கும், தொழிற்பெயர்க்கும், இவையேயன்றிப் பெயரின் அட்டவணையின்படியும் இலக்கணம் கூறுக.

இடைச்சொல்.—Particle.

வேற்றுமை, வினை, சாரியை, ஒப்பு, முதலியன (152-ம் சூத்திரத்தைக் காண்க)	இடைச்சொல் (பொருள் உண்டெனிற் கூறுக)

உரிச்சொல்.—Adjective and Adverb.

இசை, குறிப்பு, பண்பு	உரி	—கொண்டு முடிகின்றது
அல்லது		
குணப்பண்பு, தொழிற்பண்பு	உரி	

EXAMPLES PARSED.

இலக்கணங்கூறிய உதாரணங்கள்.

1. "நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்." [குறள். 3 8.]

நிறை எ-து செயப்படுபொருள் இல்லாத, இறந்தகால, அஃறிணைப் பலவின்பாற படர்க்கை, உடன்பாட்டுத் தெரிநிலைச் செய்வினையாய் நிற்கின்ற, தனவினைக் காலங்கரந்த பெயரெச்சம்; வினைத்தொகைநிலைத்தொடராய், மொழி என்னும் பெயரைக்கொண்டு முடிகின்றது.

["நிறைமொழி" எனபதில், சந்தி இயல்பு]

மொழி எ-து ஆகுபெயராகிய காரண இடுகுறி மரபுப் பொதுப் பெயா; அஃறிணைப் பலவின்பாற படர்க்கை; இரண்டாம் வேற்றுமை; உடைமைப்பொருளில் வந்த, உருபும் பயனும் உடனதொகக தொகைநிலைத் தழாததொடராய், மாந்தர் என்னும் பெயரைக்கொண்டு முடிகின்றது.

["மொழிமாநதா" எனபதில், சநதி இயல்பு]

மாந்தர் எ-து காரண மரபுப் பொதுப்பெயர்; உயர்திணைப் பலர் பாற படர்க்கை; ஆறும் வேற்றுமை; பண்புத் தற்கிழமைப் பொருளில் வந்த தொகைநிலைத் தொடராய், பெருமை என்னும் பெயரைக்கொண்டு முடிகின்றது.

["மாந்தா பெருமை" எனபதில், சநதி இயல்பு]

பெருமை எ-து இடுகுறி மரபுக் குறிப்புப் பண்புப் பொதுப்பெயர்; அஃறிணை ஒன்றன்பாற் படர்க்கை; இரண்டாம் வேற்றுமை; ஆக்கப்படுபொருளில் வந்த தொகைநிலைத் தொடராய், காட்டிவிடும் என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிகின்றது.

["பெருமை நிலத்து" என்பதில், சந்தி இயல்பு.]

நிலத்து எ-து ஆகுபெயராகிய காரண இடுகுறி மரபுப் பொதுப் பெயர்; அஃறிணை ஒன்றன்பாற் படர்க்கை; ஏழாம் வேற்றுமை; பிறிதின் கிழமைப்பொருட்கு இடம் இடமாய் நிற்கின்ற இடப்பொருளில் வந்த தொகைநிலைத்தொடராய், காட்டிவிடும் என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிகின்றது.

[நிலம் + அத்து = நிலத்து என வந்ததில், மகரங்கெட்டு, அத்துத் தோன்றியது; இது விகாரச் சந்தி.]

மறை எ-து காரண இடுகுறி மரபுப் பொதுப்பெயர்; அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை; இருபெயரொட்டுப் பண்புத்தொகை நிலைத்தொடராய், மொழி என்னும் பெயரைக்கொண்டு முடிகின்றது.

["மறைமொழி" என்பதில், சந்தி இயல்பு.]

மொழி எ-து ஆகுபெயராகிய காரண இடுகுறி மரபுப் பொதுப் பெயர்; அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை; எழுவாய்த் தொகாநிலைத் தொடராய், காட்டிவிடும் என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிகின்றது.

["மொழி காட்டிவிடும்" எனபதில், சந்தி இயல்பு.]

காட்டிவிடும் எ-து செயப்படுபொருள் உள்ள, நிகழ்கால, அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை, உடன்பாட்டுத் தெரிநிலைச் செய்வினையாய் நிற்கின்ற, தன்வினை வினைமுற்று; மொழி என்னும் எழுவாய்க்குப் பயனிலையாய் நிற்கின்றது.

---

2. "அரும்பயன் ஆயும் அறிவினர் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல்." [குறள். 20. 8.]

அருமை என்பது இடுகுறி மரபுக் குறிப்புப் பண்புப் பொதுப் பெயர்; அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை; பண்புத் தொகைநிலைத் தொடராய், பயன் என்னும் பெயருடன் முடிகின்றது.

[அருமை என்பதன் ஈறுபோய், பகரத்துக்கினமாகிய மகரம் மிகுந்தது, சந்தி விகாரம்.]

பயன் எ-து இடுகுறி மரபுக் குறிப்புப் பண்புச் சிறப்புப்பெயர்; அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை; இரண்டாம் வேற்றுமை; அடையப் படுபொருளில் வந்த தொகைநிலைத் தொடராய், ஆயும் என்னும் வினையைக்கொண்டு முடிகின்றது.

["பயன் ஆயும்" என்பதில், சந்தி இயல்பு.]

ஆயும் எ-து செயப்படுபொருள் உள்ள, எதிர்கால, உயர்திணைப் பலர்பாற் படர்க்கை, உடன்பாட்டுத் தெரிநிலைச் செய்வினையாய் நிற்கின்ற, தன்வினைப் பெயரெச்சம்; தொகாநிலைத் தொடராய், அறிவினர் என்னும் பெயரைக்கொண்டு முடிகின்றது.

["ஆயும் அறிவினர்" என்பதில், சந்தி இயல்பு; இவ்வெச்சம் காலத்தை உணர்த்தாது உரிமையை உணர்த்திற்று.]

அறிவினர் எ-து காரண ஆக்கச் சிறப்புப்பெயர்; உயர்திணைப் பலர்பாற் படர்க்கை; எழுவாய்த் தொகாநிலைத் தொடராய், சொல்லார் என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிகின்றது.

["அறிவினர் சொல்லார்" என்பதில், சந்தி இயல்பு.]

சொல்லார் எ-து செயப்படுபொருள் உள்ள, உயர்திணைப் பலர்பாற் படர்க்கை, எதிர்மறைத் தெரிநிலைச் செய்வினையாய் நிற்கின்ற, தன்வினை வினைமுற்று; தொகாநிலைத் தொடராய், அறிவினர் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாய் நிற்கின்றது.

பெருமை, [அருமை என்பதற்குச் சொல்லியதுபோற் சொல்லி, பயன் என்பதனோடு முடிக்க.]

["பெரும்பயன்" என்பதில், சந்தி விகாரம்.]

பயன் எ-து இடுகுறி மரபுக் குறிப்புப் பண்புச் சிறப்புப் பெயர்; அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை; எழுவாய்த் தொகாநிலைத் தொடராய், இல்லாத என்னும் வினையைக்கொண்டு முடிகின்றது.

["பயன் இல்லாத" என்பதில், சந்தி இயல்பு.]

இல்லாத எ-து செயப்படுபொருள் இல்லாத, அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை, எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சம்; தொகாநிலைத் தொடராய், சொல் என்னும் பெயரைக் கொண்டு முடிகின்றது.

["இல்லாத சொல்" என்பதில், சந்தி இயல்பு.]

சொல் எ-து ஆகுபெயராகிய காரண இடுகுறி மரபு இசைப்பண்புப் பொதுப்பெயர்; அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை; இரண்டாம் வேற்றுமை; நீக்கப்படு பொருளில் வந்த தொகைநிலைத் தொடராய், சொல்லார் என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிகின்றது.

ANALYSIS OF DERIVATIVE WORDS.

பகுபத முடிபு.

அ

அங்காத்தல் = அங்கா (பகுதி) + த் (சந்தி) + தல் (விகுதி).

அழுக்கறுப்பான் = அழுக்காறு (பகுதி) + ப் (சந்தி) + ப் (எதிர்கால இடைநிலை) + ஆன் (ஆண்பால் விகுதி).

[ஆகாரம் அகரமானது குறுக்கல் விகாரம்.]

அற்றம் [இல்லாமை] = அறு (பகுதி) + அம் (தொழிற்பெயர் விகுதி).

[தன்னொற்றிரட்டல் விரித்தல் விகாரம்; உகரங்கெட்டது சந்தி.]

அற்று [அத்தன்மைத்து] = அன் (பகுதி, இடைச்சொல்) + று (குறிப்பு வினைமுற்று விகுதி).

[னகரம் றகரமானது சந்தி.]

அனையர் = அனை (பகுதி, இடைச்சொல்) + ய் (சந்தி) + அர் (பலர்பால் விகுதி).

அன்று = அல் (பகுதி, பண்பு) + று (குறிப்பு வினைமுற்று விகுதி).

[லகரம் னகரமானது சந்தி; அன்று என்பது குறிப்பு வினைமுற்று.]

அன்ன = அன் (பகுதி, இடைச்சொல்) + ன் (சந்தி) + அ (அன்ன என்பது முற்றெனின், பலவின்பால் விகுதி; பெயரெச்சமெனின், பெயரெச்ச விகுதி).

ஆ

ஆர்த்த [கட்டின] = யா (பகுதி) + த் (சந்தி) + த் (இறந்தகால இடைநிலை) + அ (பெயரெச்ச விகுதி; அல்லது, முற்றுவிகுதி).

[யா ஆகாரமானது மரூஉ.]

ஆய = ஆ (பகுதி) + ய் (இறந்தகால இடைநிலை) + அ (ஆய என்பது பெயரெச்சமெனின், பெயரெச்ச விகுதி; முற்றெனின், முற்று விகுதி).

ஆய் [ஆராய] = ஆய் (பகுதி) + அ (வினையெச்ச விகுதி).

ஆற்ற = ஆற்று (பகுதி) + இன் (இறந்தகால இடைநிலை, தொகுத்தல் விகாரம் பெற்றது) + அ (பெயரெச்ச விகுதி).

[உகரக்கேடு சந்தி.]

ஆற்ற [செய்ய] = ஆற்று (பகுதி) + அ (வினையெச்ச விகுதி).

[உகரக்கேடு சந்தி.]

ஆன்றோர் [அறிவுடையோர்] = அகல் (பகுதி) + ற் (இறந்தகால இடைநிலை) + ஆர் (பலர்பால் விகுதி).

[அகல் என்பது ஆல் என மருவியது; லகரம் றகரமானது சந்தி; றவ்வானது னவ் வாய்த் திரிந்தது மெலித்தல் விகாரம்.]

☞ அகலக்கரண்டி என்பது ஆலக்கரண்டி என, இது வழக்கத்திலும் இருக்கின்றது.

இ

இல = இல் (பகுதி, பண்படியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று) + அ (பலவின்பால் விகுதி).

இளவல் [இளையவன்] = இளமை (பகுதி, பண்பு) + வ் (சந்தி, தோன்றினது) + அல் (பண்புப்பெயர் விகுதி).

[இளமை என்பதில் மை கெட்டது; இளவல் என்பது ஆகுபெயர்.]

இவறன்மை = இவறு (பகுதி) + அல் (தொழிற்பெயர் விகுதி) + மை (விகுதிமேல் விகுதி).

[உகரக்கேடு சந்தி; அனைத்தும் ஓர் பகுதியாய் இவறல் என நின்று, அதனுடன் மை விகுதி சேர்ந்தது; லகரம் னகரமானது சந்தி.]

இவறியான் = இவறு (பகுதி) + இன் (இறந்தகால இடைநிலை) + ய் (சந்தி) + ஆன் (ஆண்பால் விகுதி).

[இடைநிலை னகரக்கேடு கடைக்குறை விகாரம்.]

இன்னாத = இன்னா (பகுதி, பண்பு) + த் (எழுத்துப்பேறு, விகாரம்) + அ (விகுதி).

உ

உக்க = உகு (பகுதி) + க் (விகாரம்) + அ (பெயரெச்ச விகுதி).

[பகுதியின் ஒற்று இரட்டியதே காலங் காட்டியது.]

உணர்த்துகிற்றும் = உணர்த்து (பகுதி) + கில் (ஆற்றலுணர்த்தும் விகுதி) + றும் (தன்மைப் பன்மை எதிர்கால விகுதி).

[அனைத்துமோர் பகுதியாய், உணர்த்துகில் என நின்று, றும் விகுதியோடு சேர்ந்தது; லகரம் றகரமானது சந்தி.]

உண்ணிய = உண் (பகுதி) + ண் (சந்தி) + இய (எதிர்கால வினையெச்ச விகுதி).

[இதை வியங்கோள் விகுதியாகக்கொண்டு, அவ்வினை எனினும் அமையும்.]

எ

எச்சம் = எஞ்சு (பகுதி) + அம் (தொழிற்பெயர் விகுதி).

[ஞகரம் சகரமானது வலித்தல் விகாரம்; உகரக்கேடு சந்தி; எச்சம் = சந்ததி, குறைச்சொல்; இது தொழில் ஆகுபெயர்; இப்படி அன்றி, அம் என்பதை வினைமுதற்பொருள் விகுதியெனக்கொண்டு, இதைத் தொழிலடியாகப் பிறந்த பெயர் என்பதும் பொருந்தும்.]

எற்று [எத்தன்மையது] = என் (பகுதி, இடைச்சொல்) + று (குறிப்பு வினைமுற்று விகுதி).

[னகரம் றகரமானது விகாரம்.]

எனைத்து = எனை (பகுதி) + த் (சந்தி) + து (குறிப்பு வினைமுற்று விகுதி).

என்றல் = என் (பகுதி) + தல் (தொழிற்பெயர் விகுதி).

[தகரத்திரிபு சந்தி.]

என்று [சூரியன்] = எல் (பகுதி, இடைச்சொல்*) + று (ஒன்றன்பால் விகுதி).

[லகரம் றகரமானது சந்தி; றகரம் னகரமானது மெலித்தல் விகாரம்.]

*தொல்காப்பியத்தில் உள்ள “எல்லே விளக்கம்” என்னும் சூத்திரத்தினால், எல் என்பதை இடைச்சொல் என்னலாயிற்று.

ஏ

ஏமாந்தேம் = ஏமா (பகுதி) + த் (சந்தி) + த் (இறந்தகால இடைநிலை) + ஏம் (தன்மைப் பன்மை விகுதி).

[ஏமாத்தல் = ஏமம் + யாத்தல்; தகரம் நகரமானது விகாரம்.]

ஏற்றான் = ஏல் (பகுதி) + ற் (இறந்தகால இடைநிலை) + ஆன் (ஆண்பால் விகுதி).

[லகரம் றகரமானது சந்தி]

ஒ

ஒட்பம் = ஒள் (பகுதி) + பம் (பண்புப்பெயர் விகுதி).

[ளகரம் டகரமானது சந்தி.]

ஒழுகலார் = ஒழுகு (பகுதி) + அல் (எதிர்மறை விகுதி) + ஆர் (பலர்பால் விகுதி).

[உகரங்கெட்டது சந்தி.]

ஒற்கம் [தளர்ச்சி] = ஒல்கு (பகுதி) + அம் (தொழிற்பெயர் விகுதி).

[லகரம் றகரமாய், உகரங்கெட்டது சந்தி.]

ஒன்னலர் = ஒன்று (=பொருந்து, பகுதி) + அல் (எதிர் மறை விகுதி) + அர் (பலர்பால் விகுதி).

[ஒன்றல் என, அனைத்துமோர் பகுதியாய் நின்று, அர் விகுதியைச் சேர்ந்தது; று கெட்டது கடைக்குறை விகாரம்; னகரம் சந்தி.]

க

கடவுள் = கட (பகுதி) + வ் (சந்தி) + உள் (தொழிற்பெயர் விகுதி).

[கடவுள் = எல்லாவற்றையுங் கடந்த மேலாயிருப்பவர்; இது தொழிலாகுபெயர்.]

கவற்ற = கவற்று (பகுதி) + அ (நிகழ் காலவினையெச்ச விகுதி).

[உகரக்கேடு சந்தி.]

கழிந்தன்று = கழி (பகுதி) + த் (சந்தி) + த் (இறந்தகால இடைநிலை) + அன் (சாரியை) + று (ஒன்றன்பால் விகுதி).

[தகரம் நகரமானது மெலித்தல் விகாரம்.]

கனன்று = கனல் (பகுதி) + ற் (இறந்தகாலஇடைநிலை) + உ (இறந்தகால வினையெச்ச விகுதி).

[லகரம் றகரமானது சந்தி; றகரம் னகரமானது மெலித்தல் விகாரம்.]

கா

காமுற்று = காமம் + உற்று.

[அம் கெட்டது கடைக்குறை.]

காமுற்று = காமுறு (பகுதி) + உ (இறந்தகால வினையெச்ச விகுதி).

[பகுதியின் ஒற்று இரட்டல் விரித்தல் விகாரம்; அதன் உகரக்கேடு சந்தி; இரட்டியதே இறந்தகாலங் காட்டியது.]

கு

குற்றி = குறு (பகுதி, பண்பு) + இ (ஒன்றன்பால் விகுதி).

[தன்னொற்று இரட்டியது விரித்தல் விகாரம்; உகரக்கேடு சந்தி.]

கே

கேண்மை = கேள் (பகுதி, பண்பு) + மை (பண்புப்பெயர் விகுதி).

[ளகரம் ணகரமானது சந்தி.]

கேளார் [பகைவர்] = கேள் (பகுதி) + ஆ (எதிர்மறை விகுதி) + ஆர் (பலர்பால் விகுதி).

[கேளா என அனைத்துமோர் பகுதியாய் நின்று, ஆர் என்னும் விகுதியை அடுத்தது; விகுதி ஆகாரக்கேடு முதற்குறை விகாரம்.]

கேளிர் = கேள் (பகுதி) + இர் (பலர்பால் விகுதி).

கொ

கொணர்ந்தான் = கொணா (பகுதி) + ர் (விரித்தல் விகாரம்) + த் (சந்தி) + த் (இடைநிலை) + ஆன் (ஆண்பால் விகுதி).

[ஆகாரம் அகரமானது குறுக்கல்விகாரம்; தகரம் நகரமானது சந்தி.]

கொழுநர் = கொழு (பகுதி, பண்பு) + ந் (இடைநிலை) + அர் (பலர்பால் விகுதி).

கோ

கோடும் = கொள் (பகுதி) + தும் (எதிர்கால விகுதி).

[ஒகரம் ஓகாரமானது நீட்டல் விகாரம்; ளகரக்கேடுந் தகரத்திரிபுஞ் சந்தி.]

கோட்டம் = கோடு (பகுதி) + அம் (தொழிற்பெயர்விகுதி).

[டகரம் தோன்றியது விரித்தல் விகாரம்; உகரக்கேடு சந்தி]

கோட்டினான் = கோட்டு (பகுதி) + இன் (இறந்தகால இடைநிலை + ஆன் (ஆண்பால் விகுதி).

[உகரங்கெட்டது சந்தி.]

சா

சாம்பின [சாம்பராயின] = சாம்பு (பகுதி) + இன் (இறந்த கால இடைநிலை) + அ (பலவின்பால் விகுதி; அல்லது, பெய ரெச்ச விகுதி).

[உகரக்கேடு சந்தி.]

சான்று [சாட்சி] = சால் (பகுதி) + று (ஒன்றன்பால் விகுதி).

[லகரம் றகரமானது சந்தி; றகரம் னகரமானது மெலித்தல் விகாரம்.]

சி

சினந்தான் = சின (பகுதி) + த் (சந்தி) + த் (இறந்தகால இடைநிலை) + ஆன் (ஆண்பால் விகுதி).

[தகரம் நகரமானது மெலித்தல் விகாரம்; சினம் என்னும் பெயரடியாகப் பிறந்தது.]

சூ

சூன்றிட்டது = சூல் (பகுதி) + து (சாரியை) + இடு (துணிவுப்பொருள்விகுதி) + ட் (விகாரம்) + அ (சாரியை) + து (ஒன்றன்பால் விகுதி).

[பகுதியின் லகரம் றகரமானது சந்தி; றகரம் னகரமானது விகாரம்; துவ்வில் தகரம் றகரமானது சந்தி; இடு விகுதி சேர்ந்து, அனைத்துமோர்பகுதியாய்நின்று, பின் மற் றும் சாரியை முதலியவற்றை ஏற்றது.]

சே

செம்மல் = செம் (பகுதி, பண்பு) + ம் (சந்தி) + அல் (பண்புப்பெயர் விகுதி).

[செம்மல் = புத்திரன்; இது பண்பாகுபெயர்.]

செய்துகொண்டான் = செய் (பகுதி) + து (சாரியை) கொள் (தற்செயற்பொருள்விகுதி) + ட் (இறந்தகால இடை நிலை) + ஆன் (ஆண்பால் விகுதி).

[செய்துகொள் என அனைத்துமோர் பகுதியாய் நின்று, இடைநிலை முதலியன பெற் றமுடிந்தது; ளகரம் டகரமானது சந்தி; டகரம் ணகரமானது மெலித்தல் விகாரம்.]

செவ்விய = செம்மை (பகுதி, பண்பு) + இ (விரித்தல்) + ய் (சந்தி) + அ (பெயரெச்ச விகுதி; அல்லது, பலவின்பால் விகுதி).

[செம்மை என்பதின் மை கெடுதலும், மகரம் வகரமாதலும், வகரந் தோன்றலும், சந்தி.]

செற்றார் = செறு (பகுதி) + ஆர் (விகுதி).

[றகரம் விரித்தல் விகாரம்; அவ்விரட்டலே காலங்காட்டியது; உகரக்கேடு சந்தி.]

சோ

சோகாப்பர் = சோகம் + யாப்பர்.

[அம் கெட்டது கடைக்குறை.]

சோகாப்பர் = சோகா (பகுதி) + ப் (சந்தி) + ப் (இடைநிலை) + அர் (விகுதி).

சோர்தர = சோர்தா (பகுதி) + அ (விகுதி).

[ஆகாரம் அவ்வானது குறுக்கல் விகாரம்; ரு விரித்தல் விகாரம்; உகரக்கேடு சந்தி.]

☞ குழ்தர, அயர்தர, செய்தர, போதர, முதலியவற்றையும் முடிக்கும்விதம் இவ்வாறே ஆம்.

த

தந்தை = தாம் (பகுதி) + தை (பெயர் விகுதி).

[தாகாரத்திலுள்ள ஆ அகரமானது குறுக்கல் விகாரம்; மகரம் நகரமானது சந்தி.]

தமது = தாம் (பகுதி) + அ (சாரியை) + து (ஒன்றன்பாற் குறிப்பு வினைமுற்று விகுதி; அல்லது, அப்பெயர் விகுதி).

[தா தவ்வானது குறுக்கல் விகாரம்.]

தருகின்ற = தா (பகுதி; தா தவ்வானது குறுக்கல் விகாரம்) + ரு (விரித்தல் விகாரம்) + கின்று (நிகழ்கால இடைநிலை) + அ (பெயரெச்ச விகுதி; அல்லது, பலவின்பால் விகுதி).

தழைப்ப (அஃறிணைப் பன்மை வினைமுற்றெனின்) = தழை (பகுதி) + ப் (சந்தி) + ப் (எதிர்கால இடைநிலை) + அ (பலவின்பால் வினைமுற்று விகுதி).

தழைப்ப (உயர்திணைப் பன்மை வினைமுற்றெனின்) = தழை (பகுதி) + ப் (சந்தி) + ப (பலர்பால் வினைமுற்று விகுதி).

தழைப்ப (செயவெனெச்சமெனின்) = தழை (பகுதி) + ப் (சந்தி) + ப் (விரித்தல்) + அ (நிகழ்கால வினை எச்ச விகுதி).

து

துப்பார் = து (= உண், பகுதி) + ப் (சந்தி) + ப் (எதிர்கால இடைநிலை) + ஆர் (பலர்பால் விகுதி).

துரப்பன = துர (பகுதி) + ப் (சந்தி) + ப் (எதிர்கால இடைநிலை) + அன் (சாரியை) + அ (பலவின்பால்வினைமுற்றுவிகுதி).

துன்னற்க = துன் (பகுதி) + ன் (சந்தி) + அல் (எதிர்மறை விகுதி) + க (வியங்கோள் விகுதி).

[துன்னல் என அனைத்துமோர் பகுதியாய் நின்று, கவ் விகுதியைப்பெற்றது.]

துன்னியார் = துன் (பகுதி) + ன் (சந்தி) + இன் (இறந்த காலவிடைநிலை) + ய் (சந்தி) + ஆர் (பலர்பால் விகுதி).

[இன் என்பதிலுள்ள னகரங் கெட்டது கடைக்குறை.]

தூ

தூகின்றார் = தூ (பகுதி) + கின்று (நிகழ்கால இடைநிலை) + ஆர் (பலர்பால் விகுதி).

[உகரக்கேடு சந்தி.]

தோ

தோற்றம் = தோன்று (பகுதி) + அம் (தொழிற் பெயர் விகுதி).

[உகரக்கேடு சந்தி; னகரம் றகரமானது வலித்தல் விகாரம்; தோற்றம் என்பது ஒரு பொருளை உணர்த்தினால், ஆகுபெயராம்.]

தோன்றல் [அரசன், புத்திரன்] = தோன்று (பகுதி) + அல் (தொழிற்பெயர் விகுதி).

[உகரம் சந்தியாற் கெட்டது; இது தொழிலாகுபெயர்.]

தோன்றியக்கால் = தோன்று (பகுதி) + இன் (சாரியை) ய் (சந்தி) + அ (சாரியை) + க் (சந்தி) + கால் (எதிர்கால வினையெச்ச விகுதி).

[சாரியை னகரக்கேடு கடைக்குறை.]

☞ இதில், தகரத்தோற்றம் தோன்றின என்பது பெயரெச்சமன்றென்பதை விளக்குகின்றது.

ந

நடை + நட (பகுதி) + ஐ (தொழிற்பெயர் விகுதி).

[நட என்பதில், ஈற்றகரக் கேடு கடைக்குறை.]

நடையன் = நடை (பகுதி) + ய் (சந்தி) + அன் (ஆண்பால் விகுதி).

நட்பு = நள் (பகுதி) + பு (தொழிற்பெயர் விகுதி).

[ளகரம் டகரமானது சந்தி.]

நண்பு = நண் (பகுதி, பண்பு) + பு (பண்புப்பெயர் விகுதி).

நண்ணினர் = நண் (பகுதி) + ண் (சந்தி) + இன் (இறந்த கால இடைநிலை) + அர் (பலர்பால் விகுதி).

[இதைப் பண்படியாகப் பிறந்த பெயராகக் கொள்ளின், இன் சாரியை ஆம்.]

நள்ளார் = நள் (பகுதி) + ஆ (எதிர்மறைவிகுதி; நள்ளா என அனைத்தும் ஓர் பகுதி) + ஆர் (பலர்பால் விகுதி).

[ஆர் விகுதியின் ஆகாரங்கெட்டது முதற்குறை.]

நீ

நீண்டகடைத்து = நீள் (பகுதி) + து (சாரியை) + அ (சாரியை) + க் (சந்தி) + கடை (எதிர்கால வினையெச்ச விகுதி) + த் (சந்தி) + து (பகுதிப் பொருள் விகுதி).

[நீட்ட என, ளவ்வுந் தவ்வுந் திரிதலும், உகரங்கெடுதலும் சந்தி; டகரம் ணகரமானது மெலித்தல் விகாரம்.]

☞ நீண்ட என்பது பெயரெச்ச மன்றென்று, ககரத் தோற்றத்தினால் விளங்குகின்றது.

நீத்தனள் = நீ (பகுதி) + த் (சந்தி) + த் (இறந்தகால இடைநிலை) + அன் (சாரியை) + அள் (பெண்பால் விகுதி).

நு

நுட்பம் = நு ண் (பகுதி, பண்பு) + பம் (பண்புப்பெயர் விகுதி).

[ணகரம் டகரமானது சந்தி.]

நோ

நோற்றார் = நோல் (பகுதி) + ற் (இறந்தகால இடைநிலை) ஆர் (பலர்பால் விகுதி).

[லகரம் சந்தியால் றகரமானது.]

ப

பயக்கும் = பய (பகுதி) + க் (சந்தி) + கு (சாரியை + உம் பெயரெச்ச விகுதி; அல்லது, வினைமுற்று விகுதி).

[உகரங் கெட்டது சந்தி; பய என்பது பயம் என்னும் பெயரடியாகப் பிறந்தது.]

பயந்தான் = பய (பகுதி) + த் (சந்தி) + த் (இறந்தகால இடைநிலை) + ஆன் (ஆண்பால் விகுதி).

[தகரம் நகரமானது மெலித்தல் விகாரம்.]

பல்லவர் = பன்மை (பகுதி, பண்பு; மை கெட்டது சந்தி) + ல் (சந்தி) + அ (சாரியை) + வ் (சந்தி) + அர் (பலர் பால் விகுதி).

பா

பாத்து = பகு (பகுதி; பா என மருவியது) + த் (சந்தி) = த் (இறந்தகால இடைநிலை) + உ (வினையெச்ச விகுதி).

[இதுபோல, பகுதி என்பது பாதி என மருவி வழங்குகின்றது.]

பாலமை = பால் (பகுதி) + அ (சாரியை) + மை (பகுதிப் பொருள் விகுதி).

[அகரச்சாரியை இன்றி, பான்மை எனவே சாதாரணமாய் வரும்.]

பி

பிறன் = பிற (பகுதி, இடைச்சொல்) + அன் (ஆண்பால் விகுதி).

[பிற என்பதின் ஈற்றகரமொழிந்தது கடைக்குறை; இப்படி அன்றி, விகுதி னகரம் எனினும் அமையும்.]

பிறிது = பிற (பகுதி, இடைச்சொல்) + இ (விரித்தல்) + து (ஒன்றன்பால் விகுதி).

[பிற என்பதில் ஈற்று அகரக்கேடு கடைக்குறை.]

பொ

பொருது = பொரு (பகுதி) + த் (இறந்த கால இடைநிலை) + உ (வினையெச்ச விகுதி).

பொறுத்தான் = பொறு (பகுதி) + த் (சந்தி) + த் (இறந்தகால இடைநிலை) + ஆன் (ஆண்பால் விகுதி).

போ

போந்தது = புகு (பகுதி; இது போ என மருவியது) + த் (சந்தி) + த் (இறந்தகால இடைநிலை) + அ (சாரியை) + து (ஒன்றன் பால் விகுதி).

[தகரம் நகரமானது சந்தி.]

போன்றன = போல் (பகுதி, இடைச்சொல்) + ற் (இறந்தகால இடைநிலை) + அன் (சாரியை) + அ (பலவின்பால் விகுதி).

[லகரம் றகரமானது சந்தி; றகரம் னகரமானது மெலித்தல் விகாரம்.]

மா

மாட்சிமை = மாண் (பகுதி, பண்பு) + சி (பண்புப்பெயர் விகுதி) + மை (விகுதிமேல் விகுதி).

மாண்டார் [மாட்சிமைப்பட்டார்] = மாண் (பகுதி, பண்பு) + ட் (இறந்தகால இடைநிலை) ஆர் (பலர்பால் விகுதி.)

மாண்டார் [இறந்தார்] = மாள் (பகுதி) + ட் (இறந்தகால இடைநிலை) + ஆர் (பலர்பால் விகுதி).

[ளகரம் டகரமானது சந்தி; டகரம் ணகரமானது மெலித்தல் விகாரம்]

மு

முதற்று = முதல் (பகுதி) + று (ஒன்றன் பாற் குறிப்புவினை முற்று விகுதி; அல்லது, அப்பெயர் விகுதி).

[லகரம் றகரமானது சந்தி.]

மோ

மோப்ப = முகர் (பகுதி; இது மோ என மருவியது) + ப் (சந்தி) + ப் (விரித்தல் விகாரம்) + அ (நிகழ்கால வினையெச்ச விகுதி; அல்லது, பலவின்பால் விகுதி).

[மொப்ப என்பதை உயர்திணைப் பன்மை வினைமுற்றாகக் கொள்ளின், பகர விகுதியாம்.]

வ

வளமை = வள் (பகுதி, பண்பு) + அ (சாரியை) + மை (பண்புப் பெயர் விகுதி).

[அகரச்சாரியை இல்லாத இடத்தில், வள் + மை = வண்மை.]

வள்ளன்மை = வள் (பகுதி, பண்பு) + ள் (சந்தி) + அல் (பண்புப்பெயர் விகுதி) + மை (பண்புப்பெயர் விகுதி).

[லகரம் னகரமானது சந்தி; வள்ளல் என்பது கொடையாளனுக்கு ஆகுபெயராய், மை விகுதியோடு சேர்ந்து, அவன் தன்மையை உணர்த்திற்று.]

வறந்தக்கால் = வற (பகுதி) + த் (சந்தி) + து (சாரியை) + அ (சாரியை) + க் (சந்தி) + கால் (எதிர்கால வினையெச்ச விகுதி).

[சாரியை உகரக்கேடு சந்தி; தகரம் நகரமானது மெலித்தல் விகாரம்.]

வா

வாழியர் = வாழ் (பகுதி) + இயர் (எதிர்கால வினையெச்ச விகுதி).

[இது "செய்யியர்" என்னும் வியங்கோளுக்கும் பொருந்தும்.]

வி

விடுபாக்கு = விடு (பகுதி) + பாக்கு (எதிர்காலவினையெச்ச விகுதி).

☞ பாக்கு என்னும் விகுதி, தொழிற்பெயர்ப்பொருளிலும் வரும்; இதைப்பற்றி 143-ம் சூத்திரத்தினுரையிற்காண்க.

வித்தகன் = வித்தகம் (பகுதி; அம் கெட்டது கடைக் குறை) + அன் (ஆண்பால் விகுதி).

விளக்கம் = விளங்கு (பகுதி) + அம் (தொழிற்பெயர் விகுதி).

[ஙகரம் ககரமானது வலித்தல் விகாரம்; உ கெட்டது சந்தி; பொருளை உணர்த்திலுல், ஆகுபெயர் ஆம்.]

விழுமியார் + விழுமு (பகுதி) + இ (விரித்தல் விகாரம்) + ய் (சந்தி) + ஆர் (பலர் பால் விகுதி).

[விழுமு என்பதில், உகரக்கேடு சந்தி.]

வீ

வீழ்த்தென = வீழ்த்து (பகுதி, பிறவினை) + என (இறந்தகால வினையெச்ச விகுதி).

[சந்தியால், வீழ்த்து என்பதிலுள்ள உகரங்கெட்டது; இது நன்னூலார் மதம்; சிலர் வீழ்த்தால் என என்று இரண்டு சொல்லாக்கி, ஆல் தொகுத்தல் என்பர்.]

வெ

வெற்றி = வெல் (பகுதி) + தி (தொழிற் பெயர் விகுதி).

[வெல் என்பதன் லகரமும் தகரமும் றகரமானது சந்தி.]

வென்றி = வெல் (பகுதி) + தி (தொழிற் பெயர் விகுதி).

[லகரமும் தகரமும் றகரமானது சந்தி; வெற்றி என நின்று, பகுதி றகரம் னகர மானது மெலித்தல் விகாரம்.]

வே

வேட்கும் = வேள் (பகுதி) + கு (சாரியை) + உம் (பெயரெச்ச விகுதி; அல்லது, வினைமுற்று விகுதி).

[ளகரம் டகரமானதும், உகரங்கெட்டதும், சந்தி.]

வேட்டான் = வேள் (பகுதி) + ட் (இறந்தகால இடைநிலை) + ஆன் (ஆண்பால் விகுதி).

[சந்தியால், ளகரம் டகரமானது.]

வேண்டா = வேண்டு (பகுதி) + ஆ (பலவின்பால் எதிர்மறை விகுதி).

[வேண்டு என்பதில், உகரக்கேடு சந்தி.]

☞ வேண்டா என்பது தற்கால வழக்கத்தில், வேண்டாம் என மருவி, இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாய் வழங்குகின்றது.

வேறல் [வெற்றி] = வெல் (பகுதி) + தல் (தொழிற் பெயர் விகுதி).

[பகுதி எ ஏவானது நீட்டல் விகாரம்; லகரக்கேடும், தகரம் றகரமாகத் திரிதலும், சந்தி.]

நன்னூற் சுருக்க அநுபந்தம்
முற்றிற்று.

INDEX TO SUTRAMS.

சூத்திரவகராதி.

	பக்கம்.	சூ.
அ		
அ ஆ உ ஊ....	10	25
அ ஆ எ ஒவ்	10	26
அ ஆ ஈற்ற.	78	131
அ இ உம்	2	7
அ ஐ முதல்	12	29
அசைநிலை	113	196
அண்மையின்	73	119
அதுவே, இயற்	57	94
அத்தின்	50	83
அந்தில்	95	162
அம் ஆம்	80	134
அம்ம உரை	95	163
அம்முதல்	2	4
அர் ஆர்	78	129
அவற்றுள், அ இ	2	5
அவற்றுள், எழு	67	110
அவற்றுள், முதலில்..	86	144
அள் ஆள் இறு	77	128
அறிவறி	111	192
அன் ஆன் அள்	17	38
அன் ஆன் இறு	77	127
அன் ஆன் இன்	47	77
ஆ		
ஆ ஈ ஊ ஏ	2	6
ஆக்கவினை	87	147
ஆண்பெண்	54	89
ஆநின்று	20	41
ஆவிஞண	10	27
ஆவியரழ	28	53
ஆறன் உருபும்	67	108
ஆறன் ஒருமைக்	71	115
இ		
இ ஈ ஐவழி	28	54
இசை கெடின்	5	14
இடுகுறிகாரண	60	99
இடை இனம்	4	11
இடை உரி	42	73
இடைத்தொடர்	34	61
இதற்கிதுசாரியை	51	84
இயல்பினும்	31	57
இயல்பின்	51	85
இயல்பெழு	9	22
இரண்டாவதன்	68	111
இரண்டு முதலா	101	174
இர் ஈர் இற்ற	81	137
இலக்கண	55	92
இலக்கியம்	19	39
இனைத்தென்	115	199
ஈ		
ஈறுபோதல்	15	36
ஈற்றியாவினா	28	52
உ		
உ ஊ ஒ ஓ	10	24
உடல் மேல்	36	64
உயர்திணை உம்	105	181

	பக்கம்.	சூ.
உயர்திணை தொ	108	186
உயிரும்	1	2
உயிர்மெய்	2	3
உயிர்வரின்	31	56
உருபுபல	98	168
உருபுமுற்றீ	99	169
உவப்பினும்	109	188
உவம உருபில	103	177

எ

எகரவினு	30	55
எட்டன் உருபே	73	118
எண்ணல்	104	179
எண்மூ	26	50
எதிர்மறை	92	156
எப்பொருள்	113	194
எயாமுதலும்	3	8
எல்லாம்	47	78
எல்லாரும்	48	79
எல்லை இன்னும்	75	123
எவன் என்	88	150
எழுத்தே	13	31
என்றும்	93	158

ஏ

ஏழன் உருபு	72	116
ஏற்கும்	66	106

ஐ

ஐ ஆய்	81	136
ஐஔ இ	4	12
ஐகான்	12	30
ஐந்தாவதன்	70	114
ஐந்தொகை	104	180
ஐயந்திணை	107	185

ஒ

ஒருபுணர்க்	26	49
ஒரு பொருள் குறித்த	58	96
ஒருபொருள்மேற்	113	195
ஒருபொருட்பல்பெ..	114	197
ஒருபொருட் பன்மொ	114	198

	பக்கம்.	சூ.
ஒருமையிற்	110	189
ஒருமொழி ஒரு	53	87
ஒருமொழி ஒழி	99	170
ஒருமொழி தொடர் ..	53	86
ஒருமொழி மூவழிக்..	25	48
ஒருவர்	64	104
ஒருவன் ஒருத்தி......	63	103
ஒழிஇசை	91	154
ஒற்றுயிர்	45	75
ஒன்றேபல	55	90
ஒன்றொழி	56	93

க

கண்கால்	73	117
கயவொடு	82	138

கா

காலம்கரந்த	102	175

கு

குடுதூறு	79	133
குறியதன்	4	13
குறில்அணை	37	67
குறில்செறி	40	71

கொ

கொல்லே	95	161

ங

ஙஞண	6	15

சா

சாலஉறு	97	166

சி

சினைவினை	86	145

சு

சுட்டின்முன்	50	82
சுட்டுமறை	112	193

செ

செந்தமிழ் ஆகி......	58	95
செந்தமிழ் நிலம்	59	97

	பக்கம்.	சூ.
செயப்படு	115	200
செய் என்	16	37
செய்த	83	140
செய்து	85	143
செய்பவன்	76	124
செய்யிய	32	58
செய்யும்	84	141
சொ		
சொற்றிரியினும்	87	146
ஞ		
ஞணமுன்	8	19
ஞணவல்	37	66
த		
தடறஒற்றின்	19	40
தத்தம்	15	35
தற்சுட்	7	18
தனிக்குறில்	36	65
தன்மை முன்னிலைபட	55	91
தன்மை முன்னிலைவிய	79	132
தன்மையான்	63	101
தா		
தான் தாம்	48	80
தான் யான்	63	102
தி		
திணைபால்	109	187
திணையே	107	184
து		
துறுடுக்	78	130
தொ		
தொக்குழி	105	182
தொழிலும்	85	142
தோ		
தோன்றல்	24	46
நா		
நான்காவதன்	69	113
நீ		
நீயிர் நீவிர்	67	109
நு		
நுவ்வொடு	74	120
நெ		
நெடிலோடுயிர்த்	34	62
நெடிலோடாய்தம் ..	6	16
ப		
பகுதிவிகுதி	14	34
பகுப்பால்	13	32
பண்பை	102	176
பதம்முன்	46	76
பல்லோர்	87	148
பல்வகைப்	97	165
பல்வா மூவிடத்	20	42
பன்னீருயிரும்	9	23
பா		
பால்பகா	62	100
பி		
பிரிநிலை வினா	90	153
பெ		
பெயரோ ஐ ஆல்	66	107
பெயரொடு	101	172
பெயர்ச்செவ்	93	157
பெயர்வழித்	45	74
பெயர்வினையிட	98	167
பெயர்வினை உம்......	100	171
பொ		
பொது இயல்........	77	126
பொது எழுத்........	60	98
பொதுப்பெயர்	27	51
பொருள் இடம் ...	14	33
பொருள் முதல் ஆறி	76	125
பொருள் முதல் ஆறோ	64	105

	பக்கம்.	சூ.
போ		
போலப்புணைய	103	178
ம		
மகர இறுதி	11	28
மக்கள் தேவர்	54	88
மவ்வீறொற்றழிந்	38	68
மன்னே	94	159
மு		
முக்காலத்தினும்	110	190
முதலை	74	121
முற்றீரெச்சம்	106	183
முன்னிலை	81	135
மூ		
மூன்றாவதன்	68	112
மூன்றாறுருபெண்	33	59
மூன்றுயிர்	8	21
மெ		
மெல்லினம்	4	10
மென்றொடர்	35	63
மொ		
மொழிமுதற்	1	1
ய		
யகரம் வரக்	7	17
யரழ முன்னர்க்	39	69
யா		
யாகாபிற	96	164
யாதன்	75	122
யார் என்	88	149
ல		
லளவீற்	8	20
லள வேற்றுமை	39	70
வ		
வலித்தல்	24	47
வல்லினம்	3	9
வவ்விறு	49	81
வன்றொடர்	34	60
வி		
விகாரம்	24	45
வினாவினும்	111	191
வினைபெயர்	92	155
வினை மாற்றசை	94	160
வினை முற்றே	89	151
வே		
வேறில்லை	83	139
வேற்றுமை ஐ	22	44
வேற்றுமை வினைசா	90	152
வேற்றுமை வினைபண்	101	173
ற		
றவ்வொடு	20	43
ன		
னலமுன்	41	72

முற்றும்.